# எதிர் கால இந்தியா



3593
T03593
R001I02
T
3593

சுவாமி சித்பவானந்தர்.

# எதிர்கால இந்தியா

இயற்றியவர்
சுவாமி சித்பவானந்தர்

தபோவனப் பிரசுராலயம்
திருப்பராய்த்துறை போஸ்ட், எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா
1956

தபோவனத் தொடர் 21

முதற் பதிப்பு 1953
இரண்டாம் பதிப்பு 1966

திருப்பராய்த்துறை தபோவனப் பிரசுராலயம்
மனேஜரால் பிரசுரிக்கப்பட்டது

உரிமை பிரசுரிப்பாளருடையது

தபோவன அச்சகம், திருப்பராய்த்துறை

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியாவின் இயல்பு | 1 |
| 2. | இந்தியா வீழ்ந்த விதம் | 16 |
| 3. | இந்தியா ஈடேறுவது எங்ஙனம் ? | 32 |
| 4. | உழைப்பவர் உயிர்வாழ்வர் | 49 |
| 5. | தலைவன் ஆவது தகைமையால் | 65 |
| 6. | வேலையில்லாத் திண்டாட்டம் | 82 |
| 7. | காப்பது விரதம் | 99 |
| 8. | மரணத்தின் மாண்பு | 131 |
| 9. | எதிர்கால இந்தியா | 148 |

# 1. இந்தியாவின் இயல்பு

## தற்பெருமையும் தற்போதமும்

தன்னைப்பற்றி வீண் பெருமை பாராட்டுவது பண்பும் பயிற்சியும் அடையாதவனுடையசெயலாகும். மேலோர் முன்னிலையில் அது அருவருப்புக்கு இடம் தரும். இனி, தன்னைத்தான் சிறுமைப் படுத்திக்கொள் வதும் பயனற்றது. எண்ணத்தின்படி வாழ்க்கை அமைகிறது. தன்னை அற்பனாக எண்ணுபவனுக்கு ஆற்றல் அதிகரிப்பதில்லை. தன்மீது நம்பிக்கை வைக் காதவனுக்கு அழிவுகாலம் வந்துவிட்டது எனலாம். வீண் பெருமை வளர்ச்சிக்கு இடந்தருவதில்லையென் றால் வீண் சிறுமை வாழ்க்கையை அடியோடு குலைத்து விடுகிறது. இக் கூற்று தனி மனிதனுக்குப் பொருந்து வதுபோன்று சமுதாயத்துக்கும் பொருந்துகிறது.

இந்தியாவில் இதுபோழ்து நாம் இரண்டுவிதமான கேடுகளைக் காணலாம். பழம் பெருமைகளைப்பற்றிப் பெருமிதமாகப் பேசுவது ஒன்று. அப்படிப் பேசுவ தால் இத்தேசத்தில் பிறந்ததன் பயனை அடைந்து விட்டதாகாது; தேசத்தின் தொண்டாகவும் அது கருதப்படமாட்டாது. இப்பொழுது முன்னேற்றம் அடைவதில் நாம் கருத்துடையவர்களாயிருக்கிறோம் என்பதற்கும் அது அத்தாட்சியாகாது. நாம் எக்கா லத்திலும் ஒன்றுக்கும் உதவாதவர்களாயிருந்தோம். இனிமேலும் அப்படியேயிருப்போம் என்று நம்மை

நாம் தாழ்மைப்படுத்துவது மற்ருெரு கேடு. இந்தியாவின் சிறுமையை எடுத்துக் காட்டுதலை ஒரு முக்கியமான வேலைத்திட்டமாகச் சில வெளிநாட்டார் வைத்துக் கொண்டிருக்கின்றனர்; அதற்கென்றே அவர்களால் பொருள் மிகச்செலவிடப் படுகிறது. புஸ்தகங்கள், சினிமாப்படங்கள், பத்திரிகைகள், வெளிநாட்டார் ஆதிக்கத்திலிருக்கும் பள்ளிக் கூடங்கள் ஆகியவைகளை உபகரணங்களாக வைத்துக் கொண்டு இப்பிரசார வேலை நடைபெறுகிறது. இதற்கு வசப்படுகிற இந்தியர்களிடத்தில் சுய நம்பிக்கையையாவது, இந்தியாவில் எதைப்பற்றியாவது பெருமை பாராட்டும் மனப்பான்மையையாவது காண முடியாது. வெளிநாட்டார் ஆதரவின்றி, இந்தியர் வாழவும் முன்னேற்றமடையவும் முடியாதென்று இவர்கள் கருதுகின்றனர். வெளிநாட்டார் கோருவதும் இதுதான். ஏனென்ருல், தன்னம்பிக்கையிழந்தவர்களை வசப்படுத்தி ஏதேனும் ஒரு துறையில் அடிமைகளாக வைத்திருப்பது எளிது. இந்தியர் தற்பெருமை கொள்ளுதற்காவது சிறிது ஆதாரம் இருக்கிறது; தங்களைத் தாழ்மைப்படுத்தும் எதிர்மறையான எண்ணங்களுக்கும் கொள்கைகளுக்கும் அவர்கள் சிறிதேனும் இடங்கொடுக்கலாகாது.

யாண்டும் தற்போதம் பெறுவது தேச மக்களின் கடமையாகும். தற்போதம் பெறுகின்ற ஒருவன் தனது ஆற்றலை மிகைப்படுத்துவதுமில்லை, மட்டுப் படுத்துவதுமில்லை. உள்ளதை உள்ளபடி ஓர்ந்து தான்

செய்யக்கிடக்கும் காரியத்தில் பிரவேசிக்கின்ருன். ஹனுமானுக்குத் தற்போதம் உண்டானது கவனிக்கத் தக்க சான்ருகும். காணமற்போன சீதாதேவியைத் தேடுதற்காக அவன் கடலைத்தாவி இலங்கைக்குப் போகவேண்டிய நெருக்கடி வாய்த்தது. ஆஞ்சனேயன் அலைகடலைத் தாவிக்குதித்தாலொழிய தாங்கள் தலை மேற்கொண்டிருந்த இராமகாரியம் சித்திபெருதென்று உடன்வந்தவர் திகைத்தனர். அம் மகாவீரனும் நிலைமைக்கேற்ற வலிவைப் பெறுவானுயினன். தன்மாட்டு மறைந்து கிடந்த பேராற்றலை ஞாபகப்படுத்திக்கொள்ளத்தொடங்கி — நான் வாயுகுமாரன், வாயுவேகம் எனக்குண்டு, சூரியனையே தாவிப்பிடித்த எனக்கு மனோவேகத்துடன் எங்கு வேண்டுமானுலும் செல்லும் வல்லமையுண்டு. நினைத்ததை நினைத்தபடி செய்வேன். ஆற்றல் என்பால் பொங்கி யெழுகிறது — இப்படி ஆர்வத்துடன் எண்ணியபொழுது ஆஞ்சனேயனுடைய உடலில் ஒவ்வொரு அணுவும் புதிய வலிவு பெற்றது. முகத்தில் ஊக்கம் ததும்பியது. தாவுதற்கு மலையை ஊன்றி மிதித்த வேகத்தால் மலையும் தவிடுபொடியாயிற்று. இலங்கை மட்டுமல்ல, அதற்கப்பால் வேண்டுமானுலும் செல்லும் வலிவு அவனுக்கு உள்ளிருந்து உதித்தது. தற்போதம் என்பது அதுவே. இந்தியாவைப்பற்றிய உண்மையை அறியும் இந்தியருக்குத் தற்போதம் உண்டாகும். உடனே அது செயலாக வடிவெடுக்கும். அதன் பலனுக நாட்டில் புதியதொரு சக்தி பிறக்கும். பனிகாலத்தில் பட்டுப்போனது

போன்று நிற்கும் மரம் தளிர்காலத்தில் புதிதாகத் தழைப்பதுபோன்று, தேசம் தன் பேரியல்பைத் திரும்பவும் விளக்கிக்காட்டும். இலையெல்லாம் உதிர்ந்து மொட்டையாக நிற்கும்போதுமட்டும் மரத்தைப்புதிதாகப் பார்க்கின்ற ஒருவனுக்கு அதன் பண்பையும் பயனையும்பற்றி ஒன்றும் தெரியாது. இதே உண்மை ஒரு தேசத்துக்கும் பொருந்துகிறது. இந்திய மக்கள் தங்கள் தாய்நாட்டின் முக்கால நிலையையும் உள்ளபடி ஓர்தலே தற்போதத்தைப் பெறுதற்கு உற்ற உபாயமாகும்.

**நாட்டின் மகிமை**

ஆடம்பரமான வாழ்க்கைக்கு மேலான ஸ்தானம் கொடுத்திருப்பதை இந்தியாவின் சரித்திரத்தில் காண முடியாது. வெளி நாடுகளின்மீது படையெடுத்துச் சென்று அவைகளை வெல்லாத நாடு வல்லமை வாய்ந்ததன்று என்பது மேல்நாட்டார் கொள்கை. ஏன், இந்தியாவையும் சீனாவையும் தவிர மற்ற நாடுகளுக்கெல்லாம் இக்கொள்கை பொதுவானதென்றே இயம்பலாம். பிற நாடுகளைக் கைப்பற்றுதவரிடத்து மேன்மையொன்றுமில்லை யென்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் இந்தியாவானது அக்கூற்றை ஒருக்காலும் ஏலாது. தளர்வுற்றுக் கிடந்தமையாலும் ஆக்கம் குன்றிப்போய் விட்டதாலும் இத்தேசம் தாற்காலிகமாக அடிமை வாய்ப்பட்டிருந்தது உண்மை. அடிமைத்தனம் என்னும் நோயை இது இப்பொழுது களைந்தெறிந்திருக்கிறது. முன்பு நாடு வலிவுற்று சுவாதீனமாய் வாழ்ந்

திருந்த காலத்து அது புறநாடுகளை வென்று அடிமைப் படுத்த முயலவில்லை. இனி, வருங்காலத்திலும் அது அப்படிச் செய்யாது. யாரையும் அடக்கியாள விரும்பா திருப்பது இந்தியாவின் பெருமையாகும்.

பிறநாடுகளின் நாகரிகங்கள் செல்லுமிடமெங்கும் ஆங்காங்கிருந்த மேன்மைகளை அழிப்பனவாயின. காட்டுத் தீயினிடத்து அகப்படுபவைகளெல்லாம் அவிந்து சாம்பலாய்ப்போவது போன்று, படையெடுத் துச் சென்ற வல்லரசுகளிடம் அகப்பட்ட சமுதாயங்க ளெல்லாம் தங்கள் சொந்த நாகரிகங்களை யிழக்கும்படி யான நிலைக்குக்கொண்டுவரப்பட்டன. தான் மேன்மை யுற்றிருந்த காலத்து இந்தியா வெளிநாடுகளுடன் இணக்கம் வைத்துக் கொண்டிருந்தது. பிறரைக் கொள்ளையடிக்கச் செல்லுதற்குப் பதிலாக, தன் உயர்ந்த கொள்கைகளை — உயிர் ஊட்டும் கொள்கை களை — வெளிநாடுகளில் பரப்புதற்கென்றே இது ஆங் காங்குச் சென்றது. ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கு இவ்வுண்மை விளங்குகின்றது. உயர்ந்த சன்மார்க்க போதம் உலகில் எங்கேயாவது காணப்படுகிறதென்றால் அது ஏதேனும் ஒருவிதத்தில் இந்தியாவினின்று கொண்டுபோகப்பட்டதேயாம். ஆத்மன் அழிவற்றது என்னும் பரந்த கோட்பாடு இப்பாருலகில் எவர்க்கா வது தெரியுமென்றால் அவருக்கு அத்தகைய அமுத வெள்ளத்தை அளித்தது இந்தியாவேயாம். மனித னுக்கு அமைதியை, ஆனந்தத்தை ஊட்டவல்ல உயர்ந்த கருத்துக்களுக்கெல்லாம் பிறப்பிடம் பரத

கண்டம் ஒன்றே. அவைகளை அது ஓயாது உலகெங்கும் எடுத்து வழங்கி வந்திருக்கிறது; இனியும் வழங்கப் போகிறது. நீர் பாய்வதால் மரஞ்செடி கொடிகள் உயிர்பெற்று வளர்கின்றன. பின்பு அவைகளின் தன்மைக்கேற்ப அவைகள் வளம் பெறுகின்றன. பனித் துளி பூமியில் விழுவது கண்ணுக்குத் தென்படுவதில்லை. ஆனால் அதன் பயனாக நல்ல மலர்கள் உண்டாகின்றன. நீர் போன்றும் பனித்துளி போன்றும் இந்தியாவின் அருள் வெள்ளம் பரவிய இடங்களிலெல்லாம் உலக நாகரிகங்களுக்கு மாண்பளித்து வந்திருக்கிறது. வசதி வாய்க்கும் போதெல்லாம் வருங்காலத்திலும் இந்நாடு அவ்வரும் பணியைச் செய்யும். இதுவே இந்தியாவின் மகிமை.

வாழ்க்கையின் முடிவான நோக்கம் யாது என்பதற்கு இந்நாடு அளிப்பது போன்ற விடையை வேறு எங்கும் பெறமுடியாது. அதைக் கேட்கும் போதே வியப்புண்டாகும். அந்த உயர்ந்த நிலையை அடைவது ஒருபுறமிருக்க, அதை மனதால் சிந்தித்துப் பார்ப்பதிலேயே மனிதனுக்கு ஒப்பற்ற மேன்மை வந்துவிடும். இராமர், புத்தர் போன்ற அரசர்களுக்கு அரசாட்சியை முன்னிட்டு மரியாதை வழங்கப்படவில்லை. கணக்கற்ற அரசர்களை இந்தியா அப்போதைக்கப்போது மறந்து விட்டது. ஆனால் தங்கள் செயலிலும் சிந்தையிலும் பரிபூரணநிலை யடைந்தவரையே இந்நாடு யாண்டும் ஞாபகத்தில் வைக்கிறது. உடலின் சேஷ்டைகளை அடியோடு வென்றவர்களை, படலம் படலமாக மனதைத்து

வத்தைத் துருவி ஆராய்ந்தவர்களே, பிறப்பு இறப்பு ஆகிய கூறுபாடுகளுக்கு அப்பாலுள்ள அழியா நிலையை நேரே கண்டறிந்து அதை அடையப்பெற்றவர்களே, எண்ணிறந்த உயிர்களுக்கெல்லாம் பொதுவாய் இலங்குவது ஒரே பொருள் என்னும் உண்மையை அறிந்தவர்களே, அன்பு அமைதி தூய்மை இனிமை ஆகிய சீலங்களின் கரைகண்டவர்களே, சுருங்கச் சொல்லின் இவர் மானுடரோ தேவரோ என்று பாகுபடுத்துதற்கு இயலாதவாறு பெருமையைப் பெற்றுள்ள மகான்களே வாழையடி வாழையென இந்நாள் வரையிலும் ஓயாது ஈன்றெடுத்தது இந்நாடே. இதனால்தான் இதற்குப் புண்ணிய பூமியென்னும் பெயர் வந்துள்ளது.

### நாட்டின் உயிர்நாடி

வலிவு படைத்ததே வாழ்க்கைக்கு உரியது என்னும் கோட்பாட்டை மேல்நாட்டுப் பௌதிக விஞ்ஞான சாஸ்திரிகள் புகட்டுகின்றனர். உடல் வலிவையே அவர்கள் வலிவு என்கின்றனர். அக்கூற்று உண்மையாயின் பண்டைக் காலத்து வல்லரசுகள் இன்றைக்கும் இன்புற்றுச் சிறப்புற்று வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் உண்மை அப்படியில்லை. புஜ பராக்கிரமம் பெற்றுப் படாடோபத்துடன் பாராண்ட மக்கட் கூட்டங்கள் பல புற்றீசல் போன்று அப்போதைக்கப் போது தோன்றி மறைவனவாயின. அவைகளின் ஞாபகச் சின்னங்களைக்கூட இந்நாளில் காண்பதரிது. உடல் வலிவில்லாதவர்களும், உலகத்தைப் படையெடுத்து வெல்லாதவர்களுமாகிய ஹிந்துக்களோ

இன்றைக்கும் உயிர்தரித்திருக்கின்றனர். அடிமை வாய்ப்பட்டுக் கீழ்த்தரமான வாழ்க்கை வாழ்ந்துவந்த காலத்திலும் அவர்கள் உலகுக்கோர் ஆச்சரியமான சமுதாயமாக விளங்கி வந்தனர்.

சில நூற்றுண்டுகளாக இந்தியாவின் பொருள் கொள்ளையடிக்கப்பட்டது. அதன் செல்வம் எவ்வளவு தூரம் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பதைக் கணக்கிட முடியாது. தன தானிய லக்ஷ்மி தாண்டவமாடும் இந்நாட்டில் வறுமையே எஞ்சி நிற்கிறது. பட்டினிகிடந்துகொண்டும் இது உயிர் பிழைத்திருக்கிறது. உலகில் உள்ள வேறு சில நாடுகளை ஓராண்டு அல்லது ஈராண்டு கொள்ளையடித்தால் அவை அழிந்துபோம். இன்னும் சில நாடுகள் பிறரைக் கொள்ளையடியாது வாழ்ந்திருக்க முடியாது. ஆனால் இந்தியா மட்டும் எத்தனையோ இன்னல்களுக்கு உட்பட்டிருந்தும் இன்னும் உயிர் வாழ்ந்திருக்கின்றது. அதன் உயிர்நாடி கெட்டுப்போய் விடவில்லை. உயிர் நாடி வலிவை இழக்கும் போதே உடலுக்கு அழிவு வருகிறது.

தவவலிவுடைய சிலர் தங்கள் ஜீவநாடியை இரகசியமாக எங்கேயோ மறைத்து வைத்து விடுவதாகப் புராணங்கள் கூறுவதுண்டு. அப்படி மறைத்து வைக்கப்பட்ட உயிர் நிலைக்குக் கேடு விளையாதிருக்கும் பரியந்தம் அத்தகைய தபோதனருக்கு அழிவில்லை. அவர்களின் உடல்கள் சிதைக்கப்படினும் அவை திரும்பவும் நல்ல நிலைக்கு வந்துவிடுகின்றன. இக்கூற்று இந்தியா

வுக்கும் பெரிதும் பொருந்துகின்றது. பலவிதமான அல்லல்களுக்கு அது அப்போதைக்கப்போது உட்பட்டிருந்தபோதிலும் அதன் உயிர்நாடி தாக்கப்படவில்லை.

ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு வாழ்க்கை முறை உயிர்நாடியாகின்றது. சில நாடுகளுக்கு வர்த்தகம் ஜீவாதாரம். அது ஒழுங்காக நடைபெறும் வரையில் கேடு ஒன்றும் அதற்கு வருவதில்லை. வர்த்தகத்துக்குத் தடையுண்டாகும்போது அதை உயிர் நிலையாகக்கொண்டிருந்த சமுதாயங்கள் குலைந்துபோம். அப்படியே அரசியல், சமூக ஐக்கிய வாழ்க்கை, பொருளாதாரம் முதலியவைகளை முக்கியமான லட்சியங்களாகக் கொண்டுள்ள நாடுகள் அதனதன் லட்சியத்துக்கு இடையூறு வரும்போது தாமே நசித்துப் போகின்றன. வாணிகத்துக்கும், அரசியலுக்கும் அவை போன்ற பிற யாவுக்கும் இந்தியா மதிப்புக்கொடுக்கிறதெனினும் அவைகள் இந்நாட்டின் ஜீவநாடியாகா. பாரமார்த்திக வாழ்வே இந்தியாவின் ஜீவநாடி. பாரமார்த்திக வாழ்வு வாழ்கின்றவர்கள் சமுதாயத்தில் முன்னணி வகிக்கின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாக இக்கோட்பாடு இந்தியாவின் இதயத்தில் உறைந்து கிடப்பதாயிற்று. இன்றைக்கும் இதே கோட்பாடு தான் இந்நாட்டுக்கு உயிர்நாடியாக இலங்குகிறது. தேசத்தில் எத்துறையிலாவது ஏதேனும் மாறுதலை விளைவிக்க முன்வருகின்றவர்கள் முதலில் அத்யாத்மீய வாழ்க்கையில் அசையாது நிலைநிற்பவர் ஆதல் வேண்டும். பாரமார்த்திக வாழ்வைப் பின்பற்றுகின்

றவர்களன்றி வேறு யாரும் இங்கு தேசத் தலைவர் களாகவும் முன்வர முடியாது. தனது உயிர்நாடியாக அறவாழ்க்கையை ஏற்றுக்கொண்ட இந்தியா இனி அதை மாற்ற முடியாது. அதை மாற்ற முயலும் இயக்கங்களும் மலைமீது மோதுகின்ற மட்பாண்டம் போன்று உடைந்து அழியும். மண்ணை நம்பியவர்கள் காலக்கிரமத்தில் மண்ணாய்ப்போயினர். அழிவற்ற ஆத்மனை நம்பிய நம்நாடு ஆத்மனைப்போன்று அழிவற் றிருக்கிறது. ஆத்மா ஆயுதத்தால் வெட்டப்படுவ தன்று; நீர் அதை நனைக்காது, தீ எரிக்காது, காற்று உலர்த்தாது. மாறுபடுகின்ற உலகில் மாறாத்தன்மை யுடையது ஆத்மா. அதை அடைதற்கான வாழ்க்கை யையே இந்தியாவானது குறிக்கோளாகக் கொண்டுள் ளது. ஆத்மீய வாழ்க்கை அதன் உயிர்நாடி.

ஜீவநாடி வலிவுற்றிருக்கும்போது உடலெங்கும் ரத்தம் நன்கு பரவும். அப்போது உடலில் உண்டாகும் காயங்களும் வெட்டுகளும் விரைவில் காய்ந்துபோம். அதுபோழ்து உடலுக்கு நோய் வராது. அரிதாக வரும் நோயும் கடிதில் குணமடையும். இந்தியாவின் உயிர்நாடியாகிய ஆத்மீய வாழ்வு மேன்மையுற்றிருந்த காலை மற்றெல்லாத் துறைகளிலும் அது உயர்வுற் றிருந்தது. சரித்திரத்தை ஆழ்ந்து ஆராய்பவருக்கு இவ்வுண்மை விளங்கும். தேசத்தின் உடைமையும் வறுமையும் ஆத்மீய வாழ்வின் மேன்மையையும் தாழ் மையையும் அனுசரித்தே வந்திருக்கின்றன. ஜீவநதி ஒன்றில் பெருக்கும், வடிதலும், மாறி மாறி நிகழ்

வது இயல்பு. நீர் வடிந்திருக்கும்போது அதன் இரு மருங்கிலும் மாசு மறு படிகின்றன. பிறகு நீர்ப் பெருக்கு அவைகளை அடித்துக்கொண்டு போகிறது. இந்திய சமுதாய வாழ்க்கையும் அத்தகையது. உடைமையும் வறுமையும் அதற்கு ஒருவழி நிற்ப தில்லை. ஆனால் இந்தியா அழிந்துபோகாது. ஆத்மீயம் அதற்கு உயிர்நாடியாயிருப்பதே அதற்குக் காரணம். ஆத்மீய வாழ்வு வலுத்து ஓங்குங்கால் அதன் குறை களும் குற்றங்களும் தாமே மறைந்து போகின்றன.

### நாட்டின் வேலை

பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்திருந்த பழைய நாடு இந்தியாவெனின், அது இத்தனை காலம் என்ன செய்துகொண்டிருந்தது என்னும் கேள்வி பிறக்கிறது. திருவிழாக் காலங்களில் இரவில் வாணவேடிக்கை காட்டுகின்றனர். திரள் திரளாக மக்கள் கூடி அதைக் கண்டு களிக்கின்றனர். விதவிதமான வருணங்கள் வானத்தில் தோன்றி மக்களுக்கு மகிழ்வூட்டுகின்றன. பிறகு இந்த விநோதம் அடியோடு மறக்கப்படுகிறது. அதே வானத்தில் நக்ஷத்திரங்கள் இலங்குகின்றன. ஆனால் அவைகளின் மகிமையை உணர்பவர் மிகச் சிலரேயாவர். வாண வேடிக்கை பார்ப்பவர் நெடுங் காலமாக விண்ணுலகில் வீற்றிருக்கும் மீன்களால் ஆகும் பயன் யாது என்று கேட்கலாம். நக்ஷத்திரங் களின் பயனை எல்லாரும் அறியாவிட்டாலும் அவை பயனுடையவைகளே; இவைகளைப்போன்று இந்திய சமுதாயம் அழியாதிருந்து மனிதன் அடைய வேண்டிய

அழியா நிலைக்கு வழிகாட்டுகிறது. எண்ணிறந்த பிறவிகளை எடுத்து ஓய்ந்த பின்பு, பிறவாநிலை யெய்துதற்கு உயிர்கள் இந்தியாவாகிய இப்புண்ணிய பூமியில் வந்து இறுதியாகப் பிறக்கின்றனர், அல்லது பிற பூமிகளில் பிறப்பார்களாயின் இப்புண்ணிய பூமியுடன் இணக்கம் வைத்துக்கொள்கின்றனர். இதை ஞானபூமி யென்று சொல்வதன் பொருள் இதுவே.

தேசிய வாழ்க்கை திட்பமுற்றிருக்கும் போதும் தாழ்மையுற்றிருக்கும்போதும் தேசமக்களின் குறிக்கோள் ஒன்றே. மனிதன் பூமியில் பிறக்கிறான்; பின்பு அதைவிட்டு அகலுகிறான். இவ்வுலகப் பொருள் ஒன்றையும் அவன் உடன் எடுத்துச் செல்வதில்லை. ஆனால் இவ்வுலகில் அவன் அடையும் பண்பும் பயிற்சியுமே அவனைத்தொடர்ந்து செல்லுகின்றன. கடலினின்று மேகமாகக் கிளம்பும் நீர் மீண்டும் கடல்போய்ச் சேரும் பரியந்தம் வெவ்வேறு விதமான பயணம் செய்துகொண்டே யிருக்கிறது. இடை வழியில் அது நிலைத்து நிற்க முடியாது. அவ்வாறே இறைவனிடமிருந்து வந்த ஜீவர்கள் திரும்பவும் இறைவனிடம் போய்க்கொண்டிருக்கின்றனர். இதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும் ஹிந்துக்கள் தங்கள் வாழ்க்கை முறையனைத்தையும் அதற்கேற்றபடி அமைக்கின்றனர். அறநெறியை ஏன் பின்பற்ற வேண்டும்? அது விரைவில் மனிதனை இறைவனிடம் கொண்டுசேர்க்கிறது. பொருளை ஏன் தேடவேண்டும்? இது இவ்வுலக இன்பங்களைக் கொடுத்துப் பிறகு

இதற்குமேல் அழியாத இன்பம் ஒன்று இருக்கிறது என்னும் தெளிவு உண்டாதற்கு உறுதுணையாகின்றது. ஆதலால்தான் ஹிந்துக்கள் வாழ்வது, பொருள் தேடுவது, சமைப்பது, உண்பது, உறங்குவது ஆகிய அனைத்தையும் இறைவன் பொருட்டுச் செய்கின்றனர். இந்த எண்ணம் அவர்கள் உள்ளத்தில் ஊறிக்கிடப்பதன் பயனாக இந்தியாவில் சதாகாலமும் மேலோர்கள் தோன்றியிருக்கின்றனர். மரம் ஒன்றின் மாண்பு அது தரும் கனியினின்று விளங்குகின்றது. அவ்வாறே நாடு ஒன்றின் மகிமை அது ஈன்றெடுக்கும் மகாபுருஷர்களினின்று விளங்குகின்றது. எக்காலத்திலும் இந்தியாவின் முக்கியமான வேலை மேலோர்களை உண்டுபண்ணுதலேயாம்.

அரசியல் துறையிலாவது பொருளாதாரத் துறையிலாவது பராதீனமடைவது இந்தியாவுக்கு அழகன்று; வானத்தில் நக்ஷத்திரங்களையே பார்த்து மகிழ்ந்து கொண்டு நடக்கிறவன் பூமியில் கிணற்றில் தவறி வீழ்வது தகாது. அவ்வாறே பரலோகத்தைச் சிந்தித்து இகலோகத்தில் இழிவடைபவன் மேலோன் ஆகான். உண்மையான பாரமார்த்திக வாழ்வு இகபர மிரண்டுக்கும் சாதனமாகின்றது. எல்லா விதமான கலைஞானங்களும் அதினின்று உதிக்கின்றன. இம்மையில் சீரும் சிறப்பும் செறிந்த வாழ்க்கையை அது உண்டுபண்ணுகிறது. மறுமையில் அழிவற்ற ஆனந்தத்தை அது நல்குகிறது. இவை யாவும் மெய்யான தேசிய வாழ்வின் விளைவாம். இருமைக்கும் உறுதுணையாவது தருமம்.

ஆதலால் தார்மீக வாழ்வு வாழ்தலே இந்தியாவின் வேலைத் திட்டம்.

தருமம் அல்லது ஆத்மீயப் பெருவாழ்வு என்னும் பொக்கிஷத்தைக் காப்பாற்றுதலே இந்தியாவின் முக்கியமான கடமையாகும். வெளிநாட்டவர் மனவமைதியில்லாது வருந்துகின்றனர். சாந்தி எங்கிருக்கிறதென்று அவர்களுக்குத் தெரியாது; உலக இன்பங்களையெல்லாம் அனுபவித்து அவர்கள் அலுப்புற்றுக் கிடக்கின்றனர். அரசியல் துறையில் பேராசையும் சமுதாயச் சூழ்ச்சிகளும் அவர்களின் பாதி உயிரை வாங்கிவிட்டன. எரிமலை வெடிப்பதுபோன்று மட்டுக்கு மிஞ்சிய ராணுவ மனப்பான்மை தங்களைக் கொன்றுவிடுமென்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

உலகத்தவர்க்கு மெய்யான நாகரிகத்தைப் புகட்டுதற்கே இந்தியா உயிர் வாழ்ந்திருக்கிறது. இந்நாடு எத்தனையோ இன்னல்களுக்கு உட்பட்டிருக்கிறது. படையெடுத்து வந்தவர்களெல்லாம் இதை நசுக்க முயன்றனர். இதன் பழக்க வழக்கங்கள் கொடியவைகளென்று ஓயாதெடுத்து ஓதப்பட்டன. இத்தனை சோதனைகளையும் மீறி இது உயிர் தரித்திருப்பதில் கருத்தொன்று உண்டு. போட்டி போட்டுக்கொண்டும், ஒருவரையொருவர் கொல்ல முயன்றுகொண்டும், வாழ்க்கையின் லட்சியத்தை அறியாது தவித்துக் கொண்டும் இருக்கின்ற வெளிநாட்டவர்களுக்கு ஆத்மீயப் பொக்கிஷத்தை வழங்குதற்கு இந்தியாவானது வாழ்ந்திருக்கிறது. இந்த வாழ்க்கையினின்றே உலகில்

சாந்தி பிறக்கும். இதை உணரும் இந்திய மக்கள் தங்கள் அரிய பொக்கிஷத்தைக் குப்பை கூளங்களி னின்று பிரித்தெடுப்பதே அவர்கள் உடனே செய்யும் கடமையாகும். எல்லார்க்கும் பயன்படும் தூய ஆத்மீய வாழ்வு வாழ்வதே அத்தகைய வேலையாகும்.

# 2. இந்தியா வீழ்ந்த விதம்

## உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா

ஆயுள் முழுதும் ஆரோக்கியமாக வாழ்பவனைக் காண்பது அரிது. ஒரு காலமல்லாவிடில் ஒருகாலத்தில் ஒவ்வொருவனும் பிணியால் வருந்துவது இயல்பு. நோயில் இடர்ப்படாத மனிதன் நிலவுலகில் இல்லையென்றே இயம்பலாம். தனி மனிதனுக்கு நன்மையும் தீமையும் மாறி மாறி வருவதுபோன்று மனிதத்திரள் அடங்கிய தேசங்களும் உயர்வு தாழ்வு உறுவது முறை. உலக சரித்திரத்தை ஆராயுமிடத்து இவ்வுண்மை நன்கு விளங்கும். அனைவராலும் புகழ்ந்து போற்றப்படுமாறு ஏதேனுமொரு நாடு ஒரு காலத்தில் மகோன்னத நிலையை எய்துகிறது. அதுபோழ்து அது ஆக்கம் அனைத்துக்கும் எடுத்துக்காட்டாக இலங்குகிறது. உலகம் முழுதும் அதன் பெருமையைக் கண்டு வியப்படையும். பின்பு அந்நாடு க்ஷீணதசையடைந்து பின்னணிக்குப் போய்விடுகிறது. அதனிடத்து உள்வலிவு இருந்தால், அச்சமூகம் சாதிக்கக்கூடிய அரும் பெரும் காரியம் ஏதாவது இருந்தால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அது திரும்பவும் தலையெடுத்து மேன்மை யுறுகிறது.

இந்திய சமூகம் எத்தனையோ தடவை இவ்வாறு மேன்மையும் கீழ்மையும் அடைந்து வந்திருக்கிறது. அதனுடைய வாழ்வு யாண்டும் ஒரே போக்காக இருந்

தது கிடையாது. இருள் சூழ்ந்த கஷ்டகாலங்களை இந்தியா பலமுறை அனுபவித்திருக்கிறது. அவைகளுள் அது இப்போது துய்த்துவரும் துயரமே மிகப்பெரியது எனலாம். சென்ற ஆறு அல்லது ஏழு நூறுண்டுகளாக இத்தேசம் தாழ்மையையே நோக்கிச் செல்வதாயிற்று. போற்றத்தக்க பெருமை எதையும் அது இந்த அறுநூறு வருஷங்களுள் சாதித்திருப்பதாகக் காண்கிறேமில்லை. உடலில் பிணி உண்டாதற்குக் காரணங்கள் பல இருப்பது போன்று தேசமொன்று சிறப்பையிழந்து சீர்கேடு அடைதற்கும் காரணங்கள் பல உள. நம்மைப் பிடித்திருக்கும் நோய் யாதென்று உள்ளவாறு அறிதலே அதைப்போக்குதற்கு உற்ற உபாயமாகும். எந்தெந்தத் துறைகளில் என்னென்ன விதங்களில் இந்தியா வீழ்ந்து சிறுமையுற்றுக்கிடக்கலாயிற்று என்பதை ஈண்டு ஆராய்வோம்.

### உயிர்நாடி நலிவுற்றது

இந்தியாவின் தேசீய வாழ்வுக்கு அறநெறியானது உயிர்நாடி போன்றது. தர்மம் தழைத்தோங்கிய காலங்களிலெல்லாம் நாடு நலம்மிகப் பெறலாயிற்று என்பதற்குச் சரித்திரமே சான்றாகும். ஆனால் சென்ற சில நூறுண்டுகளாக நாம் அனுஷ்டித்து வந்தது ஹிந்து தர்மமன்று. வைதிகத்தின் பெயரால் நம்பால் தோன்றித் தலையெடுத்திருந்த வியாதியென்றே அதைச் சொல்லவேண்டும். ஆதலாலேதான் புத்துயிர்பெற்று எழுந்திருக்கும் இளைஞர்கள் மதவிஷயத்தில் பராமுகமாயிருப்பதுமன்றி அதை ஒழித்தாலொழிய நாட்டுக்கு

விமோசனமில்லை யென்றும் முறையிடுகின்றனர். சமய அனுஷ்டானம் என்பதாய மாண்புடைய வாழ்வு, வீரம், அன்பு, ஒற்றுமை என்பன போய்விட்டன. அவற்றிற்குப் பதிலாக ஒவ்வொருவனும் தான்தானே உயர்ந்தவன், தூயவன், ஏனையவருடன் சேரலாகாது; சேர்ந்தால் தன் புனிதம் பறந்தோடிவிடும் என்றெண்ணி வீணே வாழ்ந்து வகைகெட்டுப்போய்விட்டான். இங்ஙனம் தேசமெங்கும் திகழ்ந்திருந்தது வைதிகமுமல்ல, பௌராணிகமுமல்ல, வேறு எந்த உயர் தர்மமுமல்ல. சோற்றுப்பானை மதமே சிறப்புற்று நின்றது. உண்ணுதலிலும் பருகுதலிலும் ஒருவர்க்கொருவர் எவ்வளவு தூரம் சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றிய பிரச்னை மேதாவிகளின் மனதைப் பெரிதும் கவர்ந்து வருவதாயிற்று. பெறுதற்கரிய மானுடப் பிறவியை இடைக்காலத்தவர் இங்ஙனம் பாழ்படுத்தி வந்தனர். இதைவிட மேலான நோக்கம் எதையும் கிரகிக்க முடியாத இழிநிலைக்கு அவர்கள் வந்துவிட்டனர். புத்தி தீட்சண்யம் கெட்டுவிட்டது; மூளையும் மிருதுவாகி, நரம்புகளெல்லாம் தளர்ந்துவிட்டன. ஆதலால் மகத்தான பிரச்னையெதையும் எண்ணமுடியாத பேதையர்களாக அவர்கள் மாறிவிட்டனர். நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்கள் இன்ன உணவை உண்ணலாம் இன்னதை உண்ணலாகாது என்று மருத்துவர் பத்தியம் நியமிக்கின்றனர். ஆனால் உடல் நல்ல நிலையில் இருக்கும்பொழுது அத்தகைய கட்டுமானங்களுக்குத் தேவை

யில்லை. இதுகாறும் நமது சமுதாயம் நோய்வாய்ப் பட்ட நிலையில் இருந்து வந்தது. பொருளற்ற கட்டு மானங்களும் பழக்க வழக்கங்களும் சமுதாயத்தினுள் புகுவனவாயின. நல்வாழ்வு வாழ ஆரம்பிக்கும் பொழுது இப்பழக்கவழக்கங்களை அகற்றுதலே முறை.

கோழைத்தனமான குருட்டுநம்பிக்கைகளும் ஆபா சப் பழக்க வழக்கங்களும் வேதத்தின் ஆக்ஞைக ளென்று ஆதரிக்கப்பட்டன. தம் மண்டையில் திணித்து வைத்திருந்த மடமையனைத்துக்கும் அடிப் படையான தத்துவங்களும் கோட்பாடுகளும் இருந்து வந்தனவென்று வியாக்கியானம் பண்ணப் பலர் முன் வந்தனர். ஆத்மீக வாழ்வில் பரம ரகசியங்கள் பல புதைந்து கிடக்கின்றனவென்றும், அவைகளைப் பாமரர் களுக்கு வெளியிடாது சித்தர்கள் மறைத்து வைத்திருக் கின்றனரென்றும் அவர்கள் கருதி வந்தனர். அந்த மர்மங்களை எப்படியாவது தெரிந்துகொண்ட மாத்தி ரத்தில் இகபரமிரண்டிலும் விரும்பிய யாவையும், வித்து விதையாது அறுவடை செய்வது போன்று பெற்றுவிடலாமென்றும் அவர்கள் எண்ணுவாராயி னர். ஒழுக்கமும், உழைப்பும், பௌருஷமும் வடி வெடுத்து வந்த பண்டைக்காலத்துப் பெரியார்கள் மதப்பிரசாரத்துக்காக ரகசிய சங்கங்கள் எதையும் நிறுவவில்லை. வாழ்வைப்பற்றிய உண்மைகளைப் புகட்ட அவர்கள் செப்படி வித்தை போன்ற செயல் எதையும் செய்யவில்லை. ஆனால் இடைக்காலத்தவர் இவ்வாறு இரகசியங்களை நாடியதும், குருட்டு நம்பிக்கைகளில்

மூழ்கியதும் ஆண்மையை இழந்து அறிவைப் பறி கொடுத்துவிட்டதற்கு அறிகுறிகளாயின. நாடு நல்லறிவை இழந்துவிட்டது என்பதற்கு இக்கோழைக் கொள்கையே சான்ருகும். ஆத்மீக வாழ்வின் உண்மைகள் மலைப் பிரதேசங்களில் மக்களது காட்சியினின்று மறைந்திருக்கும் மகாத்மாக்களுடைய பிரத்தியேக பொக்கிஷமென்று இப்பரதகண்டத்தில் முன்பு எந்நாளும் புகட்டப்படவில்லை. ஆண்மக்களை அலிகளாக்குகின்ற இத்தகைய குருட்டு நம்பிக்கைகளைக்காட்டிலும் நாஸ்திகம் எவ்வளவோ மேலானது. ஏனென்ருல் நாஸ்திகனிடத்தில் பாராட்டத்தக்க தன்னம்பிக்கையும் சுயப்பிரயத்தனமும் இருந்துவந்தன. ஆனுல் ஆஸ்திகர் என்பார் ஆபாசக் கொள்கைகளில் அகப்பட்டுக் கொண்டு சிறுமையும் சீர்கேடும் அடைந்து வருவாராயினர்.

## பொதுமக்கள் புறக்கணிக்கப்பட்டனர்

ஜீவகோடிகள் அனைத்தும் சிவமயம், வாசுதேவமயம், பிரம்மமயம் என்ற உயர் கொள்கையைப் படைத்துள்ள நாடு இது. ஆனுல் இக்கொள்கை நம்மனேரால் அனுஷ்டானத்தில் மட்டும் கொணரப்படவில்லை. படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில் என்னும் விபரீதத்துக்கு ஒப்பக் கடவுளின் புதல்வர்கள் பொல்லாதவர்களென்றும், தீண்டத் தகாதவர்களென்றும், நீசர்களென்றும், சண்டாளர்களென்றும் சபிக்கப்பட்டனர். தாம் எத்தகைய எண்ணங்களை உட்கொண்டு வளர்கின்றனரோ அத்தகையவர்

ஆகின்றனர் மாந்தர். புனிதமும் பெருமையும் பொலி யும் எண்ணங்கள் ஊட்டப்பெற்று வளர்பவர் மேலோர் ஆவர். பாபமும் கயமையும் செறிந்த உணர்ச் சியில் ஊறி வளர்பவர் அங்ஙனமே சிறுமையுறுவர்.

இந்திய சமுதாயத்துக்கு உடல் போன்றவர் பாமரர். நெற்றி வியர்வை நிலத்தில் விழ அவர்கள் உழைப்பதன் பயனாக, உயிரையே வழங்குவதன் பய னாக, மேன்மக்கள் என்பார் பொருள் படைக்கலாயி னர் ; கல்வி பெறலாயினர் ; வசதிகள் அனைத்தையும் உடைத்திருப்பாராயினர். அவைகளுக்குப் பிரதிபலனா கப் பாமரர் பெற்றதென்ன ? நன்றிகெட்ட மேன் மக்கள் கையில் அவர்கள் மொத்துண்டு கீழோராயினர். படாத பாடுபட்டுப் பரிதபிக்கலாயினர். அடிமைகளாக அவர்கள் அலக்கழிக்கப்பட்டனர். அவர்களைத் தீண்டு வது தீட்டு ; அவர்கள் அண்டையில் அமர்வது அசுசி; பிறவியிலேயே அவர்கள் பொல்லாதவர்கள் ; ஆதலால் பொல்லாதவர்களாகவே அவர்கள் இருக்கவேண்டும். வேதம் பிறந்த நாட்டில் இத்தகைய விபரீத புத்தியும் பிறந்தது. இதன் பலனாகப் பாமரர் மேலும் மேலும் கீழ் நோக்கியே செல்லலாயினர். ஏனையவர்களைப் போன்று தாங்களும் மனிதர்கள்தான் என்கின்ற உணர்ச்சியையுங்கூட அவர்கள் இழந்துவிட்டனர். வடி வத்தில் மனிதர் எனினும் வாழ்க்கையில் விலங்குக்கும் கீழான நிலையில் அவர்கள் வைக்கப்பட்டிருந்தனர்.

தேசத்தின் பொதுமக்கள் இவ்வாறு பின்னணியில் இருந்து வந்தது தேசத்துக்கே இழிவு என்பதைக் கற்ற

றிந்த மேன்மக்கள் உணரவில்லை. உலர்ந்துபோன அவர்களுடைய நெஞ்சத்தில் கொஞ்சமேனும் அன்பு, அனுதாபம் ஆகிய மேலாம் இயல்பு எஞ்சியிருக்கவில்லை. பாமரருடைய அபிவிருத்தியைப் பற்றி யாராவது பேசினுலுங்கூட, அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. கேடுடைய குடியிற் பிறந்து ஊழ்வினையால் வருந்துபவரை உய்விக்க முடியாது என்றும் அவர்கள் வாய்வேதாந்தம் பேசிவந்தார்கள்.

## பெண் உலகுக்குப் பொல்லாங்கு

உலகு அனைத்தும் தானேயாயுள்ள இறைவனை மாது ஒருபாகம் ஆனவன் என்றும் சொல்லுகிறோம். அர்த்தநாரீசுவரன் என்பதன் பொருள் பேர்பாதி பெண் ஆனவன் என்பதாம். மக்கள் கடவுளுக்கு அன்னியமானவர்கள் அல்லர் என்பதைத்தான் வேதம் வற்புறுத்துகிறது. 'त्वं स्त्री त्वं पुमानसि त्वं कुमार उत वा कुमारी' பெண்ணும் நீ, ஆணும் நீ, குமாரனும் நீ, குமாரியும் நீ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, மக்களைக் கடவுள் சொரூபமாகக் கண்டு பழகுதல் நல்ல ஆத்ம சாதனமாகும். ஜடப் பொருள்களையே சேதனம் நிறைந்தவைகளாக எண்ணிப் பழகுதற்கென்று விக்கிரக ஆராதனை ஏற்பட்டது. கல்லினிடத்துக் கடவுள் சொரூபத்தைக் காணமுயலுகின்ற ஒருவன் மக்களிடத்துக் கடவுளைக்காண மறுப்பானுகில் பேதமையுள் அது பெரும்பேதமையாகும்.

ஒரு பாதி ஒடுங்கிக்கிடக்கிற உடல் உருப்படாது. அதேமாதிரி சமுதாயத்தின் சரிபாகமாகியபெண்மக்கள்

புறக்கணிக்கப்படுவது நல்வாழ்வுக்குப் பொருந்தாது. பெண்ணுலகு போற்றப்படாத இடத்தினின்று தெய்வத்தன்மை அகன்றுவிடுகிறது என்று சொல்லப்படுகிறது. நம் நாட்டில் நாம் காணும் காட்சி எத்தகையது? தூய்மையே வடிவெடுத்திருக்கும் தையலர் ஆயிரக்கணக்கானவர் உளர். முறையுடனே வளர்க்கப்படுதற்குப் பதிலாக பாலியத்திலேயே பிள்ளை பெறும் கருவிகளாக அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். விவாகத்தையாவது குடும்ப வாழ்வையாவது ஒத்திவைக்கும் உரிமை அவர்களுக்குக் கிடையாது. மணம் புரிந்துகொண்டு ஓயாது இடையீடின்றி மக்களைப் பெறுவதைத் தவிர வேறு எவ்வித உயர்ந்த நோக்கத்தையாவது கொள்ள அருகதையற்றவர்களாக அவர்கள் இருந்துவந்தனர். மேலும் அவர்கள்மீது சாற்றப்பட்ட வசைமொழிகள்தான் என்ன! பேயர் என்றும், பேதையர் என்றும், நரகத்துக்கு வழிகாட்டிகளென்றும் அவர்கள் தூற்றப்பட்டு வந்துள்ளனர். தன் வினை தன்னைச்சுடும் என்பது விதி. மாதரைப் பழித்த தன் பலனாகத் தேசீய வாழ்வே மழுங்கிப்போயிற்று. நாடு முழுதும் பாபத்துக்கு உள்ளாயிற்று. இந்நிலையில் அது கீழ்நோக்கிச் செல்லாது வேறு என்னசெய்ய முடியும்?

## முயற்சி இலார் இகழ்ச்சியடைவர்

மாந்தருள் உள்ள வித்தியாசம் அவர்கள் கொண்டுள்ள உற்சாகத்திலும் தன்னம்பிக்கையிலுமேயாம். சிரத்தையுள்ளவர்மாட்டு ஆண்மையும் தெய்வத்

தன்மையும் திகழ்கின்றன. முயன்றால் எதையும் சாதிக்கலாம் என்கின்ற ஆர்வம் படைத்தவர் அனைத்தையும் படைத்தவர் ஆவர். இந்தியரைவிட ஆங்கிலர் உயர்நிலையில் இருப்பதற்குக் காரணம் அவர்கள்கொண்டுள்ள ஊக்கமும் உழைப்புமேயாம். இந்தியா எப்போது சுயநம்பிக்கையை இழந்ததோ அப்போதே அது வீழலாயிற்று. தன்மீது நம்பிக்கையில்லாது போவது தெய்வத்தின்மீது நம்பிக்கையில்லாது போதற்கு ஒப்பாகும். ஏனென்றால் தானும் தெய்வமும் பிரியாது இணைக்கப்பட்டிருக்கின்றனர் அன்றே? பேராற்றல்வடிவினனாகிய இறைவன் அந்தர்யாமியாகச் சித்தமிசைகுடிகொண்டுள்ளான் என்னும்உணர்ச்சியில் நிலைத்திருப்பவர் செயற்கரிய காரியங்களைச்செய்து முடிப்பர். ஆனால் தம்மைச் சக்தியற்றவர்களாகவும் பயன்படாதவர்களாகவும் கருதுபவர் பதர் ஆய்விடுகின்றனர்.

பலத்தை இழப்பது உயிரை இழப்பதற்கு ஒப்பாகும். பலமற்ற மரஞ்செடி கொடிகள் பட்டுப்போவதைப் பார்க்கிறோம். ஆதலால் சமுதாயத்துக்கும் இவ்விதி முற்றும் ஒவ்வும். இந்திய சமூகத்தில் இன்றைக்குப் போதிய வலிவு இல்லை. தேகத்தில் திடமாவது உள்ளத்தில் தைரியமாவது கிஞ்சித்தும் கிடையாது. நடமாடும் பிணம்போல இந்நாடு ஆய்விட்டது. இதற்கும் காரணங்கள் பல உள. முதலாவதாக ஜாதிக் கொடுமையானது மனிதன்மாட்டுள்ள மாண்பைப் பற்றி ஞாபகமூட்டுதற்குப் பதிலாக சிறுமையையே

யாண்டும் அவன்மீது வழங்கி வரலாயிற்று. அடுத்த படி மக்களை அடக்கி ஆளுதற்காக முன்பு இருந்து வந்த அரசர்கள் செய்த அடாத செய்கைகளுக்கு ஓரளவில்லை. மூன்ருவதாக வெளிநாட்டார் படையெடுப்பு தேசத்தைத் தலைதூக்கா வண்ணம் தாழ்த்திவிட்டது. இவை யாவும் ஒன்றுகூடி நாட்டின் முதுகெலும்பையே ஒடித்துவிட்டன. ஆதலால் அது புழுப்போன்று உழன்று காலங்கடத்தி வருவதாயிற்று.

நமது குறைபாடுகளிற் பெரும்பகுதிக்குக் காரணம் நம்பால் உள்ள உடல்நலிவு. போதாததற்குச் சோம்பல் என்னும் நோய்க்கும் நாம் அபரிமிதமாய் இடங்கொடுத்திருக்கிருேம். இழிநிலையைப் பண்படுத்துதற்கு நாம் தீவிரமாக விரும்புகின்ருேமல்லோம்; அதற்குச் சமாதானங்கூறும் வாய்வேதாந்தத்துக்கோ குறைவில்லை. உழைப்பில் நமக்குச் சிறிதும் பிரீதி கிடையாது. தூக்கி வினை செய்தற்கும் நமது சிற்றியல்புக்கும் வெகுதூரம். சேர்ந்து வாழ்தலில் நமக்கு சிரத்தையில்லை; ஒருவரையொருவர் நாம் நேசிக்கின்ருேமல்லோம். தன்னலம் நம்மிடத்து மட்டுக்கு மிஞ்சிவிட்டது. ஒருவரோடு ஒருவர் முரணுது நம்மில் மூன்றுபேர் கூடியிருக்க முடியாது.

**கட்சிப் பிரதிகட்சி**

ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு அடிப்படையாயிருப்பவை ஒற்றுமை, ஒழுங்குமுறை, பரஸ்பர உதவி இத்தியாதியாம். சிறு சமுதாயங்கள்கூட ஒரே கட்டாயிருப்பதன் பலனுக மிக மேன்மையுற்றி

ருப்பதைக் காணலாம். அவைகளைச் சார்ந்த ஒவ்வொரு வனும் தன் சமுதாயத்தின் நன்மைக்காகவே தான் வாழ்வதாக உணருகிறான். தன் இனத்துக்கு உதவி புரிவது அவனுடைய தலையாய கடமை. மற்று, இந்தியர்களுடைய நிலைமையோ இதுபோழ்து அவ்வாறு இல்லை. ஒவ்வொருவனும் தனக்கென வாழ்கின்றானே யொழிய சமுதாயத்துக்கென வாழ்கின்றானில்லை. தன் அயலான்மாட்டு அவனுக்குப் போதிய அளவு அனுதாபம் கிடையாது. உற்றாரை ஆதரிக்கவோ, அவரிடத் திருக்கும் பெருமையைப் பாராட்டவோ அவன் ஒருக் காலும் ஒருப்படான். வெளியூராரிடம் வைக்கின்ற அளவு நட்பும் நம்பிக்கையும் தன் அயலானிடத்து அவன் வைப்பது கிடையாது.

சமூகமொன்று எவ்வளவுக் கெவ்வளவு நலிவுற்றுக் கோழைத்தனமடைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது பொறாமையில் படிந்துவிடுகிறது என்னும் விதிக்கு இந்தியா இப்போது எடுத்துக்காட்டாக இலங்குகிறது. பொறாமையினாலும் ஒருவனையொருவன் வெறுப்பதாலும் இச்சமுதாயம் சீர்கேடு அடையலாயிற்று. கணக்கற்ற சின்னஞ் சிறு வகுப்புகளாகப் பிரிந்துகொண்டு தம்மைப்பற்றி இறுமாப்பு எய்துவதும் பிறருக்கு இடுக்கண்விளைவிப்பதுமே நாடெங்கும் தொழிலாய்விட்டது. இத்தகைய வகுப்பு வேற்றுமைகளுக்கிடையில் தேசம் ஒருபொழுதும் முன்னேற்றமடையப் போவதில்லை.

நாட்டுமக்கள் தங்களுக்குத் தாங்களே உதவி புரிந்துகொள்ளாவிடின் அவர்கள் உயிர்வாழ்வது

உறுதியன்று. அங்ஙனம் உதவிபுரிதற்கு முதலில் அடக்கமும் பணிவும் பயிலவேண்டும். ஆனால் பணிந்திருக்க இயைவாரை மட்டும் காண்கின்றோமில்லை. ஒவ்வொருவனும் தலைவன் ஆகவேண்டும் என்கின்றான். கீழ்ப்படிபவன் மட்டும் இல்லவே இல்லை. இது காரணத்தால் இயக்கம் ஒன்று அமைப்பதற்குள் பொறாமையும் பிணக்கும் அதிகமாய் வந்துவிடுகின்றன. ஒற்றுமையின்மையும், ஔவியமும் என்றைக்கும் ஆக்கம் அளியா.

## குறுகிய நோக்கம்

நமது முன்னோர்கள் நற்காரியங்கள் பலவற்றைச் செய்திருப்பது போன்று பல பிழைகளையும் செய்திருக்கின்றனர். அவைகளில் ஒன்று வெளிநாட்டாரது உதவியின்றி நாம் வாழமுடியும் என்று கருதியதாகும். இக்குற்றத்தின் நிமித்தம் நாம் கிட்டத்தட்ட ஓராயிரம் ஆண்டு அடிமைகளாக இருக்கும்படி நேரிட்டது. கீழ் மக்களிடத்திருந்துங்கூட நல்லறிவைப் பெறவேண்டும் என்பதும், அவர்களுக்குக் குற்றேவல் புரிந்தும் மேன்மை பயக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதும்விதி. புறதேசங்களின் நிலைமையை அறியவேண்டும் என்றும், நம் நிலைமையையும் வெளிநாட்டு நிலைமையையும் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்றும் நம்மனோர் அந்நாளில் நினைக்கவில்லை. கடல் கடந்து வெளிநாடு போவாரை ஜாதிப் பிரஷ்டர்களாக்குவதும், கடற் பிரயாணம் செய்வது சரியன்று என்று கருதுவதும் பழைய கோட்பாடாய் இருந்து வந்தது.

வளர்ச்சி உயிருடைமைக்கும் தேய்வு உயிரின்மைக்கும் அறிகுறிகளாகும். மேலும் உயிருடையவர்கள் வளர்வதுமன்றிப் பிறர்க்கும் பயன்படுவர். ஏனென்றால் கொடுப்பது, வாங்குவது ஆகிய இரண்டும் வாழ்வுக்கு உற்ற துணைகளாகும். பிறர்க்குக் கொடுக்க மறுப்பவன் ஒருபோதும் மேன்மையடையான். அவ்வாறே பிறரிடமிருக்கும் நன்மைகளைப் பெற மறுப்பவனும் மாண்பு அடையமாட்டான். வெளி நாடுகளிலிருந்து நம் நாடு கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பல உள. அவைகளைக் கற்றுக்கொள்ளுதற் பொருட்டு அன்னிய நாடுகளுடன் நெருங்கிய இணக்கம் வைப்பதும் முறை. ஆனால் எப்பொழுதுமே பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளும் கீழ்நிலையில் நாம் இருக்கிறோம் என்று கருதலாகாது. பிறர்க்கு எடுத்து வழங்குவதற்கான மேன்மைகள் பல நம்மிடத்து உண்டு. ஆத்மீக வாழ்வு என்னும் பொக்கிஷம் நம்மிடத்து உண்டு. செல்வங்களுளெல்லாம் அது மிகச் சிறந்த செல்வம் என்பது நம்மில் பலர்க்குத் தெரியாது. இச்செல்வத்தைப் பிறர்க்கு நாம் முறையாக எடுத்து வழங்கத் தெரிந்துகொள்ளவேண்டும். வெளிநாட்டவர்களை வெறுத்து விலகியிருப்பதற்குப் பதிலாக அவர்களுடன் நெருங்கிப் பழகுதல் வேண்டும். நம்மிடத்துள்ள நலத்தை அவர்களுக்கு வழங்கவும் அவர்களிடத்துள்ள நலத்தை நாம் ஏற்பதுமே ஆக்கம் நிறைந்த நல்வாழ்வுக்கு உற்ற உபாயமாகும்.

**இதர காரணங்கள்**

இந்தியர்களுக்கு அறிவு இருக்கிறது; ஆனால் ஆற்றல் போதாது. நல்லது, கெட்டது, செய்யத் தகுந்தது தகாதது இவைகளைப்பற்றிப் பேச்சு அளவில் அழகாகத் திட்டம் போட்டுவிடுவார்கள். பின்பு அக்கொள்கையைச் செய்கைக்குக் கொண்டுவர வல்லவர்களை மட்டும் காண்பது அரிது உலகில் உள்ள அனைத்தையும் சமதிருஷ்டியுடன் பார்க்க வேண்டும் என்னும் கொள்கை புஸ்தகத்தில் இருக்கிறது; ஆயினும் அனுஷ்டானத்தில் வேற்றுமை மிகப் பாராட்டப்படுகிறது. நிஷ்காமிய கருமமும், பரோபகாரமும் இந்நாட்டில் போன்று வேறு எங்கும் அவ்வளவு சீரிய முறையில் புகட்டப்படவில்லை. ஆனால் கிரியாம்சத்தில் நாம் கொடூரமானவர்களாகவும், ஈரமில்லா நெஞ்சத்தினர்களாகவும் இருந்து வந்திருக்கிறோம். நமது உடல் நலத்தைத் தவிர வேறு எதைப்பற்றியும் நமக்கு அக்கறையில்லை. தமோகுணத்தில் புதைந்துகிடக்கும் ஹிந்துக்கள் தங்களைச் சத்துவகுணம் நிறைந்தவர்களென்று பெருமை பாராட்டிக்கொள்கின்றனர். பரிகாசம் செய்தற்பொருட்டு மேல்நாட்டார் இவர்களை (The mild Hindus) சாந்தமுள்ள ஹிந்துக்கள் என்று அழைத்து வந்தனர். முன்னேற்றமடைவதில் விருப்பமில்லாத சோம்பேறிகள் என்பது அக்கூற்றின் மறைமுகமான பொருளாகும். முன்பு ஒருகாலத்தில் இந்திய சமுதாயம் சத்துவகுணத்தைச் சார்ந்திருந்தது உண்மை. ஆனால் அந்த உன்னத நிலையினின்று வழு

வியவர் ரஜோகுணத்துக்கும் வராமல் தமோகுணத்தில் தானே வீழ்ந்து கிடக்கின்றனர்.

இதுகாறும் இந்தியா அடைந்திருந்தது ஆற்றல் மழுங்கிய நிலை; சோம்பலில் ஊறிய நிலை; வினையாற்றச் சிறிதும் இயலாத தன்மை; வல்லமையை இழந்து விட்ட தன்மை. தான் அடைந்திருக்கும் தாழ்மையை அறிந்துகொள்ளாத அளவு அக்ஞானத்தில் தேசம் தோய்ந்து கிடந்தது. ஆனால் இந்தச் சிறுமைக்கு சாந்தம் என்றும், ஞானம் என்றும், பாரமார்த்திகம் என்றும் கண்யமான பெயரிட்டுப் பெருமைப்படுத்திக் கொண்டிருந்தனர்.

மதத்தின் முடிவான நோக்கம் **அபயம்** என்பதாகும். அறிவுடைய ஒருவன் இவ்வுலகிலாவது மறுவுலகிலாவது எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. மேலோர் கோலிய கொள்கை அவ்வாறிருக்க, நம் தேச மக்களிடத்து பயம் என்னும் விஷம் மட்டுக்கு மிஞ்சி பரவியிருந்தது. சின்னஞ்சிறு வயதிலிருந்தே இக்கொடிய நஞ்சு நெஞ்சினுள் செலுத்தப்பட்டு வந்தது. சிசு அழாதிருப்பதற்கு, பிள்ளை பள்ளிக்கூடம் போதற்கு, ஊரினுள் ஒற்றுமை உண்டாதற்கு, சட்டத்திற்கு உட்படுதற்கு, அரசாங்கத்துக்கு அடங்கி நடப்பதற்கு ஆகிய சர்வரோகத்துக்கும் நிவாரணமாக அச்சம் என்னும் மயக்கத்தையே மருந்தாக எங்கணும் வழங்கி வந்தார்கள்.

பெருமை அல்லது சிறுமை, தான் பிறர்க்கு வழங்குகிறவாறு தன்னை வந்து அடையும் என்பது

விதி. எத்துறையில் திரும்பிப்பார்க்கினும் இந்தியா சிறுமையையே நோக்கிச் சென்றிருப்பது வெளிப்படை. பல நூற்றுண்டுகளாக அது எய்திவந்துள்ள இன்னல்களை நோக்கும்போது, அது இருக்கும் இடந்தெரியாது ஒழிந்து போயிருந்திருக்க வேண்டும்; அல்லது படையெடுத்துவந்த புறநாகரீகங்களுள் ஒன்றித்துப் போயிருந்திருக்க வேண்டும். ஆனால் நாம் கண்கூடாகக் காண்பதென்ன? இந்தியா நல்ல வேளையாக இன்னும் அழிந்து பட்டுப்போய்விடவில்லை; வேறு சமுதாயங்களில் ஒன்றித்துவிடவுமில்லை. தாங்கவொண்ணுத் துயரங்களுக்கிடையில் அது தட்டுத்தடுமாறிக் காலங்கழித்து வந்திருக்கிறது. இனி, இந்தியா புத்துயிர் பெற்றுப் பழம் பெருமையைத் திரும்பவும் எய்துவது எங்ஙனம் என்பதுதான் கேள்வி. முன்பு எந்நாளிலும் ஏற்படாத மாபெருஞ் சோதனை இப்போது இந்திய சமுதாயத்தின் உள்வலிவுக்கு உண்டாயிருக்கிறது. உள்ளும் புறம்பும் பல இயக்கங்கள் தோன்றித் தேசத்தைத் தட்டழித்துவிட முயன்று வருகின்றன. இத்தகைய இடர்களுக்கிடையில் இந்தியா ஈடேறுவது எங்ஙனம்?

# 3. இந்தியா ஈடேறுவது எங்ஙனம்?

**ஊர்க் குளத்தில் நீர்ப்பெருக்கு**

சமுதாயங்கள் பல உலகின்கண் அமைந்துள. அவைகளுள் ஒவ்வொன்றுக்கும் தனி இயல்பு ஒன்று உண்டு. ஒரு சமுதாயத்துக்குச் சிறப்பு அளிப்பது அதன் இயல்பேயாம். அந்த இயல்பைத்தான் தேசத்தின் தர்மம் என்றும் சீர் என்றும் நாகரீகம் என்றும் நவிலுகிறோம். திருந்த முடியாவண்ணம் சீர்கெடும் சமூகம் ஒன்று முடிவில் உயிரையும் இழந்துவிடும். இந்திய சமூகம் தனது தனியியல்பை இழந்து அழிந்து போமாயின் அது உலகு அனைத்துக்குமே ஓர் ஒப்பற்ற சேதமாகும் என்பதை சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு பகர்கின்றார் :—

"இந்தியா மாண்டுபோமா? அப்படியாயின் உலகத்தினின்று அருள் ஒளி அணைந்துவிடும், நல்லொழுக்கம் அறவே அற்றுப்போம்; தர்மத்தின்மீது மக்கள் வைக்கும் இனிய வாஞ்சை நசித்துவிடும்; உயர் நோக்கம் ஒழிந்துபோம். இவைகளுக்குப் பதிலாக ஆசையும் போகமுமே தேவதைகளாகத் திகழும்; பணம் அவைகளுக்கு அர்ச்சகத் தொழில் புரியும்; கபடமும் பலாத்காரமும் போட்டியும் இப்புதிய தேவதைகளுக்குற்ற ஆராதனைகளாகும். ஆத்மீகமோ பலியாக வீழ்த்தப்படும். ஆனால் அத்தகைய சீர்கேடு வந்துவிடாது. ஆக்கிரமிப்பு என்னும் சக்தியைக்காட்

டிலும் துயரத்தைச் சகிக்கும் சக்தி பன்மடங்கு பெரியது. வெறுப்பினின்று உதிக்கும் சக்தியைக்காட்டிலும் அன்பினின்று ஊறும் சக்தி எல்லையற்றது. இப்போது இந்தியா புத்துயிர்பெற்று எழுந்திருப்பது வெறும் ஆத்திரத்தால் விளையும் கிளர்ச்சி என்று எண்ணுபவர் ஏமாற்றமடைபவர் ஆவர்."

ஆக, சிறப்பாகத் தனக்கும் பொதுவாக உலகுக்கும் இந்தியத்தாய் ஆற்றும் அரும்பணி யொன்று உளது. அவள் இத்தனை வருஷகாலம் இன்னல்களைப் பொறுமையுடன் சகித்து வந்ததன்மூலம் தனது ஆற்றலையும் அழியாத் தன்மையையும் விளக்கியிருக்கின்றாள். நெடுங்காலம் இன்னல்களில் இடர்ப்பட்ட இந்தியா இனி ஈடேறுதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. வற்றிப்போம் தறுவாயில் இருந்த ஊர்க்குளத்தினுள் நீர்ப்பெருக்கெடுத்தாற்போன்று தேசம் புத்துயிர் பெற்றுவருகிறது. இனி வெறுமனே உயிர் வாழ்ந்திருந்தால் போதாது; வலிவுடனும் ஆக்கத்துடனும் வாழ்தல் வேண்டும்.

### வீரசேனை வேண்டும்

வலிவின்மையும் கோழைத்தனமும் கீழ்மையனைத்துக்கும் காரணமாகின்றன. ஆதலாலேதான் பயங்காளி ஒருவனுக்கு இம்மையில் பழியும் மறுமையில் அதோகதியும் வந்தடையும் என்று சொல்லி, எடுத்த எடுப்பிலே ஸ்ரீ கிருஷ்ணபகவான் மனிதனுடைய கோழைத்தனத்தைக் கீதையில் கண்டிக்கிறார். மேலும்

அவர் அர்ஜுனனுக்குப் புகட்டும் உபதேசங்கள் அனைத்தும் ஆண்மையையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வீரம்செறிந்த அவருடைய சொற்கள் மற்றுமொருமுறை இந்தியமக்களைத் தூக்கத்தினின்று தட்டி யெழுப்புபவை யாகுக. ஏனென்றால் தேச சரித்திரத்தை மாற்றியமைக்கும் வல்லமை வீரனுடைய தனி மகிமையாம். உயிரைத் துரும்பெனக் கருதுவது வீரனுடைய முதலாவது லக்ஷணம். அதாவது, தான் கொண்டிருக்கும் கொள்கையின் பொருட்டு உயிரை முற்றிலும் ஒப்படைப்பது அவனுக்கு வெறும் விளையாட்டுப் போன்றது. எப்படியாவது உயிர் வாழ்ந்திருந்தால் போதுமென்ற எண்ணம் இந்தியர்களுள் வலுத்திருக்கும் இந்நாளில் வீராவேசம் நிறைந்தவர்கள் பெருமிதமாகத் தோன்றவேண்டும். மரணத்தைச் சிறிதும் பொருட்படுத்தாது தான் கொண்ட காரியத்தைச் சாதித்து முடித்த சாவித்திரி போன்ற இளம் மாதரசிகளும், நசிகேதன் போன்ற பால வீரர்களும் கிளம்புதல் அவசியம். சிங்கம் எதற்கும் அஞ்சாது கானகத்தில் கம்பீரமாக உலவுவது போன்று அவர்களுடைய வாழ்வு பராக்கிரமத்துடன் பொலிய வேண்டும். இரும்புபோன்ற தசையும், எஃகுப்போன்ற நரம்பும், வைரம் போன்ற நெஞ்சும், ஆதித்தியன் போன்ற அறிவும் அவர்களுடைய பூஷணமாகும். இன்பகரமாகத் தோன்றிப் பிறகு துன்பம் விளைவிக்கும் ஆசைகளினின்று தங்களைக் காப்பதே அவர்கள் பூணும் விரதம். எது தியாகம் என்பதை அந்த வீரர்களுடைய வாழ்வு

ஓயாது விளக்கிக்காட்டும். அன்னவர்களின் மனம் மொழி மெய்வாயிலாக நிகழும் வினைகள் அனைத்தும் தூய்மைக்கு எடுத்துக்காட்டாக இலங்கும். சமுதாயத்துக்குத் தலைவர்கள் அல்லது தலைவிகள் ஆக வேண்டுமென்று கனவிலுங் கருதாது, தொண்டர்களாகவே இருக்க அவர்கள் இச்சிப்பர். நன்மை தீமை, புகழ்ச்சி இகழ்ச்சி, லாப நஷ்டம் ஆகிய இருமைகளில் அவர்கள் கட்டுண்டு போய்விடார். சிரத்தை என்னும் வாள் அவர்களுக்கு வலிவுடைய ஆயுதமாகும். ஆருயிர்ச் சேவையே ஆண்டவன் வழிபாடு என்கின்ற கொள்கையின்படி அவர்கள் ஒழுகுவார்கள். குணசீலத்துக்கு நிகரான ஆற்றல் வேறு எதுவும் இல்லையென்பதை அவர்களுடைய புனித வாழ்வு நிரூபிக்கும். இத்தகைய நன்மக்கள் அடங்கப்பெற்ற தொண்டர் படைகள் நாடெங்கும் தோன்றுமாயின் சமுதாய வாழ்வே புதியதொரு காட்சி கொடுக்கும். அப்போது தேசம் எல்லாத் துறைகளிலும் திடம் பெற்று உயர்வுற வளரும்.

**உயிர்நாடி நலம்பெறுக**

தேகவலிவும் புஜபராக்கிரமமும் போற்றத் தக்கவைகளேயாம்; தேசமெங்கும் ஓர் ஆதிக்கத்தின் ஆணை செல்லுதலிலும் சிறப்புண்டு; நுட்பமானவைகளை ஆழ்ந்து ஆராயவல்ல நுண்ணறிவு படைத்திருப்பதும் பெரிதே; யந்திரங்கள் வாயிலாக வேலை செய்யும்படி பஞ்சபூதங்களை ஏவுதலும் வேண்டற்பாலதே. ஆனால் இவையாவினும் மிகமிகச் சிறந்தது சிந்தையை யடக்கிச் சான்றோன் ஆதலே என்பதை நாம் மறந்துவிடலா

காது. முனிவர்களையும் தவசிரேஷ்டர்களையும் உலகுக்கு அளிக்கும் பெருமை முன்னுளில் இருந்ததைவிட அதிக மாக வருங்காலத்தில் இந்தியாவுக்கு இருத்தல் வேண் டும். பாரமார்த்திகத் துறையில் முன்னணி வகித்து வரும் பரியந்தம் இந்நாட்டுக்கு இழிவு அல்லது அழிவு ஏற்படாது. ஆத்மீக வாழ்வு இத்தேசத்தின் உயிர்நாடி யாகும். ஜீவநாடி வலுக்க வலுக்கத் தேசமெங்கும் ஜீவகளை பொலியும்.

மதத்தின் பெயரால் தோன்றியிருக்கும் கசடுகளைக் களைந்தெரிந்து விட்டுப் பௌருஷத்தை வளர்க்கவல்ல கொள்கைகளையே எங்கணும் பரப்புதல் வேண்டும். அத்தகைய கோட்பாடுகள் உடலுக்கு உரனளிக்கும்; உள்ளத்தை உறுதிப்படுத்தும்; தன்னம்பிக்கையையும் சுயப்பிரயத்தனத்தையும் ஓங்குவிக்கும். அமைதியோடு கூடிய ஆத்மீக உற்சாகத்தை அவைகள் வளர்க்கும். துறவறம் என்பதன் பொருள் சமுதாயத்தினின்று வெகுண்டு விலகியோடுதலும் சோம்பித்திரிதலும் அன்று. தனது வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் இடையே உள்ள புனித இணக்கத்தை ஓர்ந்து அறிப வனே சான்ருேன். அதைச் செயலில் கொண்டு வருப வனே துறவி. ஏனென்ருல் அத்தகைய அறிவு பிறக்கும் போது பொதுவாழ்வின் பொருட்டுத் தனி வாழ்வை அவன் தியாகம் பண்ணுகிருன். நமது முன்னேர் போற்றிய துறவறம் இதுவேயாம். இத்தகைய தியாக மூர்த்திகள் நிறைந்துள்ள நாடு திரு நிறைந்த நாடாகும்.

அன்பானது உயிர் வாழ்பவை அனைத்தையும் கட்டிப் பிடிக்கிறது, ஒன்று சேர்க்கிறது; வெறுப்போ அவைகளை விலக்கி வைக்கிறது. எது வேற்றுமையை வளர்க்கிறதோ அதை விஷமென்று நீக்குக. எது ஒற்றுமையை உண்டுபண்ணுகிறதோ அதை அமுதென ஆதரித்திடுக. பாரமார்த்திகம் என்னும் அமிர்த சாகரத்திலே உயிர் ஊட்டுவனவாகிய உடன்பாடான தத்துவங்களே நிறைந்திருக்கின்றன. சுவாசிக்கும் காற்றுப் போன்று இவை எல்லார்க்கும் பொதுவானவை. அத்தகைய காற்று எவ்வாறு குற்றமற்றதாய் இருக்க வேண்டுமோ, பருகும் நீர் எவ்வாறு புனிதமாய் இருக்க வேண்டுமோ, உள்ளும் புறமும் உடல் எவ்வாறு அழுக்கற்றதாய் இருக்கவேண்டுமோ அவ்வாறே மக்கள் கொள்ளும் கொள்கையும் மாண்புடையதாய் இருத்தல் வேண்டும். உணவு உடலைப் பேணுவது போன்று உயர் கொள்கை உள்ளத்தை ஓங்குவிக்கிறது. ஆதலால் தேசிய பொக்கிஷமாகிய மேலான தத்துவங்களைப் புல்லிய பழக்க வழக்கங்களினின்று பிரித்தெடுத்து எல்லார்க்கும் வழங்குதல் அவசியம். சீரிய எண்ணத்தினின்று தேசமெங்கும் புத்துயிர் பிறக்கும்.

**உயிரனைத்தும் இறைவன் மயம்**

சுவர் இன்றிச் சித்திரம் இல்லையென்றும், மரமின்றி மலர்களும் கனிகளும் இல்லையென்றும் பகர்கிறோம். அவ்வாறே குடியின்றி நாடில்லை. பொதுமக்கள் ஒவ்வொரு சமுதாயத்துக்கும் உடல் போன்றவர்கள். அவர்களின் நிலைமையொன்றே தேசத்தின் அந்தஸ்தை

உள்ளவாறு விளக்கவல்லது. வானுற ஓங்கி நிற்கும் மாளிகைகளையும், பிரமாண்டமான தொழிற்சாலைகளையும், நானுவிதப் போக்குவரத்து சாதனங்களையும், பிற நவீன வசதிகளையும் கண்டு வியப்படைபவர் தேசத்தின் நிலைமையைத் தெரிந்துகொள்ளமாட்டார். வாழ்வுக்கு இன்றியமையாத உணவு, உடை, ஆரோக்கியம், உழைப்பு, கல்வி, இடவசதி முதலியவைகளைப்போதிய அளவு பொதுமக்கள் பெறுகிறுர்களா என்று பார்ப்பது நாகரீகமுடைய நாட்டின் முதற்கடமையாகும்.

பாமரரின் முன்னேற்றத்தின் வாயிலாகத்தான் இந்திய சமுதாயம் ஈடேறும் என்பதைத் தேசாபிமானிகள் கருத்தில் வைப்பார்களாக. பல நூற்றுண்டுகளாக அவர்களைப்புறக்கணித்த பாபத்துக்குப் பிராயச்சித்தமாக இனி அவர்களைப் போற்றி வணங்கவேண்டும். கடவுள் வணக்கத்துக்கு யக்ஞம் என்பது ஒரு பெயர். யக்ஞம் பலவிதமாக வடிவெடுத்திருக்கிறது. அத்தனைவித வடிவங்களுள் நரயக்ஞம் என்பது ஒன்று. மானுடரை தெய்வ சொரூபமாகப் பாராட்டி அவர்களுக்குப் பணிவிடை செய்வது நரயக்ஞமாகும். மக்கள் மீது பச்சாத்தாபம்கொண்டு அவர்களுக்கு ஏதேனும் கொஞ்சம் உபகாரம் செய்வது நரயக்ஞமன்று. அத்தகைய மனப்பான்மை ஆணவ அகங்காரத்தினின்று வருவதாகும். அதற்குப் பதிலாகப் பேரன்புடன் சாக்ஷாத் பகவானுக்குச் செய்யவேண்டிய திருப்பணிகளை அவனுடைய பிள்ளைகளுக்குச் செய்வது நரயக்ஞம். இத்தகைய எண்ணம் வலுக்கும்போது மானு

டர்பால் நாம் கொண்டுள்ள கொள்கை முற்றிலும் மாறிவிடுகிறது; நம் சுயநலத்துக்கென அவர்களை வாட்டி வதைப்பதற்குப் பதிலாக நமது வாழ்வைச் சமுதாய சேவையின் நிமித்தம் அர்ப்பணம் செய்து விடுகிறோம். வாழ்வைப் பண்படுத்துதற்கான கல்வி வழங்குதல், தொழில் புரிதல், பொருள் ஈட்டுதல், பண்டம் மாற்றுதல், நோய்க்கு இடங்கொடாதிருத்தல் இவையாவும் ஈசுவர ஆராதனை போன்று செய்யப்பட வேண்டும்.

பொதுமக்கள்மாட்டுக் கல்வி பெருமிதமாகப் பரவுமாயின், அவர்கள் விவசாயம் போன்ற தொழில் களை இழிவானவைகளென்று நீத்துவிட்டு மேலான உத்தியோகம் தேட ஆரம்பித்து விடுவார்களென்றும், அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கு மென்றும் பலர் கருதுகின்றனர். தொழில்களில் உயர்வு தாழ்வு உண்டு என்னும் தப்பபிப்பிராயம் கற்றவர் களுக்கிடையிலேயே இதுபோழ்து மிகுந்திருக்கிறது. ஆதலால் அவர்கள் இனிய கிராம வாசத்தைத் துறந்து விட்டு நகரவாசத்தை நாடுகின்றனர். இங்கு அவர்கள் படாத பாடுபட்டுவிட்டு மீண்டும் நாட்டுப்புற வாழ்வை நாடித் திரும்பியோடும் காலம் வரும். தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை யென்கின்ற பாடத்தைக் கற்றுக் கொள்ளாவிடில் மனிதன் கஷ்டப்படுவான். ஆக, அடி மேல் அடியடித்து இயற்கையானது அவனுக்கு நல்லறிவு புகட்டுகிறது.

'सहजं कर्म कौन्तेय सदोषमपि न त्यजेत्' தோஷத்துடன் கூடியதாயிருப்பினும் தனக்குரிய கர்மத்தை ஒருவன் விட்டுவிடலாகாது என்பது ஆன்றோர் வாக்கு. அப்படி விட்டுவிடுவானாகில் அதனால் அவனுக்குக் கேடுவரும். இக்கோட்பாடு இன்று யாண்டும் நிரூபிக்கப்படுகிறது. தொழிலைப் பற்றிய தப்பான எண்ணத்தைத் தவிர்ப்பது நமக்கு முதல் பாடமாகும். பண்பட்ட மனதுக்கு எல்லாத் தொழில்களும் புனிதமானவைகளே. மனதை அங்ஙனம் பண்படுத்தும் கல்வி பரவவேண்டும்.

ஜப்பான் தேசத்துக் குழந்தைகளிடத்து உயர்ந்த கொள்கையொன்று உண்டு. அதாவது விளையாடுதற்கென அவர்கள் வைத்திருக்கும் பொம்மைகளை முழு மனதோடு நேசிப்பார்களாயின் அந்த ஜடப் பொருள்கள் சேதனமுடையவைகளாய், உயிருடையவைகளாய் மாறிவிடும் என்பதாம். இந்த உணர்ச்சி அந்நாட்டுச் சிறுவர் சிறுமிகள் உள்ளத்தில் ஊறிக்கிடக்கின்றமையால் அவர்களிடம் பொம்மைகளை உடைப்பதும் அலட்சியப்படுத்துவதும் கிடையா. இராமபிரான் திருவடி தீண்டியமாத்திரத்தில் சிலையானது அஹல்யை என்னும் மங்கையாக மாறிய மற்றொரு சம்பவத்தை ஈண்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உயிரற்றவைகளுக்கு உயிர் வழங்கும் வல்லமை உள்ளன்புடையார்க்கு உளது என்பது வெளிப்படை. பல்லாண்டுகளாகக் கொடுமைக்கு உட்பட்ட பாமரர்கள் உயிரற்றுக் கிடக்கின்றனர். அன்பு அனுதாபம் என்னும் அமிர்தத்தை

மீண்டும் பெறுவார்களானால் அவர்கள்மாட்டுப் புத்துயிர் பெருகும், உள்ளொளி பரவும், உயிர் வலுக்கும், மாட்சிமையனைத்தும் ஒருங்கே மிளிரும். மெய்யன்புடையார் முன்னிலையில் பறவைகளும் விலங்குகளும் ஜீவபேதத்தை மறந்து ஒற்றுமை பெற்றுவிடுகின்றன. பின்பு பிறவிகளிற் பெரிய மானுடப் பிறவியைப்பற்றிச் சொல்லுவானேன்? நாட்டுமக்கள் மீது அன்பு பாராட்ட வல்லவர்களாக நாம் ஆக வேண்டும்.

### வெளி நாடுகளோடு கூட்டுறவு

தற்பாதுகாப்புக்காகவும், வளர்ச்சிக்காகவும் ஒவ்வொரு தேசமும் இந்நாளில் ஓயாது உழைத்து வருகிறது. அத்துடன் சர்வதேச ஒற்றுமையைப்பற்றிய எண்ணமும் எங்கணும் வலுத்துக்கொண்டிருக்கிறது. முன்னது வெளிப்படையாகவும் பின்னையது மறைமுகமாகவும் இருந்துவருகின்றன. இந்த இரண்டு இயக்கங்களையும் இந்தியா நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் அவசியம். வெளியுலகோடும் நாம் இனி ஒட்டி உறவாடாது இருக்கமுடியாது. ஆனால் வலியவனோடு எளியவன் சம அந்தஸ்துப் பெறமுயலுவது வீண். அது எப்போதும் எளியவனுக்கே இடைஞ்சலாய் வந்துவாய்க்கும். அனுதாபத்துக்கு உரியவனாயிருப்பவன் நிலைத்த கண்ணியத்தைப் பெறமாட்டான். போற்றுதலுக்குரிய பெருமை வாய்க்கப்பெற்றவனே பிறரால் மேன்மையுடன் பாராட்டப்படுவான். ஆதலால் தன்னை ஆதரிக்கவேண்டுமென்ற விண்ணப்

பத்துடன் இந்தியா வெளிநாடுகளுக்குப் போகலாகாது. யாசக புத்தியுடையவர்க்கு மற்றவர்களுடன் சம அந்தஸ்து எங்கும் ஏற்படாது.

சுகபோகத்துக்குச் சாதகமாயிருக்கும் வசதிகளைப் பெருக்கிக்கொண்டே போவதால் வாழ்வு பூர்த்தியாய் விடாது என்பதை உலகெங்கும் இருக்கும் அறிஞர்கள் ஓர்கின்றனர். ஆத்மீகப் பயிற்சியில்லாத சமுதாயங்கள் வெறும் அறிவு மிகுந்த விலங்குக் கூட்டங்கள்போல் ஆய்விடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். போகங்களை வேண்டியவாறு அனுபவித்த பின்னரும் சாந்தி இன்னதென்று தெரியாது சஞ்சலப்படும் உலகத்தவருக்கு இந்தியா அளிக்கும் கொடையொன்று உளது. ஆசைகளை வளர்த்துக்கொண்டு புலன்கள் வழியே போவதால் மனிதன் தட்டழிந்து போகின்றான் என்பதும், அவைகளை அடக்கி உள்முகமாகப் போவதால் அழியாப் பெருநிலை எய்துகின்றான் என்பதுமாகிய பாரமார்த்திகப் பொக்கிஷம் இப்போது உலகுக்குப் பெருந்தேவையாயிருக்கிறது. ஆத்ம ஞானமும் சாந்தமும் அருளும் வேண்டுபவர் இந்தியாவின்மீது கவனம் செலுத்துகின்றனர். இத்தேசத்தவரின் வாழ்வுமுறையிலும் நாகரீகத்திலும் அலாதியான மகிமையிருக்கிறதென்பது இந்நாளில் அவர்களுக்குப் புலப்படுகிறது. ஆதலால் அவர்களுடைய அருட்தாகத்தைத் தணித்து, வாழ்வை மாண்புடையதாக்கி, ஆத்மசாந்தி யூட்டும் பொறுப்பு இந்தியாவைச் சார்ந்தது. கொடைகளுள் ஆத்மதானத்துக்கு உயர்ந்த கொடை எதுவும் இல்லை.

ஒப்பற்ற இக்கொடையை வழங்கவல்லது இந்தியநாடு ஒன்றே. இதை இந்த நாடு முறையாகச் செய்துவருமானுல் உலகம் முழுதுக்கும் இது ஆசாரிய ஸ்தானத்தைப் பெற்றுவிடும்.

அருளையும் பொருளையும் படைத்திருப்பவர் இருமையிலும் இன்பம் எய்துவர். அருள்போன்று பொருளும் நம் நாட்டில் பெருமிதமாயிருக்கிறது. ஆனுல் அதைவேண்டியவாறு கையாளும் முறைகளை மேல்நாட்டவர்களிடமிருந்து நாம்கற்றுக்கொள்ளவேண்டும். பௌதிக ஞானம், யந்திரங்களை நிர்மாணித்தல், திருந்திய தொழில்முறை, சமுதாய ஓர்மை முதலிய தேர்ந்த நவீன அமைப்புகளை நாடி நாம் மேலைநாட்டவரிடம் நண்ணுதல் நன்று.

ஈண்டு மற்ருெரு முக்கியமான விஷயத்தைப்பற்றி நாம் எச்சரிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். நலம் தருபவைகளைக் கற்றுக்கொள்ளுதற்கும் பிறரைப் போன்று பாவனை செய்தற்கும் இடையே பலத்த வேற்றுமையுண்டு. வேந்தனைப்போன்று வேஷம் தரிப்பவன் வெறும்வேஷதாரியேயொழிய வேந்தன் ஆகான். அவ்வாறே வெளிநாட்டாருடைய வாழ்க்கை முறைகளைக் கண்டு மயங்கி, நடையுடை பாவனைகளில் அவர்களைப்போன்று நடிப்பவன் போலியாகின்ருன். அத்தகையவன் என்றைக்கும் பரிகாசத்துக்கு உரியவன். சுய நாகரீகத்திலும் சுயவாழ்வு முறையிலும் பற்றிழப்பவன் செத்தவனுக்கு ஒப்பாவான். வெளிநாட்டவரோடு நாம் இணங்குவது போலிகளாதற்கும் தேசிய

நாகரீகத்தில் பற்றிழுப்பதற்குமாகவன்று. வளரும் விருக்ஷம் ஒன்று நீர் நிலம் காற்று இவைகளின் உதவியை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் மரம் மண்ணாகவோ மழையாகவோ மாறுகிறதில்லை. சொந்த இயல்பையும் வடிவத்தையுமே அது ஓங்குவிக்கிறது. அது போன்று நாம் வெளியுலகினின்று கற்றுக்கொள்ளும் நன்மைகளனைத்தும் நமது நாகரீகத்தை நயப்படுத்துதற் பொருட்டேயாம்.

## இனியவைகளை இணைத்தல்

அளவுகடந்த கட்டுப்பாடு வளர்ச்சிக்கு இடந்தராது. சுவாதீனமே என்றும் வளர்ச்சிக்கு உறுதுணையாகும். பாரமார்த்திகத் துறையில் இந்தியா எல்லார்க்கும் சகல சுதந்திரமும் அளித்திருக்கிறது. ஆஸ்திகனாகவோ, நாஸ்திகனாகவோ, துவைதியாகவோ, அத்வைதியாகவோ, சைவனாகவோ, வைஷ்ணவனாகவோ இருக்கும் உரிமை எல்லார்க்கும் உண்டு. சுவாதீனத்தின் பலனாக லோகாயதம் முதற்கொண்டு அத்வைத வேதாந்தம் வரையில் உள்ள நானாவிதக் கோட்பாடுகளும் சம்பிரதாயங்களும் நாடெங்கும் தோன்றியிருக்கின்றன. ஒவ்வொரு கொள்கையையும் தங்குதடையின்றிப் பிறர்க்குப் புகட்டவும் இங்கு இடமுண்டு. ஆனால் இதேமாதிரி சுதந்திரம் சமூக வாழ்க்கையில் நமக்கு ஏற்படவில்லை. மட்டுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகள் உண்டாக்கப்பட்டுவிட்டன. உண்ணல் உடுத்தல் விவாகம் பண்ணுதல் முதலியவைகளில் யாரும் தன்னிஷ்டப்படி நடந்துகொள்ள முடியாது. லௌகீக

நியதிகளுக்கு உட்பட்டே தீரவேண்டும். இதனால் லௌகீக வளர்ச்சி பெரிதும் தடைப்படலாயிற்று. பழக்க வழக்கம் என்னும் தளையில் மனிதன் கட்டுண்டு கிடக்கின்றான். சமூகச் சிக்குகளும் பெலத்துவிட்டன. இனி வளர்ச்சிக்கு இடைஞ்சலாயிருக்கும் கட்டுப்பாடுகளை நீக்குதல் அவசியம். உண்பது, உடுப்பது, மணப்பது போன்ற வாழ்க்கை அம்சங்களில் உள்ள நலம் பொலங்களை விளக்கிக் காட்டிய பின்பு ஒவ்வொருவனும் தனக்கேற்ற முறையில் நடந்துகொள்ளுதற்குச் சுவாதீனம் அளிக்கவேண்டும். தெளிவுற உரைக்கின் பரதகண்டத்தில் காணப்படும் பாரமார்த்திகச் சுதந்திரமும் மேல்நாட்டு மேன்மக்களிடம் காணப்படும் புனிதம் நிறைந்த லௌகிகச் சுதந்திரமும் ஒன்றோடொன்று இணைக்கப்படுவது நன்று. அத்தகைய சுவாதீனம் தேசிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

திருமகளும் கலைமகளும் இணங்கியிருக்க மாட்டார்கள் என்ற கொள்கை சிலர்க்கிடையில் உண்டு. செல்வமிருக்குமிடத்துக் கல்வி இராது என்றும், அவ்வாறே கல்வியிருக்குமிடத்துச் செல்வம் இராது என்றும் அவர்கள் கருதுகின்றனர். அதேமாதிரி ஆத்மீக வாழ்வும் லௌகீக முன்னேற்றமும் ஒன்றோடொன்று பொருந்தாது என்று எண்ணுவாரும் உளர். ஆனால் உலக சரித்திரமும் சாஸ்திரப் பிரமாணங்களும் இக்கூற்றுகளுக்குச் சான்று ஆகா. ஆக்கமும் அறிவும் வாய்க்கப்பெற்ற மக்களையும் சமூகங்களையும் நாம் யாண்டும் காண்கின்றோம். லக்ஷ்மியும் சரஸ்வதியும்

சேர்ந்து கருணை கூர்வார்களானால் மனிதனுக்குப் பிறகு யாது குறை ஏற்படப்போகிறது? இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமையாத பொருளையும் அருளையும் சேகரிப்பதைவிடச் சிறந்த புருஷார்த்தம் இல்லை. இவைகளைப்பெற முயன்றால் இந்தியா மேலேறுவது உறுதி.

## மும்மதங்களின் மாண்பு

மதங்கள் அனைத்துக்கும் உறைவிடமாவது இந்தியா. வெளிநாடுகளில் தோன்றிய இஸ்லாமிய மதமும் கிறிஸ்து மதமும் இந்நாட்டினுள் தங்கியிருக்க வந்திருக்கின்றன. தம் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதில் அவை முனைந்துள்ளன. ஆனால் இந்தியாவில் தோன்றியுள்ள மதத்தின் தொல்லியல்போ அத்தகையதன்று. நாட்டுக்குள் வந்திருக்கும் புற மதங்களைச் சாந்தமாக எடுத்துத் தன்னகத்து அடக்கிக் கொள்ள வல்லது ஹிந்துமதம். அன்னியமானவைகளை அழிப்பதற்குப் பதிலாகத் தன்மயமாக்கும் இயல்புடையது அது. பொறுமையுடன் வளர்கின்ற கானகத்தோடு அதை ஒப்பிடலாம். மழையும் மூடுபனியும் சூழ்ந்து வந்து காட்டை மறைத்துக்கொள்கின்றன. அதனால் அடவியின் அழகு குன்றியதுபோல் காணப்படுகிறது. ஆனால் இந்த நிலைமையில்தான் மரஞ்செடி கொடிகள் நன்கு வளர்கின்றன. மழையினின்றும் மூடுபனியினின்றும் பெறக்கூடிய பலன் அனைத்தையும் அவைகள் ஏற்றுக்கொள்கின்றன. கேடுபோல் தோன்றும் கார்மேகத்தினின்றும் கடும் பனியினின்றும்

ஆரண்யம் அதிக அழகையும் உயிரையும் பெறுகிறது. அவ்வாறே இஸ்லாமிய மதத்திலும் கிறிஸ்து மதத்திலும் உள்ள நன்மைகளை ஹிந்து மதம் ஏற்றுத் தன்மயமாக்கிக்கொள்ளவேண்டும்.

ஒற்றுமை இஸ்லாமிய மதத்தை அலங்கரிக்கிறது. கடவுள் சன்னிதானத்தில் முஸ்லிம்களுக்கிடையில் உயர்வு தாழ்வு இல்லை, வெறுப்பு வேற்றுமை யில்லை, தனியுரிமை யில்லை, சகோதர பாவனை ஒன்றே உளது என்னும் உயர்கொள்கைகளை அவர்கள் செய்கையிற் காட்டுகின்றனர். இவைகளை ஹிந்துக்கள் ஏற்றுக் கொண்டு மானுடவர்க்கம் அனைத்தையும் ஒரே குடும்பமாகப் பாராட்டுவார்களாக.

அமைப்பிற் சிறந்தது கிறிஸ்து மதம். ஓர் அதிபதியின் ஆணையின்படி நடக்கும் சேனைக்கும் ஆட்டுக் கூட்டத்துக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறதோ அவ்வளவு வித்தியாசம் கிறிஸ்துவர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இடையில் இப்போது இருக்கிறது. ஆயிரக்கணக்கான பேர் எனினும் அவர்கள் ஆலயங்களுக்குச் செல்லுதலிலும், உள்ளே அமர்ந்திருப்பதிலும், கடவுளை வழுத்துதலிலும், பின்பு வெளியேகுதலிலும் எவ்வளவு அமைதி, எவ்வளவு ரீதி பொலிகின்றன! கிறிஸ்துவர்களிடமிருக்கும் தெய்வ நம்பிக்கை மற்ற மதத்தினரிடமும் உண்டு. ஆனால் அவர்களிடமுள்ள ஒழுங்குப்பாட்டை மற்றவர்களிடம் காண்பது அரிது. ஆலயங்களில் கூடுகையில் அவர்கள்

கொள்ளும் அடக்கமும், நேர்த்தியுமே உள்ளத்தைக் கவர்வனவாகின்றன.

ஹிந்துவினிடத்தில் பக்தியிருக்கிறது, விசுவாசம் இருக்கிறது. ஆராதனையின் அடிப்படையான தத்து வத்தைப்பற்றிய அறிவும் அவனிடத்திருக்கிறது. ஆத லால் வேதாந்த நுண்ணறிவுடன் கூட்டிக் கிறிஸ்துவ அமைப்பையும், இஸ்லாமிய ஒற்றுமையையும் அவன் அனுஷ்டானத்தில் கொண்டு வருவானுகில் அவை இந் தியாவுக்குச் சிறந்ததோர் அழகையும் ஆற்றலையும் உண்டுபண்ணும். அப்போது பிளவுபட்ட வாழ்வு அகன்று போம்; புதிய பெருவாழ்வு பிறக்கும். பூலோக சுவர்க்கமாக இந்தியா இலங்கும். சீர்மையைக் காண விரும்புபவர் கவனம் இந்நாட்டின்மிசை செல்லும். நேர்மையை நாடுபவர் இந்நாட்டை நோக்கி நண்ணு வர். இருமைப்பயன் வேண்டுபவர் இத்தேசத்துக்குத் தீர்த்த யாத்திரை பண்ணுவர். இந்தியாவை இத்த கைய உயர் நிலைக்குக் கொணரும் பொறுப்பு யுவர்கள் யுவதிகள் கைவசம் இருக்கிறது. இதை உணர்ந்து அவர்கள் அஞ்சா நெஞ்சத்துடன், தளரா ஊக்கத் துடன், சலியாவுழைப்புடன் தம் கடனுற்ற எழுந்திருப் பார்களாக.

---

# 4. உழைப்பவர் உயிர்வாழ்வர்

## முடிவில்லாத முத்தொழில்

இயற்கைக்கு ஒப்பாகும் சாஸ்திரம் உலகில் வேறு எதுவும் இல்லை. நேரே அதனோடு கலந்திருந்து அறிவைப்பெற வல்லவர்க்கு மெய்ஞ்ஞானம் எளிதில் உதிக்கும். அதன் நடைமுறை அதியற்புதமானது. அதை முற்றும் அறிந்த முன்னோர்கள் மேதக்க முறையில் அதை வர்ணித்திருக்கின்றனர். ஒரு கற்ப ஆரம்பத்தில் பிரம்மதேவர் புவனத்தைப் படைக்கிறார் என்றும், பின்பு திருமால் அதைக் காக்கின்றார் என்றும், இறுதியில் சிவனார் அதை அழிக்கின்றார் என்றும் பொதுவாகப் பாமரரால் கருதப்படுகிறது. இவர்களுள் ஒருவர் தொழில் புரியும்போது மற்றிருவர்க்கு வேலையில்லையென்பது மெய்யன்று. உண்மையில் உள்ளவர் ஒருவர்தான். தொழிலை அனுசரித்து இறைவன் மும்மூர்த்திகளாகப் பாவிக்கப்படுகிறார். மேலும் முத்தொழில்களும் ஏககாலத்தில் நடைபெற்று வருகின்றன. அல்லது ஓரே இயக்கம் முத்தொழில்போன்று காட்சியளித்து வருகிறது. நாம் பிரபஞ்சத்தைப் பார்க்கும்போது கொண்டுள்ள மனப்பான்மைக்கு ஏற்றவாறு அம்மூன்றினுள் ஏதேனுமொரு கிருத்தியம் விசேஷமாகத் தோன்றுகிறது. இயற்கையின் நடைமுறையனைத்தும் சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய முத்தொழிலில் அடங்கிவிடுகின்றன. உயிருள்ளவைகளுக்கும் உயிரில்லாதவைகளுக்கும் யாண்டும் தோற்

றம் என்பதொன்று உண்டு. உற்பத்தியான பின்பு அவைகள் உழைக்கின்றன; அதாவது தத்தம் தொழிலைச் செய்கின்றன. அங்ஙனம் முறை வழுவாது வினையாற்றிவரும் பரியந்தம் அவைகள் வாழ்ந்திருக்கின்றன. பிறகு கடிதில் அல்லது காலக்கிரமத்தில் அவைகள் மறைகின்றன. இவ்வாறு பிறந்து, இருந்து, இறப்பது இயற்கைப் பொருள்களின் அமைப்பு.

ஜடப்பொருள்களில் ஒன்றாகிய மேகத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். ஆவியாக அது ஆகாயத்தில் வந்து கூடுகிறது; கால்வீசி மின்னிப் படர்ந்து இடி முழக்குகிறது. அப்போது பிறப்பு என்னும் நிலையில் அது இருக்கிறது. வர்ஷித்து வையகத்துக்கு மாரியை வழங்கும்போது அதன் நிலை ஸ்திதி என்பதாம். பிறகு மண்ணிலும் விண்ணிலும் மறையும் போது அதற்கு அழிவு ஏற்படுகிறது. செடி ஒன்றில் நேரும் மாறுதல்களும் அத்தகையவைகளேயாம். விதைத்த வித்து மண்ணினுள் காத்திருந்து, கண்ணுக்குப் புலப்படாது பிறப்பெடுக்கிறது. பூமியைப்பிளந்து துளிர்த்து வரும்போதுதான் உயிரின் அறிகுறி அதனிடத்துக் காணப்படுகிறது. பின்பு செடியானது ஓங்கி வளர்கிறது; மண்ணிலும் விண்ணிலுமிருந்து அது உணவை ஏற்றுத் தன்மயமாக்குகிறது. பூத்துக் காய்த்து முதிர்கிறது. அதுபரியந்தம் அதன் நிலை ஸ்திதி என்பதாம். வித்தைப் பெருக்கும் தொழிலைப் பூர்த்தி பண்ணிவிட்டு அது பட்டுப்போகிறது. ஜீவப் பிராணிகளாகிய பறவைகளும், விலங்குகளும், மக்களும்

இவ்வாறே உதித்து, நிலைத்திருந்து, முடிவில் ஒடுங்கி வருகின்றன. உடலமைப்பு எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்ததும், பல்வேறு பிரிவினையுடையதும், நுட்பமானதுமாகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் தொழிலும் பல்வேறு பாங்குடையதாகிறது. உயிர்ப் பிராணிகள் ஆற்றும் வினைகளில் குறைபாடுகள் அதிகரிக்குமாகில் அப்பிராணிகளுக்கு முடிவுகாலம் அணுகி விடும். பின்பு அவைகளுக்கு உழைக்க இயலாது போய்விடும்போது இயல்பாகவே அவைகள் நாசமடைகின்றன. எத்திசை திரும்பிப் பார்க்கினும் இதே அமைப்பை நாம் இயற்கையில் காண்கிறோம். ஜீவிதம் என்பது பிறப்பு-இருப்பு-இறப்பு என்ற மூன்று அங்கங்களையுடைய நாடகமாய் இருந்துவருகிறது. முறை தவறாத முத்தொழிலில் அது முற்றும் அடங்கிவிடுகிறது. வினையின் சிறு சிறு நிகழ்ச்சிகளில்தான் இங்குமங்கும் கொஞ்சம் வித்தியாசம் காண்கிறோம். பொது அமைப்பில் அது எங்கும் ஒரே பாங்குடையதாம்.

### ஸ்திதி என்பதன் பொருள்

இயற்கை முறைகோணாது ஆற்றிவரும் முத்தொழில்களுள் ஸ்திதி அல்லது நிலைத்திருப்பது சம்பந்தமாக நாம் அறிந்துகொள்ளக்கிடக்கும் அரும்பெரும் தத்துவமொன்று உளது. அதாவது வினையும் வாழ்வும் இணைபிரியாதவைகள். ஒன்றுக்கொன்று உற்ற துணையாகின்றன. செய்யும் தொழில் செம்மையாயிருக்குமிடத்து வாழ்வு வலுக்கிறது. உயிர் உறுதி பெற்றிருக்குமிடத்து உழைப்புக்குக் குறைவொன்று

மில்லை. சிசு ஒன்றின் வளர்ச்சியை இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். நல்லுணவை உண்டு செரிக்கும்போது அது உடல் நலன் பெறுகிறது. உடலில் உயிர்நாடி உறுதிபெற்றிருக்கும்போது எளிய உணவினின்றும் பலனடையும் வல்லமை அதன்மாட்டுத் திகழ்கிறது. ஆக, உயிரும் உழைப்பும் ஒன்றையொன்று அனுசரித்து ஓங்கிவருகின்றன.

இவை யிரண்டினுள் முதன்மை வகித்திருப்பது உயிர் என்றும், அது சீர்பெற்றிருந்தால்தான் உழைக்க முடியும் என்றும் மக்கள் பொதுவாகக் கருதுவர். உயிர் நீங்குங்கால் திறமுடைய தேகமும் தானே நின்றுவிடுவது வெளிப்படை. இவ்விதிக்குச் சான்று சரீர வாழ்வில் பெரிதும் காணலாம். ஆனால் உழைக்கும் வகை தெரியாது, அல்லது சோம்பித்திரிந்து உடலையும் உயிரையும் அறவே குலைத்துக்கொள்வாரும் உளர். சரீரத்தைச் சிரமப்படுத்தாது வைத்திருப்பது அதைப் பேணுதற்கு உற்ற உபாயம் என்று பலர் கருதுகின்றனர். உண்பது போன்று உழைப்பதும் உடல் நிலைத்திருப்பதற்கு இன்றியமையாதது என்பதை அன்னவர் அறிகிறார்களில்லை. தேகவலிவு குன்றுவதும் வியாதி வருவதும் பெரும்பாலும் வேலை செய்யாமையாலேயாம். திடகாத்திரமுள்ள தேகமும் நெடிது சும்மா கிடத்தப்படும்போது முடமாகின்றது. உணவை மட்டும் மட்டுக்குமிஞ்சிப் புசித்துவிட்டு உழைப்பு ஒன்றும் இல்லாதிருப்பவர்களுக்கு ஆயுள் சுருங்கிவிடுகிறது.

வேலை செய்யாத உடல், வாழ்வுக்கு உரியதன்று என்பது நானுவிதங்களில் நிரூபிக்கப்படுகிறது.

ஆனுல் உழைப்பு என்பது வெறும் தேகசம்பந்தமானதுமட்டுமன்று. நெற்றிவியர்வை நிலத்தில் விழப்பாடுபடுவதாலேயே வாழ்வு பூர்த்தியாய்விடாது. சரீரத்தைப் போஷிப்பது ஜீவிதத்தின் முதற்படி. மற்று இதினும் மேலாம் நோக்கங்கள் பல உள. அவைகளின் நிமித்தம் உழைப்பதுதான் உயிருக்கு உறுதுணையாகின்றது. ஆகவே உழைப்பு என்பது ஈண்டுப் பரந்த முறையில் பொருள்படுத்தப்படுவதாகும். அறிவு வளர்ச்சி, பரஸ்பர நட்பு, பொது நன்மை, நல்லொழுக்கம், புனிதம் இன்னும் இவைபோன்ற மேலாம் தன்மைகளைப் பெறுதற்குப் பாடுபடுவது உயர்தர உழைப்பாகும். புஜபராக்கிரமம் தனித்திருந்து மக்களுக்கு நிலைத்த நன்மையை விளைவியாது. ஆதலாலேதான் வெறும் துடிதுடிப்பும் தேக வலிவும் படைத்திருக்கும் சமுதாயங்கள் விரைவில் அழிந்துபோவதையும், மேதக்க மனப்பாங்குடைய சமுதாயங்கள் நீடூழி வாழ்ந்திருப்பதையும் வையகத்தில் காண்கிறோம். தேகவலிவு அவசியமன்று என்று கருதுவது சரியாகாது. சுவர் இருந்தால்தானே சித்திரம் எழுதமுடியும்? அவ்வாறே நல்வாழ்வுக்குச் சாதகமாயிருப்பது திறம் படைத்த தேகம். பின்பு அதன்மூலம் மனோவலிமை பெறவேண்டும். ஒரு தேசீய லட்சியத்தின் புனிதத்துக்கும் மேன்மைக்கும் தக்கவாறு அத்தேசம் அழியாத்தன்மையுறுகிறது. இக்கருத்தை யொட்டியே

தான் **தர்மம் யாண்டும் தலைகாக்கும்** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வையகத்தில் எந்நாளும் வாழ்ந்திருக்க விரும்பும் சமுதாயம் நல்வழியில் ஓயாது உழைக்கவேண்டும்; நன்னெறி கடைப்பிடிக்க வேண்டும். உயர் நோக்கத்துக்காக உழைத்துவரும் பரியந்தம் அந்தச் சமுதாயத்துக்கு அழிவு இல்லை; என்றைக்கும் அது நிலைத்திருக்கும்.

### பழைய சமுதாயங்கள் அழிந்தவிதம்

உடலில் அனுவசியமான உறுப்பு எதுவும் இல்லை. ஒவ்வொரு அங்கத்துக்கும் தனித்தனி வேலையிருக்கிறது. இவையனைத்தும் ஒன்று கூடி உழைத்து சரீரத்தை வளரச் செய்கின்றன. ஆனால், வினையாற்றாததும் தேக வளர்ச்சிக்குப் பயன்படாததுமாகிய உறுப்பு தானே அழிந்து போகிறது. பூவுலகில் தோன்றியுள்ள பல்வேறு சமுதாயங்களும் அங்ஙனம் உலக முன்னேற்றத்துக்கு உடந்தையாயிருந்து வருகின்றன. மானுட இயல்புகளுக்கு ஏற்றவாறு நாகரீகங்கள் பல உற்பத்தியாகின்றன. ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு நாகரீகத்துக்கு உறைவிடமாயிருக்கிறது. இவ்வாறு சமூகங்கள் அனைத்தும் ஒன்றுகூடி மானுட வர்க்கத்தை மாண்புறச் செய்கின்றன. ஆனால், சில நாகரீகங்கள் எல்லாக் காலத்துக்கும் பயன்படுபவை யாகா. சில காலங்களில் சிறப்புற்றோங்கிய பின்பு அவை மறைந்துவிடுகின்றன. அப்போது அந்த நாகரீகங்களை ஜீவாதாரமாகக் கொண்டுள்ள சமூகங்களும் க்ஷீணதசையடைகின்றன.

எகிப்து, கிரீஸ், ரோம் முதலியவை மிகப் புராதன நாடுகள். இவைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாகரீகத்துக்கு இருப்பிடமாய் இருந்து வந்தது. ஆனால் ஒவ்வொரு தேசத்தின் வாழ்வுமுறையும் ஏதோ ஒரு காலத்தில்தான் சிறப்புற்று விளங்கிற்று. பழையன விலக்குவதும் புதியன ஏற்பதும் காலத்தின் போக்கு. எகிப்து நாட்டின் வாழ்வுமுறை ஒருகாலத்தில் உலகுக்கே எடுத்துக் காட்டாக இருந்துவந்தது. பிறகு கிரீஸ் நாட்டுக்கும் ரோமாபுரிக்கும் மேன்மை மாறி மாறி வந்தது. ஒரு தேசத்து நாகரீகத்துக்கு மதிப்புக் குறைந்தபோது அந்நாடே நலிவுறலாயிற்று. அதுவுமன்றி அந்நாடும் அதன் நாகரீகமும் அதிலும் மேலான மற்றொன்றில் ஒன்றித்துவிட்டன. பழைய சமுதாயங்கள் இங்ஙனம் ஒன்றில் ஒன்று ஒடுங்கி ஒழிந்துபோயின.

இதினின்று உண்மையொன்று வெளியாகின்றது. அதாவது ஒவ்வொரு சமூகத்துக்கும் ஜீவநாடி போன்று லட்சிய மொன்று இருக்கிறது. அந்த லட்சியம் நலம் தருவதாயிருக்கவேண்டும். சமூகம் நன்கு உழைத்து அதைப் பரிபாலிக்க வேண்டும். இந்த இரண்டு மூல காரணங்களும் ஒழுங்குபட்டிருக்குமளவு சமுதாயத்துக்குக் கேடு ஒன்றுமில்லை. ஆனால் லட்சியம் காலாந்தரத்தில் பயன்படாது போய்விட்டால், அல்லது அதைக் காக்கும் வலிமை சமூகத்துக்கு இல்லாதுபோய் விட்டால் அப்போது நாடு இயல்பாகவே அழிந்துவிடும். உலக சரித்திரம் இத்தத்துவத்தைத் திரும்பத் திரும்ப நிரூபித்து வந்திருக்கிறது.

## இந்திய சமுதாயத்தின் உயிர் நிலை

இந்திய சமூகத்தின் இக்காலத்திய நிலைமை ஒரு விதத்தில் பரிதாபகரமானது. மிகப்பழைய சமூகங்களில் ஒன்று எனினும் அழிந்து போனவைகளின் கூட்டத்தில் இது சேர்ந்ததன்று. நவீன நாடுகள் பல அடைந்திருப்பது போன்று இது மேன்மை யெதுவும் இன்னும் பெறவில்லை. எத்தனையோ ஊழல்களில் உழன்று தள்ளாடி இது காலந்தள்ளி வருகிறது. சென்ற சில நூற்றுண்டுகளாக இந்நாடு அலக்கழிந்தவாறு வேறு எந்நாடும் எக்காலத்திலும் அலக்கழிந்ததில்லை என்று உறுதி கூறலாம். உட்பகைகளினுலும், பிணக்குகளினுலும், படையெடுத்து வந்தவர்கள் சுமத்திய கொடுமைகளினுலும் இது துய்த்த துன்பங்கள் கணக்கில் அடங்குபவை ஆகா. இத்தனை இன்னல்களில் இடர்ப்பட்டும் இந்நாடு உயிர் வாழ்ந்திருப்பது பேராச்சரியமே யாம். தவிர, இதினின்று இதன் உயிர் நாடிக்கு ஊறு விளையவில்லை யென்பது வெளியாகின்றது. பாரமார்த்திகம் தொன்று தொட்டு இத்தேசத்தின் உயிர்நிலையாகவும் உயர் நோக்கமாகவும் இருந்து வருகிறது. அதாவது மக்கள்மாட்டுள்ள தெய்வத் தன்மையை ஓங்குவிப்பது இந்நாட்டின் லட்சியமாகும். இது எக்காலத்திலும் பயன்படுவதாகையால் இந்த லட்சியத்தை ஜீவநாடியாகக் கொண்டுள்ள இந்திய சமூகத்துக்கு என்றும் அழிவில்லை. ஆனுல் இதை நன்கு கடைப்பிடியாமையால் கேடுகள் பல கிளம்பியுள. இந்தியா அடைந்திருக்கும் கீழ்மைக்குக் காரணம்

மட்டுக்குமிஞ்சிய ஆத்மீகம் என்று பலர் ஆத்திரப்பட்டு எண்ணுகின்றனர். உண்மையில் நாட்டின் நலிவுக்குக் காரணம் அளவுகடந்த ஆத்மீகமன்று; ஆத்மீகத்தைப் புறக்கணித்ததும் முறை தவறிக் கையாண்டதுமே அதன் கேட்டுக்குக் காரணமாகும். மக்களைத் தேவர்கள் போன்று பாராட்டுவது ஆத்மீகம் அல்லது தர்மம்; அடிமைகளாகப் பாராட்டுவது அதர்மம். இதைப்பற்றி சுவாமி விவேகானந்தர் பகர்வதாவது:

"பொதுமக்களை அலட்சியம் பண்ணிவருவது தேசீயபாபமாகும்; நாம் வீழ்ந்ததற்கு அதுவும் ஒரு காரணமாகும். பொதுமக்களுக்கு நல்ல கல்வியும், போதிய அளவு உணவும், அன்புகந்த பராமரிப்பும் இல்லாதிருக்கையில் அரசியல் கிளர்ச்சிகள் எவ்வளவுதான் செய்தபோதிலும் அவைகள் சிறிதேனும் பயன்படா. நமது கல்விக்காக அவர்கள் வரி செலுத்துகிறார்கள்; நமக்காக அவர்கள் ஆலயங்கள் கட்டுகிறார்கள். இவைகளுக்குக் கைம்மாறாக நாம் அவர்களை உதைத்துத் தள்ளுகிறோம். அவர்களை நாம் முற்றிலும் அடிமைகளாக்கிவிட்டோம். இந்தியா மீண்டும் முன்னேற்றமடைய வேண்டுமானால் அவர்களுக்காக நாம் உழைக்க வேண்டும்."

ஆக, இந்திய சமுதாயம் என்கிற உடலெங்கும் நல்வாழ்வு என்கிற உயிர் பரவுதல் அவசியம். அது வெறும் பிரசங்கத்தாலும், கட்டுரைகளாலும் வருவதன்று. மக்கள் வாழும் வாழ்வுதான் பரஸ்பர

உதவி அல்லது ஊறுசெய்வதாகின்றது. மானுடர் எல்லோரையும் மேலோராக்குவது வைதீகம். அந்த வைதீகம் இனிப் பேச்சளவில் நின்றுவிடலாகாது. வைதீகத்தில் பற்றுடையார் அனைவரும் பணிவுடன் பாமரருக்குச் சேவைபுரிந்து, அதன் மூலம் மேன்மை யுற வேண்டும். பொதுமக்கள்பால் வாழ்வுக்குப் பயன்படுகிற கல்வி வழங்குதல், பொருளாதார, சுகா தாரத் துறைகளில் அபிவிருத்திகள் செய்தல், ஜாதிப் பிணக்குகளைக் குறைத்து அன்பைப் பெருக்குதல் இவைபோன்ற திருப்பணிகள் முன்னணிக்கு வருவது முற்றிலும் அவசியம். க்ஷீணதசை யடைந்திருக்கிற இந்நாளில் நாடு வேண்டுகிற வேலைத்திட்டம் இதுவே யாம். இம்முறையில் மக்கள் உழைத்து வருவார்க ளானால் நாம் மீண்டும் உய்ந்து உயிர்வாழ்வது உறுதி.

### மடாலயங்கள்

இந்து தேசசரித்திரத்தில் அரசாங்கங்களைவிட மடாலயங்கள் மேலான ஸ்தானம் வகித்து வந்திருக் கின்றன. துறவியின் முன்னிலையில் வேந்தனும் துரும்பு போன்று அடங்கி ஒடுங்கி இருந்துவந்தது தேச லட்சி யத்தைத் தெளிவுறுத்துகிறது. மன்னர்களின் வைப வங்கள் தத்தம் மாகாணங்களோடு நின்றுவிட்டன. பரதகண்டம் முழுதும் ஒரே ஆட்சியின்கீழ் இருந்தது ஏதோ சில காலங்களிலேதான். ஆனால் சமய ஆசாரியர் அநேகரது தெய்வீக ஆதிக்கம் தேசமெங்கும் எக்காலத் திலும் பரவி வந்திருக்கிறது. அரசர்களும் அப்பெரி யார்களது ஆணையைமீறி நடவார். சமுதாய வளர்ச்

சிக்கும் தேசமுன்னேற்றத்துக்கும் இன்றியமையாத நன்னெறிகள் யாண்டும் மடாலயங்களினின்று உபதேசித்தருளப்பட்டன. பண்டைக்காலம் தொடங்கி இப்புண்ணிய ஸ்தாபனங்கள் ஆற்றியிருக்கும் அரும் பணிகளை நீக்கிவிட்டால் பரதநாட்டில் பண்பு ஒன்றும் இல்லாது போய்விடும்.

அத்தகைய ஒப்பற்ற உயர்நிலை வகித்த மடாலயங்கள் இப்போது இருளில் மறைந்து கிடக்கின்றன சமுதாயத்தினர்க்கும் மடாதிபதிகளுக்கும் இடையே இருந்த இணக்கம் இப்போது பெரிதும் அகன்றுவிட்டது. முந்தையவர்கள்மீது பிந்தையவர்கள் வைத்திருந்த அதிகாரம் அறவே அற்றுப்போயிற்று எனலாம். மடங்களை அணுகிவரும் சிறுபான்மையோர் சமுதாயத்துக்குப் பயன்படுபவரும் அல்லர்; பொறுப்பாளரும் அல்லர். ஒட்டுண்ணிக் கூட்டத்தார் (Parasite population) என்று அவர்களிற் பெரும்பாலரைப் பற்றி பகர்வது மிகையாகாது. தமோகுணம் செறிந்து, சோம்பலுற்றுச் சும்மா கிடப்பதை சத்வகுணம் நிறைந்த சகஜ சமாதியென்று இவர்களிற் பலர் கருதி ஏமாற்றமடைந்து வருகின்றனர். பொது நன்மைக்காகவென்று அந்நாளில் மடாலயங்களின்மீது வாரிக் குவிக்கப்பட்ட செல்வம் இந்நாளில் பாழடைந்தும் விரயமாயும் வருகிறது. தேசிய லட்சியமாகிய உயர் தன்மைக்கும், சீரிய வாழ்வுக்கும், புனிதத்துக்கும் உறைவிடங்களாயிருந்த ஸ்தாபனங்கள் இப்போது சக்தியற்றுச் சும்மாகிடக்கின்றன.

காலவேற்றுமைக்கு ஏற்றவாறு சமுதாயத்துக்குச் சேவைபுரிய இயலாதிருப்பதே இத்தகைய வீழ்ச்சிக்குக் காரணமாகும். இப்போது நாட்டு நன்மைக்காக வேண்டப்படுவது ஆடம்பரமான அபிஷேகமும், பாத பூஜையும், முத்துப்பல்லக்கில் ஊர்வலமும் அல்ல. தேசத்தில் செல்வம் மிகுந்து, பேராக்கம் படைத்திருந்த காலத்தில் இவ்விலையுயர்ந்த வைபவங்களுக்கு இடமிருந்தது. ஆனால் பார்க்குமிடமெங்கும் பிணியும், வறுமையும், அக்ஞானமும் மிகுந்திருக்கும் இந்நாளில் அன்பும் அனுதாபமுமுடைய யார்தான் இந்த ஆடம்பரங்களை விரும்புவர்? தீர்த்தயாத்திரை போய்க் கொண்டிருந்தபோது தரித்திரர்களைக் காணலுற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணர் பரிந்து அவர்களுக்கிடையே உட்கார்ந்துகொண்டார். போதிய அளவு உணவும் உடையும் ஒரு பிரபுவால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பின்புதான் அப்பெரியார் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். நமது மடாதிபதிகளுக்கு இத்தகைய உள்ளக் கசிவு ஏற்படவேண்டும். சாஸ்திரத்துக்கு எத்தனை விதங்களில் வியாக்கியானம் பண்ணமுடியும் என்பதை ஒட்டியுள்ளதன்று இந்தியாவின் விமோசனம். நலிவுற்றிருப்போர்க்கு நல்ல நிலைமையில் இருப்போர் செய்யும் தியாகத்துக்கு ஏற்றவாறு தேசம் கடைத்தேறும். தரித்திரவேடம் பூண்டு, நடமாடுங்கோயிலில் குடிகொண்டிருக்கும் நாராயண சேவை செய்ய மடாதிபதிகள் முன்வருவார்களாக. அத்தகைய மனப்பாங்குடன் உழைக்க அவர்கள் ஆரம்பிக்கும்போதே மடங்

கள் மீண்டும் புத்துயிர் பெறும்; சமுதாயத்திலும் அவை முன்னணி வகிக்கும். ஆதலால் மடாலயங்கள் எந்நாளும் மேன்மையுடன் நிலைத்திருக்க வேண்டுமானால், காலத்துக்கேற்றவாறு உழைக்கும் வல்லமையை அவைகள் பெறுவது அவசியமாகும்.

***அரசாங்கங்கள்***

உலகில் யுகந்தோறும் எத்தனையோ அரசாங்கங்கள் தோன்றித்தோன்றி மறைந்துவந்திருக்கின்றன. அவைகளின் வரலாற்றை ஆழ்ந்து ஆராயுமிடத்து உழைப்பவர் உயிர்வாழ்வர் என்னும் உண்மை நன்கு விளங்கும். யாண்டும் சமூக நன்மைக்காகவென்று அரசாங்கம் அமைக்கப்படுகிறதேயொழிய, அரசாங்கத்துக்காகவென்று சமூகம் வாழ்ந்திருப்பதன்று. இக்கூற்றுக்கேற்ப நாட்டினுள் நலமும், அன்பும், இன்பமும் பெருகுமாறு உழைக்கின்ற அரசாங்கம் எல்லாவிதங்களிலும் மேன்மையும் வலிவும் உறுகின்றது. மக்களின் மகிழ்வும் அபிமானமும் அதன் உயிர்நாடிகளாக இலங்குகின்றன. அவர்களின் ஒத்துழைப்பு அதற்கு உடல்போன்றதாகும். இங்ஙனம் தன் கடனாற்றி வரும் பரியந்தம் அரசாங்கம் திட்பமுற்று வாழ்ந்திருக்கிறது. பிறகு உடலைக்குலைப்பவன் உயிருக்கே ஆபத்து விளைவித்துக்கொள்வதுபோன்று அரசாங்கம் சமூக நன்மையை மறந்துவிடுகிறது. அப்போது சிறுபான்மையாரது நன்மையை முன்னிட்டுப் பொதுஜனங்கள் நானாவிதங்களில் துன்புறுத்தப்படுகின்றனர். அவர்களதுசொத்து சுதந்தரங்களெல்லாம் சிறிது சிறிதாகக்

கொள்ளைகொண்டு போகப்படுகின்றன. சமூகப் பாதுகாப்பு என்னும் கண்ணியப் பெயர் வைத்துக்கொண்டு கொடுங்கோல் ஆட்சி மக்கள்மீது சுமத்தப்படுகிறது. ஆட்சிமுறைக்கு எப்பெயரிட்டு அழைத்தால்தான் என்ன ?

அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

குடிகள் படும்கஷ்டத்தால் அரசாங்கத்துக்கு விளையும் கேட்டை ராணுவபலத்தாலும், சட்டதிட்டங்களாலும், வேறு எந்தவிதப் பாதுகாப்பாலும் விலக்கமுடியாது. அரசாங்கம் ஒன்று நிலைத்திருக்க வேண்டுமானுல் அது யாண்டும் குடிகளின் சுகத்துக்கும் நன்மைக்குமாகவே உழைக்கவேண்டும். பொது நன்மையின் நிமித்தம் கடனாற்றுதல் அரசாங்கம் நீடூழி வாழ்ந்திருப்பதற்கு உற்ற உபாயமாகும்.

### அழிந்துபோக வழி

பயன்படுமாறு தொழில் புரிந்து வருதலே வாழ்வுக்கு உற்ற உபாயம் என்னும் விதியினின்று மற்ருெரு உண்மை வெளியாகிறது. அதாவது ஏதேனுமொரு அவயவத்தை, ஒரு மனிதனை, ஒரு இயக்கத்தை அல்லது ஒரு சமூகத்தை அழிப்பதற்குக் கோரச் செயலாகிய கொல்லல் என்பதை எப்போதும் கையாளவேண்டும் என்பதில்லை. அதனதன் தொழில் புரியா முறையில் அவைகளை வைத்துவிட்டால் அவைதாமே அழிந்துபோம். அவயவங்களில் கால் ஒன்றைப் பாழாக்க

வேண்டுமானால் அதை வெட்டி நீக்க வேண்டும் என்பதில்லை. அதற்கு வேலை யொன்றும் கொடாவிடின் அது தானே ஊனமாய்விடும். மனிதன் ஒருவன் என்றைக்கு யாருக்குமே பயன்படாது போய்விடுகிறானோ அன்று அவன் நடமாடும் பிணமாய்விடுகிறான். ஒரு இயக்கம் அல்லது கழகத்துக்குப் பிரயோஜனகரமான வேலைத் திட்டமும் வினையும் இல்லாது போய்விடும்போது அது இயல்பாகவே நசித்துவிடுகிறது. அரசாங்கம் ஒன்றை ஜனங்கள் பயன்படுத்திக்கொள்ள மறுத்துவிடுவார்களானால் அது கணப்பொழுதில் அழிந்துபோம். ஒரு சமுதாயத்துக்குப் பிரத்தியேகமான நாகரீகமும், உயர் நோக்கமும், வாழ்வு முறையும் இல்லாது போய்விடும் போது அது ஏனைய சமுதாயங்களில் ஒன்றித்து அல்லது ஒடுங்கிவிடுகிறது. இவ்வாறு அதனதன் தொழில் புரியாவண்ணம் தடுக்கப்படுபவைகள் தாமே தட்டழிந்து போகின்றன. ஆதலால் பொருள்களும், மனிதர்களும், சமுதாயங்களும், அரசாங்கங்களும் பயன்படாத நிலையொன்றை அடையும்போது அவைகளுக்கு அழிவு காலம் அணுகிவிட்டது என்பது வெளிப்படை.

### தேவ ஆராதனை

காக்கும் தொழில் என்றும் உலகத்தை ரக்ஷிக்கும் கடவுளினுடையது. ஆதலால் திடம்பெற உயிர் வாழ்ந்திருக்க விரும்புபவர் திருமாலை வழுத்துவது அவசியமாகும். ஆனால், அவரை வழிபடும் முறையும் ஒன்றுளது. வெறும் முகஸ்துதி பண்ணிக்கொண்டிருக்கும் வேலையாள் எஜமானனிடத்தில் நிலைத்திருக்க முடியாது.

தலைவனுக்குவந்த திருப்பணியாற்றுவது தாசனது கடமையாகும். அங்ஙனம் வேலை செய்பவனைத் தலைவன் யாண்டும் ஆதரிக்கிறான். உலக கிருத்தியத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் மேலாம் தொழில் ஒன்று உளது. அது அவனது ஸ்வதர்மம் என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொருவனும் ஒழுங்காகத் தன் கடனாற்றும்போது இவ்வையகமே வைகுண்டமயமாகக் காட்சி தரும். ஆதலால், தர்மம் தழைத்தோங்குமாறு உழைப்பது உலகரக்ஷகனுக்கு உவந்த பூஜையாகும். அவ்வாறு உழைப்பவர் அல்லல்களினின்று விடுபட்டு உயிர் வாழ்ந்திருப்பர். வாழ்வுக்கு மூலகாரணமாகிய தர்மத்தில் நிலை நிற்பது ஒன்றே தம் கடமையாகும். இரும்பு போன்ற தசையும் எஃகு போன்ற நரம்பும் படைத்து அவைகளை உலக நன்மைக்காகப் பேணுவது சரீர சம்பந்தமான தர்மமாகும். அஞ்சா நெஞ்சமும் நுண்ணறிவும் படைத்து அவைகளை நல்வழியில் செலுத்துவது உள்ளத்துக்கேற்ற தர்மமாகும். தனி மனிதனது வாழ்வு பொது நன்மைக்கு உடந்தையாயிருக்கும்போது அது அறநெறியில் நிலைநின்ற வாழ்வாகும். மனிதத் தொகுதியே சமுதாயமாகின்றது. சமுதாயத்துக்குச் செய்யும் சேவையே நல்ல தேவ ஆராதனையாகின்றது. ஆதலால் நல்லார் நிறைந்துள்ள கழகங்களும், அரசாங்கங்களும், சமூகங்களும் என்றும் நலம் தருவனவாகின்றன. திருவினையின் பயனாக அவை அழியாத்தன்மை எய்துவதும் உறுதி. எனவே வாழ்வுக்கு உறுதுணையாகின்ற நல்லறம் பெற மக்கள் எந்நாளும் உழைத்திருப்பார்களாக.

# 5. தலைவன் ஆவது தகைமையால்

## தகாத ஆசை

மேலாம் பதவியொன்று வந்து வாய்க்குமிடத்து அதை ஏல எல்லாரும் ஒருப்படுகின்றனர். ஆனால் அப்பதவிக்கேற்ற பண்பும் பயிற்சியும் பெற விரும்பு வாரைத்தான் காண்கிறோமில்லை. தெருவிலே திரியும் பாமரன் ஒருவனுக்குத் தொண்டமான் பதவி அகப் படப்போகிறதென்றால் அதை ஏற்க அவன் எவ்வளவு ஆர்வத்துடன் முற்படுகிறான்! உடனே அவனது உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள்தான் வியக்கத் தக்கவைகளாகும். அதுபரியந்தம் அவன் புசித்துவந்த எளிய உணவும் வசித்திருந்த கூரை வீடும் அவனது மனத்தகத்தைவிட்டுப் பறந்தோடிவிடும். இந்திர ஜாலம்போன்று திடீரென்று இராஜபோகமும், கூட கோபுரமாளிகையும், ஏவலாளர் புடைசூழ சிம்மாசன மிசை வீற்றிருப்பதுமே அம்மனிதனது மனக்கண்ணெ திரே வந்து காட்சி கொடுக்கும். அரச பெருமானது பொறுப்பு என்ன என்பதுபற்றி அவன் சிந்திக்கிறா னில்லை. நாட்டிலே நலிவொன்றும் நிகழாதும், குடி களுக்குக் குறையொன்றும் நேராதும் காப்பது காவல னது கடமையென்பதை அவன் கணமேனும் கருதான். ராஜ்ய பரிபாலனம் பண்ணும் பொறுப்பு எவ்வளவு கடினமானது! அது சம்பந்தமாகத் தான் ஒருவிதமான பயிற்சியையும் பெறக்கிடையாது என்பதை அப்பா மரன் தெளிந்தறிகிறானல்லன். பொதுவாக மாந்தர்

பால் படிந்துள்ள குறை இதுவேயாம். இது போழ்து நம் நாட்டிலே நேர்ந்துவரும் நிகழ்ச்சிகள் தேச முன்னேற்றத்துக்கு மிக முக்கியமானவைகள். ஆனால் நிர்வாகிகளாய் இருந்து அவைகளை நடாத்த விரும்பும் மக்கள்தான் இன்னும் போதியவளவு தகைமை பெறாதவர்களாயிருக்கின்றனர்.

## தகுதிவாய்ந்த தலைவன் தேவை

பழைய, இயற்கையோடியைந்த, அமரிக்கையான, தனித்த, போட்டியற்ற வாழ்வுமுறை இப்போது விரைவில் மறைந்துவருகிறது. புதிய, செயற்கை மயமான, பதைபதைப்பான, ஐக்கியம் கோலுகிற, போட்டி போடுகிற வாழ்வுமுறை நாள்தோறும் வலுத்துவருகிறது. இதற்கு அறிகுறியாக நகரபரிபாலனம், ஸ்தல ஸ்தாபனம், மாகாண நிர்வாகம், சமுதாய சீர்திருத்தம், அரசியல்வாதம், கல்வித்துறை, சன்மார்க்க போதம், விவசாயம், கைத்தொழில், பொருளாதாரம், வர்த்தகம் இஃதோரன்ன புதிய தொகுப்பு வாழ்க்கைமுறைகள் உருவெடுத்து வருகின்றன. யாண்டும் தங்களது முன்னேற்றத்துக்குப் புதிய அமைப்பு இன்றியமையாதது என்பதை மக்கள் சொல்லாமலே அறியவருகின்றனர். உள்ளம் தூண்டுதற்கு ஏற்பத் தங்களைச் செய்கையில் கொண்டுசெலுத்த வல்லவர்கள் இருப்பரேல் பிற்போக்கடையாத பெரும் பயனை நாடு விரைவில் பெற்றுவிடும். பஞ்சமொன்று நேருங்கால் கிடைக்கின்ற ஏதேனுமொரு உணவுப் பொருளைப் பசித்திருப்பவர் ஏற்பது இயல்பு. தகுதியுடைய தலை

வர்களுக்கு இந்நாளில் அத்தகைய தேவை ஏற்பட்டிருக்கிறது. சேவையின் நிமித்தம் முன்னணிக்கு வருபவர்களுக்கெல்லாம் சமுதாயம் இடங்கொடுக்கிறது. அங்ஙனம் தொண்டுபுரிய வருபவர்களிற் பலர் தங்களது பொறுப்பு எத்தகைய மேலாம் பாங்குடையதாக இருக்கவேண்டும் என்பதை எண்ணிப் பார்க்காதவர்களாயிருக்கின்றனர்.

### கீர்த்தி ஒண்ணாது

நற்காரியங்கள் அனைத்துக்கும் இடைஞ்சலாக இருப்பது பதவியின் பகட்டேயாம். பல்வேறு வடிவெடுத்து அது மக்களை மயக்கிய வண்ணமாய் இருக்கிறது. உத்தம புருஷர்களுங்கூட சில சமயங்களில் கீர்த்தி என்னும் மாயையின் வலையில் அகப்பட்டுவிடுகின்றனர். புகழால் தூண்டப்பட்டு அவர்கள் சமுதாய சேவைக்கு முன்வருகின்றனர். எத்தனையோ விதங்களில் அது ஊக்கமளிக்கிறது. யாண்டும் மக்களால் பாராட்டப்படுவது; சென்றவிடமெல்லாம் சிறப்பு; கூட்டம் ஒவ்வொன்றிலும் முதன்மை; மகாநாட்டில் முன்னணி; கேட்போர் திகைத்திட அரங்கங்களில் பிரசங்கங்கள் பொழிதல்; பார்ப்போர் பிரமித்திட ஊர்வலம் போதல்; அவையின்கண் மாலை சூட்டப்பெற்று உபசாரம் பெறுதல்; பத்திரிகைகளால் போற்றப்படுவது; பட்டங்கள் பெறுவது; இவைபோன்ற மேன்மைகள் யாரைத்தான் மயங்கிடப் பண்ணமாட்டா! ஆனால் நாடிய கருமத்தில் சித்தியடைய வேண்டுமென்ற கருத்துடையவர்கள் கீர்த்தி என்கிற விக்கினம்

தங்களது உள்ளத்தை வந்து மறையாது காக்கவேண்டும். சமுதாய சேவையில் பிரவேசிப்பவர்கள் செய்ய வேண்டிய விக்கினேசுவர பூஜை இதுவேயாம். தன் பிள்ளைகளைப் பேணுவது தன் கடனெனத் தாய் ஒருத்தி கருதுகிருள். உயிர் இருக்கும் பரியந்தம் ஓயாது அவள் அத்திருத்தொண்டு புரிந்து வருகிருள். பிள்ளைகள்மாட்டிருந்து கைம்மாறு எதையும் அவள் எதிர்பார்க்கிருளில்லை. அவள் ஆற்றும் வினையை உயர்ந்ததென்று ஊரார்ரெல்லாம் கூடிப்போற்றினதால் அவளுக்கு ஆவதென்ன? ஈழானதென்று தூற்றிஞல் தான் என்ன? தாய் ஆற்றும் திருப்பணியில் புகழ்ச்சி இகழ்ச்சி ஆகிய இரண்டும் பொருள்படாதவைகளேயாம். தலைவன் ஆக விரும்பும் ஒருவன் தாயினது பாங்குடன் உலகுக்கு உழைக்கவேண்டும். எத்தனை பேர் இத்தகைய பண்பு அடையப் பெற்றிருக்கின்றனர் என்பதுதான் கேள்வி.

## பொருமை தவிர்

வெறும் புகழ் என்னும் கயிற்றிலே கட்டுண்டு போவார்களது சாதிப்பானது குறைந்து போய்விடுகிறதேயொழிய அவர்களால் உலகுக்குக் கேடு ஒன்றும் விளைவதில்லை. ஆனல் புகழ்வேண்டுவதோடு பொருமை என்னும் பேய்க்கு அடிமையாவார் பலர் உண்டு. தமக்கு ஒப்பு உயர்வுடையார் யாரையும் பார்த்துச்சகிக்க அவர்கள் ஒருப்படுகிறதில்லை. எத்துறையிலும் தாங்களே முதன்மை வகிக்கவேண்டுமென்று அன்னவர்கள் அவாவுறுகின்றனர். குறுகிய நோக்கமும் தற்பெருமையில்

வாஞ்சையுமே யாண்டும் குடிகொள்கிறது. இப்பரந்த உலகில் மேதக்கார் எத்தனைபேர் தோன்றிடினும் அவர்களனைவருக்கும் சிறப்புற்றிருக்க இடமுண்டு என்பதைப் பொறாமைக்காரர் அறிவதில்லை. நாட்டின் நலங்கருதி இயக்கங்கள் பல கிளம்புகின்றன. அரும் பெரும் திட்டத்துடன் உதிப்பவைகள் பின்பு சின்ன பின்னமாகப் பிளவுபட்டுப் போகின்றன. இதற்குக் காரணம் இயக்கங் கோலுபவர்கள்பால் உள்ள பொறாமையேயாம். தனக்கு ஒப்பான ஒருவன் தலைவனாகத் திகழ்வது மற்றொருவனுக்குப் பிடிப்பதில்லை. உரிமையிழந்த அடிமைகளிடத்தில் இத்தகைய மனப் பாங்கை யாண்டும் காணலாம். நம் நாட்டிலே இப் பிணி நெடுநாளாக இருந்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக அடிமை வாழ்வில் உழன்றிருந்தவர்களிடம் வீரத்தையும், பொறையையும், பெருந்தன்மையையும் எதிர்பார்ப்பது எங்ஙனம்? அடிமைத்தனமும் ஔவியமும் இணைபிரியாதவைகள். ஒன்று உள்ள இடத்தில் மற்றொன்றும் இருப்பது இயல்பு. பொறாமை என்னும் நோய் தேசமெங்கும் பரவியுள்ளது. இதைப் போக்க முயலவேண்டும்.

### சிறந்த வலிமை

> **ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே — நம்மில்**
> **ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே**

என்றார் தமிழ்த் தேசாபிமானக் கவிஞர். இந்த ஒற்றுமையானது புற உலகிலிருந்து பெறுவதன்று. சன்மானமாக இதை நமக்கு அளிப்பார் மண்ணுலகி

லும் இல்லை, விண்ணுலகிலும் இல்லை. மேலும் வெளி யுலகு நம்மீது சுமத்துகிற இடைஞ்சல்களைப் போக்க நாம் ஒன்றுபடுவது நிலைத்த ஒற்றுமையாகாது. அது வெறும் வெளிப்பூசலாய்ப் போய்விடும். பாகிய உபத் திரவம் நீங்கின பின்பு நாம் மீண்டும் ஒருவரை யொரு வர் வெகுளுவதாக முடியும். அது முறைமையாகாது. நமது உள்ளப்பாங்கை நாம் அடியோடுமாற்ற வேண் டும். நன்றே வரினும் தீதே வரினும் நம்மவரை நேசிக்க, அவர்களுக்கு உறுதுணையாய் நிற்க நாம் கற்க வேண்டும். ஆங்கிலர்களும் ஜப்பானியர்களும் தொகை யில் சிறுபான்மையரேனும் அவர்கள் வல்லரசர்களான துக்குக் காரணம் அவர்கள்பால் உள்ள ஒற்றுமையே யாம். அவர்கள் எண்ணும் எண்ணங்களும் செய்யும் செய்கைகளும் எல்லாம் தங்கள் தேச நன்மைக்காகவே யாம். பிறருக்கு அடிமையாகலாகாது என்கின்ற கொள்கையில் அவர்கள் வளர்கின்றனர். இன்றைக்கு ஜப்பான் அடிமைப்பட்ட நாடுபோன்று தென்படு கிறது. மனப்பான்மையில் அந்நாட்டவர் யாருக்கும் அடிமைப்படவில்லை. இந்தியர்களோ கோடானுகோடி பேர்கள். ஒவ்வொருவனது மனமும் ஒவ்வொரு போக்கிலே போய்க்கொண்டிருக்கிறது. இரண்டு இந்தியர்கள் சொற்பகாலமாவது ஒரே பாங்குடன் இருக்கவல்லவர்கள் ஆகார். ஒரே மனப்பாங்குடைய நாடு பேராற்றல் மிகப்பெறுகிறது. அந்நாடு நிகழ்த்துவ தெல்லாம் ஒரு யாகத்துக்கு ஒப்பாகும். நாடிய கரு மங்களிலெல்லாம் வெற்றி அவர்களைச் சார்கிறது.

ஐக்கிய வாழ்வின் இரகசியம் இதுவேயாம். இப்போது இந்தியா தம் தேசமக்களை யாண்டும் தெய்வமாகக் கொண்டாடும் பான்மை பெறவேண்டும். இனி வருங் காலத்து மதக்கோட்பாட்டில் இது முதன்மையான தத்துவமாக இலங்கப்போகிறது.

### பொது நலத்தில் தனி நலம்

பரதகண்டம் ஈட்டிய தவத்தின் குறை மற்றொன்று உண்டு. நாடு நலம் ஏதேனுமொன்று பெறப் போம் தறுவாயில், அதற்கு அடிப்படையாக இருப்பவன் துரோகம் செய்துவிடுகிறான். தன்னலங்கோலிப் பொதுநலத்தைக் கைவிட்டுவிட்டவர்கள் கணக்கற்றவர்கள். வெண்ணெய் திரண்டுவரும் தருணத்தில் பாண்டம் உடைந்தாலன்ன, நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தேசநலம் புறக்கணிக்கப்படுகிறது. குடியைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்புபோன்று நாட்டுமக்களே நாட்டை நலிவுறுத்தி வந்திருக்கிறார்கள். இடைக்காலந் தொடங்கி இந்நாள் பரியந்தம் இத்தகைய நிகழ்ச்சிகள் தௌர்ப்பாக்கியமாக நாடெங்கும் நடைபெற்று வந்திருக்கின்றன. ஆனால் தீராத கேட்டுக்கும் கழுவாய் ஒன்றுண்டு. தேசத்தை நெடிது வருத்தி வாட்டிய துரோகம் என்னும் புன்மையிலிருந்து விமோசனம் பெறும் நாள் வந்துவிட்டது. நெடும் துயிலினின்று பாரதத்தாய் விழித்து எழுகிறாள். செத்ததுபோற் கிடந்த சமுதாயம் புத்துயிர் பெறுகிறது. சுயநலம் நாடி தேச நலத்தைவிட்டுக்கொடுப்பது இனி இயலாத காரியமாய்விடும். ஆற்றிலே நீர் பெருக்கற்றுத்தேங்கிக்

கிடக்கும்போது அதை மாசுறப்பண்ணலாம்; மண லிட்டு அணைகட்டலாம். ஆனால் அதுமீண்டும் பெருக் கெடுத்துப் பாய ஆரம்பிக்கும்போது மாசையும், மண லணையையும், அணை கட்டுபவனையும் அது அடித்துக் கொண்டுபோய்விடும். அதுபோன்று தேசமொன்று நல்லுணர்வும் பெருவாழ்வும் பெறும்போது அதற்கு இடுக்கண் விளைவிக்க முயலுபவன் தானே இடர்படு வான். அவன் அரசு அறிய வீற்றிருப்பவனேயானா லும் சரி; அதிகாரம் ஆக்கம் அனைத்தும் வாய்க்கப் பெற்றவனேயானாலும் சரி; இருப்பிடம் இன்ன தென்று தெரியாது தர்மம் என்னும் சக்கரம் அவனைக் கீழே அமிழ்த்துவிடும். நாட்டுக்குக் கேடு நினைப்பான் ஒருவன் கெட்டொழிந்து போவான். பொய்போகாத இக்கோட்பாட்டைச் சமுதாய சேவையில் பிரவேசிப் பவர்கள் கருத்தில் வைப்பார்களாக.

### தலைவர்களாகப் பிறப்பவர்கள்

தேச சேவையை முன்னிட்டுத் தலைமைவகிக்க முயலுவார்களுள் புகழை நாடியும், பொருளை கோலி யும், சுயநலம்படைத்தும் தாழ்வுறுவார் ஒருபுறமிருக்க, தியாகமே வடிவெடுத்தவர்களும், தேச நலமே அற நெறியெனக்கொண்டவர்களும், மக்களை நல்வழியில் நடாத்தவல்லவர்களுமான உத்தமர்கள் சிலர் யுகந் தோறும் தோன்றுவார் ஆவர். அவர்களை அவதார புருஷர்களென்றும், ஆசாரியமார்களென்றும், சமுதாய வீரர்களென்றும், சர்வாதிகாரிகளென்றும் மாந்தர் பல வாறு கருதுவர். இந்தியாவில் அவதரிக்கும் வீரர்கள்

யாண்டும் தர்மத்தையும் நல்வாழ்வையும் நிலைநாட்டு பவர்களாகின்றனர். சமுதாயத்துக்கு மாண்பு அளிக்க மாட்டாத சீர்திருத்தம் எதையும் அவர்கள் நாடுவதில்லை. அறநெறியை மாற்றிப் புதுப்பித்து விடுவதாகவும் அவர்கள் பகர்வதில்லை. பழைய தர்மத்துக்குப் புத்துயிரும் புனிதமும் பொலிவும் அளிப்பதுதான் அவர்களது தனிக் கடமையாகின்றது. இந்தியாவின் தேசியமும் ஜீவநாடியுமாகிய ஆத்மீக வாழ்வினுள்ளே படிந்துள்ள குற்றங் குறைகளைப் போக்குதலே தலைவர்களாகத் திகழும் புருஷர்களின் நோக்கமாகிறது. ஓரஞ் சாராது, நடுநிலையிலிருந்து அவர்களது வாழ்வையும் போதனையையும் இயக்கத்தையும் ஆராய்பவர்களுக்கே அதைப்பற்றிய உண்மை விளங்கும்.

### தேச லக்ஷியமே தலைவனது வாழ்வு

தேசமொன்று முன்னேற்றமடைதற்கு இயக்கங் கோலுபவரும் நடுநாயகமாக மிளிருபவருமாகிய மகா புருஷரது வாழ்விலே தனிமகிமை யொன்று உண்டு. அவர் சமுதாயத்தின் லட்சியமே வடிவெடுத்தவர் ஆவர். பண்டுதொட்டு நாடு அடையப்பெற்ற மேன்மையனைத்தையும் அவர்பால் காணலாம். வருங் காலத்தில் தனி மனிதன் அல்லது மனிதத்தொகுதி அடையவேண்டிய மாண்பையும் அவர் ஒரே ஜீவியத்தில் பெற்றுவிடுகிறார். நிகழ்காலத்தில் சமுதாயம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டிய புதிய அமைப்பை அப் பெரியாரது வாழ்வு விளக்கிக் காட்டும். வீணானதும் பொருள்படாததுமான சம்பவம் எதுவும் அவரது

ஜீவிதத்தில் இடம் பெறுகிறதில்லை. சிறியதும் பெரியதுமாகிய வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம் சமுதாயத்துக்கு எடுத்துக்காட்டுகளாகவும் அறிவு புகட்டுபவைகளாகவும் திகழ்கின்றன. ஆதலாலேதான் நம்பால் எழும் பிரச்னைகள் அனைத்துக்கும் விமோசனமும் விளக்கமும் நம் காலத்தில் தோன்றும் சான்றோர் வாழ்வில் காண்கிறோம்.

## ஆதிக்கம் படைத்தவர்

இதினின்று மற்றோர் உண்மை வெளியாகிறது. அதாவது சமுதாயத்துக்கு நடுநாயகமாக இலங்கும் வீரர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல; ஏதோ சில அபிமானிகள் கூடி சிறுபிராயத்திலிருந்து வளர்த்து, கல்வி கற்பித்துத் தயாரிக்கப்பட்டவர்களும் அல்ல; அல்லது வெறும் விளம்பரத்தால் சிருஷ்டிக்கப்பட்டவர்களுமல்ல. சூரியன் உதிக்கும்போது, தன் பெருமையை அது தானே விளக்கிக் காட்டுகிறது. உலகத்தவர் துயிலெழுந்து அதைப் பார்க்கின்றனர். அதுபோன்று ஆசாரிய புருஷர்கள் தோன்றியருளும்போது தரணியில் உள்ளவர்கள் தாமாகவே அவர்களை நாடிச்செல்கின்றனர். அப்பெரியார்கள்பால் திகழும் தெய்வத்தன்மை பல்லாயிரம் பேர்களுக்குப் புனிதமும் புத்துயிரும் அளிக்கிறது; செத்ததுபோற் கிடக்கின்ற சமுதாயத்தை மீண்டும் தட்டியெழுப்புகிறது; முன்னேற்றத்துக்கான புதிய இயக்கங்களை எங்கும் தோற்றுவிக்கிறது. மேன்மையும், ஆக்கமும், வல்லமையும் திகழுமிடத்து பகவா

னது பிரபாவம் பொலிகிறதென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. எனவே, உலக நன்மைக்காகத் தோன்றுபவர்கள் தெய்வத்தன்மை வாய்க்கப்பெற்றிருப்பது இயல்பு. நாட்டினுள் பெரும் மாறுதல்கள் ஏற்படப்போம் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தெய்வீக அதிகாரம் வாய்க்கப்பெற்ற தலைவர்கள் அடுத்தடுத்தும் தொடர்ந்தும் தோன்றுவதுண்டு. யாண்டும் அவர்கள் படைத்திருக்கிற மேலாம் குணத்தினின்றும், ஆற்றும் அரும்பெரும் காரியத்தினின்றும், பூணும் பேரன்பினின்றும் அவர்களது பெருமையைக் கண்டறிந்துகொள்ளலாம்.

### பொன்றுத்துணை

உத்தமர்கள் செய்யும் சீர்திருத்தத்தில் பிற்போக்கான வினையெதையும் காணமுடியாது. அவர்கள் சமுதாயத்தின் முக்கால நிலைமையையும் ஓர்ந்து உணர வல்லவர்கள். மாந்தர்பாற் படிந்துள்ள கேடுகளையும் ஊழல்களையும் அவர்கள் அறிகின்றவாறு வேறு யாரும் அறியமுடியாது. ஏற்ற தருணம் வந்து வாய்க்கும் போது குற்றங்குறைகளை அவர்கள் கடிந்து நிராகரிக்கின்றனர். ஆனால் அவர்களது சொல்லிலும் செயலிலும் உள்ளக் கிடக்கையிலும் ஒப்பிலா அன்பும் அனுதாபமும் பொலிவது காணலாம். கடுஞ்சொல்லிலும் காருண்யமே மேலிட்டிருப்பதால் அது மாந்தரது உள்ளத்தைக் கவர்கிறது. தாங்கள் கோலும் இயக்கம் முற்றிலும் பயன்பெறுதற்குச் சில நூற்றாண்டுகள் பிடிக்கும் என்பதை அவர்கள் நன்கு உணர்கின்றனர்.

நாம் வேண்டும் சீர்திருத்தத்தை நமது வாழ்நாளிலேயே காணவேண்டுமென்று நாம் ஆசைப்படுவதுபோன்று அவர்கள் ஆசையும் ஆத்திரமும் கொள்வதில்லை. வித்து விதைத்து, வேலிகட்டி, இதர சௌகரியங்களை யும் செய்துவைத்துவிட்டால் மரம் தானே வளர்ந்து உலகுக்குப் பயன்படும். அதுபோன்று சமுதாய வளர்ச்சிக்கேற்ற பாங்கையும் பண்பையும் அப்பெரி யார்கள் ஏவிவிடுகின்றனர். அவர்கள் விடுத்த இயக் கம் வலுத்துக்கொண்டேபோய் மாந்தரது உள்ளத் தைத் தாவிப் பிடித்துச் சீர்திருத்துகிறது. மகா புரு ஷர்களது பூதவுடல் அழிந்து போய்விடினும் அவர் களது நல்லியக்கம் அழிகிறதில்லை. அது யாண்டும் பெருகிக்கொண்டே போகிறது. எனவே பொறுத்தவர் பூமியாள்வார் என்ற முதுமொழி பெரியார்களுக்கே முற்றிலும் பொருந்தும். ஆனால் இப்பண்பு உத்தமர் களது தனி மகிமையென்று கருதி மற்றவர்கள் அதைப் புறக்கணித்துவிடலாகாது. அதைப் பயின்றுவரு மளவு அது எல்லார்க்கும் பயன் தரும்.

### தொண்டின் பெருமை

தலைமையின் பெயரால் தனக்கும் நாட்டுக்கும் கேடு வருவிக்கும் சிறுமை யாருக்கும் ஒண்ணாது. மற்று உலகை உய்விக்க வந்த உத்தமர்களது உயர்நிலை எல் லார்க்கும் கிட்டாது. அதற்கு ஆசைப்படுவதும் வீணே யாம். ஆனால் உத்தமர்களைப் பின்பற்றி அவர்கள் நிறுவுகின்ற இயக்கங்களில் தொண்டாற்றும் உரிமை நம்மனைவருக்கும் உண்டு. தன்னைத் தலைவன் என்று

கருதும் ஒருவன் தாழ்வுறுகிறான். ஆனால் யாண்டும் தொண்டனாக இருக்க விரும்புபவனுக்குத் தகைமை யெல்லாம் வந்தமைகின்றன. ஸ்ரீ ராமபிரானுக்குக் கடலைக்கடந்து இலங்கை செல்லுதற்குப் பாலம்கட்டு வது அவசியமாயிற்று. ஆனால் தனக்கென வாழாது தலைவனுக்கென வாழ்ந்த தொண்டன் ஆஞ்சனேயர் தம் இறைவனாரை நெஞ்சில் நினைத்த மாத்திரத்தில் ஒரு குதியில் கடலைக் கடந்துவிட்டார். விசுவாசத்தின் வல்லமையை என்னென்பது! தொண்டர்களாகிய நம்மவர்கள் இந்நாளில் வேண்டுவது இத்தகைய நம் பிக்கையும் ஊக்கமுமேயாம். சிரத்தையும் சேவைப் பிரீதியும் உடையார்க்கு எல்லாம் உண்டு. அஃதிலார்க்கு வேறு ஆற்றல் என்னதான் இருந்தும் பயன்படாது போய்விடும். தேச நன்மையின் பொருட்டு உத்தமர் ஒருவர் கோலும் இயக்கத்துக்கு உடல் பொருள் ஆவி யெல்லாம் உவந்தளிக்கும் வல்லமை ஒருவனுக்கு இருக்கவேண்டும். அத்தகையவனைத்தான் புருஷன் எனலாம். பெருமையை நாடாது பணிசெய்து கிடப் பவன் எல்லார்க்கும் உவந்தவன் ஆகின்றான்.

### வெறியின் கேடு

சமுதாய சேவையில் பிரவேசிப்பவர்கள் முக்கிய மான தத்துவமொன்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது உலகம் யாண்டும் தனக்கேற்ற போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறது. சிலகாலம் அதனுள் தர்மம் விசேஷமாகவும், இன்னும் சிலகாலம் அதர்மம் விசேஷமாகவும் மாறி மாறித்

தலையெடுப்பது இயல்பு. மேலும் உலகிலே காணப் படும் அநீதியையும் அதர்மத்தையும் முன்னிட்டுத் தொண்டன் ஒருவன் யாரையும் பழிக்கவும் சபிக்கவும் செய்யலாகாது. அநீதிக்கு மூலகாரணமாயிருப்பவர் களிடத்திலும் மரியாதைக்கு ஒப்பாகிய அன்பு அனு தாபத்துடன் அவன் நடந்து கொள்ளவேண்டும். அஹிம்சையென்று சொல்லப்படுவது இதுவேயாம். தீங்குகள் போலத் தென்படுபவைகளும் சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாதவைகள் என்பதைப் பேரறிஞர் அறிவர். காலக்கிரமத்தில் அத்தீய பழக்க வழக்கங்களுக்கு அவசியமில்லாது போய்விடும்போது அவை தாமே நசித்துப்போய்விடுகின்றன. ஆகையி னுலேதான் மேலோர் பாபிகளிடத்திலும் பரம அனு தாபம் காட்டுகின்றனர். இங்ஙனமல்லாது சேவை செய்ய முன்வருபவர்களுள் பலர் நன்னோக்கம் உடைய வர்கள் எனினும் தங்களது கொள்கையில் வெறி பிடித்தவர்களாய் இருக்கின்றனர். அதாவது தாங் கள் காட்டும் வழியில் உலகம் நடவாவிட்டால் அது நிர்மூலம் ஆய்விடும் என்பது அவர்களது கருத்து. ஒவ்வொருவனுக்கும் தான் கடைப்பிடிக்கும் மார்க்கத் தில் பேரபிமானம் இருக்கவேண்டும். ஆனல் அது ஆவேசம் போன்று தலைவிரித்து ஆடலாகாது. மதப் பித்துப் பிடித்தவர்களாலும் சீர்திருத்தப்பித்துப் பிடித்தவர்களாலும் மக்களுக்கு நன்மையைவிடத் தீமையே அதிகம் நேர்ந்துவருகிறது. ஆதலால் வெறி பிடித்தவர்கள் சமுதாய இயக்கங்களில் தலையிடாதிருப் பது உத்தமமாகும்.

### தன்னைத்தான் சீர்திருத்துக

தன்னைப் பிடித்து வாட்டும் நோய் இன்னதென்று அறிந்துகொள்ள இயலாதவன் பிறரது நோயைப் போக்க வல்லவன் ஆகான். எனவே 'மருத்துவா, உனக்கு நீ முதலில் சிகிச்சை செய்துகொள்' என்றொரு பழமொழி யுண்டு. சீர்திருத்தக்காரர்கள் இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். உலகம் சீர்திருந்த வேண்டும் என்று கூக்குரலிடுபவர்கள் தாங்கள் எவ்வளவு தூரம் திருத்தம் அடையப் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஆராய்வதில்லை. பிறரை ஒழுங்குப் படுத்த முயலுபவர்களெல்லாம் தங்களைத் தாங்களே ஒழுங்குப்படுத்த முற்படுபவர்களானால் அது எவ்வளவு நன்மை பயக்கும்! காமாலை பிடித்திருக்கும் ஒருவனுக்கு உலகெல்லாம் மஞ்சள் மயமாகத் தோன்றுகிறது. தனது நோயைப் போக்குதற்குப் பதிலாக உலகிற் காணும் மஞ்சள் நிறத்தை மாற்ற முயலுதல் மடமையாகும். அத்தகைய முயற்சி எந்நாளும் பயன் படாது. மக்கள் தங்களது மனதைப் பண்படுத்தி வருவார்களானால் உலகக் காட்சியும் தங்களது தூய்மைக்கு ஏற்றவாறு திருந்தியதாகத் தென்படும். உள்ளம் முற்றத் தெளிந்தாருக்கு உலகனைத்தும் தெய்வ மயமாம்.

பகவானை வழிபடுவதுபோன்ற பான்மையில் சமுதாய சேவை செய்வது உத்தமம். கடவுளைக் கண்ணியப்படுத்துதற்காக அவனையாரும் அர்ச்சிப்பதில்லை. கைம்மாறு எதும் கருதாது அவன் பணி செய்து கிடப்

பது பெரியார்களது பெருமையாகும். எங்கும் நிறை பொருள் ஜீவர்களது உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறான். ஆதலால் உள்ளன்புடன் மக்களுக்குச் செய்யும் திருத்தொண்டு தெய்வத்துக்கு உவந்த பூஜையாகும். இத்தகைய மனப்பாங்கில் நிலைபெற்றிருப்பவர்கள் ஆற்றும் வினைகளெல்லாம் உலகுக்குப் பெருநன்மை விளைவிப்பவைகளாகும். மெய்யன்புடைய தொண்டர்களைத்தான் மக்களும் தலைவர்களென ஏற்கின்றனர்.

**அரும்பணியாற்ற வருக**

வித்து ஒன்று முளை முளைக்கும் தருணத்தில் அழுகுவது போன்ற மாறுதல் அடைகிறது. அப்போது அது தானியவகைகளில் சேராது; செடியென்றும் அதை சொல்லுதற்கில்லை. எனினும் அத்தகைய அழிவு அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. வளப்படுத்திய மண்ணும், நீரும், வெப்பமும், காற்றும் போதியவளவிருந்து அதன் வளர்ச்சிக்கு உதவிபுரிதல் வேண்டும். ஆனால் செடியின் தன்மையை மாற்றியமைக்க மண் முதலியவைகளுக்கு இயலாது. முளைக்கும் வித்துப் போன்று நம்நாடும் இதுபோழ்து நிலைகுலைந்திருக்கிறது. இந்தச் சீர்கேட்டின் வாயிலாக வீரம் செறிந்து, புனிதம் ததும்பி, புத்துயிர் வாய்க்கப்பெற்றுப் பாரதத்தாய் விழித்தெழுகிறாள். இப்போது அவள் வேண்டுவது எண்ணிறந்த நன்மக்களேயாம். சோம்பித்திரிபவர்களும், வசைமொழி கூறுபவர்களும், வெறுப்பை வளர்ப்பவர்களும், நாஸ்திகம் பேசுபவர்

களும், நடமாடும் பிணம்போன்று உயிரற்றிருப்பவர்களும் பின்னணி சென்று மறைந்திடுவார்களாக. ஊக்கமுடையவர்களும், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களும், அன்னையின் அறநெறியே தங்களது வாழ்வுக்கு உறுதுணையென்று நம்புபவர்களும் முன்னணிக்கு வந்திடுவார்களாக. பணிவுடன் தொண்டாற்றும் அன்னவர்களுக்கு அகிலாண்ட நாயகி தகைமை யனைத்தும் தந்தருள்கிறாள். ஆனால் தலைவன் ஆகவேண்டும் என்கிற புன்மையை நாம் கனவிலும் கருதோம். அவள் அருளாலே அவளது பணிசெய்து கிடப்பது நாம் யாண்டும் வேண்டுவதாகும்.

# 6. வேலையில்லாத் திண்டாட்டம்

## உலகப் பிரச்னை

ஓர் அங்கத்துக்கு விளையும் கேடு உடல் முழுமையும் பாதிக்கிறது. மனிதன் ஒருவனுக்கு வரும் கஷ்டம் அவனைச் சூழ்ந்திருப்பவர்களையும் வாட்டுகிறது. ஓர் ஊருக்கு அல்லது நாட்டுக்கு நலிவு நேரும்போது அதைச் சார்ந்திருக்கும் நாடுகளும் அல்லற்படுகின்றன. வாழ்க்கை எங்கும் ஓரேமயமாய் இருப்பதே இங்ஙனம் நேர்வதற்குக் காரணமாகும். தனிமனிதனது வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கு மிடையே பிரிக்கவொண்ணுச் சம்பந்தமுண்டு. இத்தகைய ஐக்கிய வாழ்வு முறை இயற்கையாக ஏற்பட்டுள்ளது. அதை அறிந்து அதற்கேற்ப வாழ்ந்திருப்பவர் பெருநன்மை பெறுவர். மற்று, உலகைப் புறக்கணித்துவிட்டுத் தனக்கென வாழ விரும்புபவன் இறுதியில் ஏமாற்றம் அடைவான். பௌதிக சாஸ்திரம் அளித்திருக்கும் சௌகரியங்களின் பயனுக உலகனைத்தும் ஒன்ருக இணைக்கப்பட்டிருக்கும் இந்நாளில் இக்கோட்பாடு பலவிதங்களில் நமக்கு ஐயந்திரிபற விளங்குகிறது. ஏதேனுமொரு பிரச்னை ஒரு நாட்டினுள் தோன்றுமாகில் அது அதிவிரைவில் உலகப்பிரச்னையாக மாறிவிடுகிறது. நேர் அல்லது மாருன முறையில் அது உலக வாழ்வைத் தாக்குகிறது. இதுபோழ்து தோன்றியிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டா

கும். இது தனிதேசமொன்றில் காணும் கஷ்டமன்று. திரும்பிய பக்கமெல்லாம் இதே குறை தென்படுகிறது. வேலையில்லாதவர்களது தொகை ஆண்டுதோறும் வேகமாய்ப் பெருகிக்கொண்டே போகிறது. காற்பட்டினி, அரைப்பட்டினி, முக்காற்பட்டினி கிடப்பாரது எண்ணிக்கைதான் பாரெங்கும் மிகுந்திருக்கிறது. இக் கஷ்டத்தை நீக்க அரசாங்கங்களும் ஏனைய கழகங்களும் பகீரதப் பிரயத்தனம் பண்ணிவருகின்றன. ஆனால் அவைகளின் முயற்சிகளெல்லாம் சிறிதேனும் பயன்படுவனவாக இல்லை. ஏதேனும் ஒருவிதத்தில் கஷ்ட நிவர்த்தி பண்ணினால், வேறு பலவிதங்களில் அது திரும்பவும் தோன்றி மக்களை அலக்கழித்து வருகிறது. இதற்கு நிலைத்த பரிகாரம் பெறவேண்டுமானால் சமுதாயத்தையே அடியோடு மாற்றியமைக்க வேண்டுமென்று அறிஞர் பலர் கருதுகின்றனர். பொதுவுடமை என்ற பெயர் வைத்துப் புதிய அமைப்புகளைச் சில நாடுகள் கையாண்டு வருகின்றன. எனினும் பொது மக்களது வறுமையை நீக்கும்படியானதும், பெரும்பாலர்க்கு நன்மை விளைவிக்கும்படியானதுமான ஏற்பாட்டை ஓரிடத்திலாவது காண்கிறோமில்லை. பாமரர்பால் வறுமையும், போதிய அளவு உணவின்மையும், தொழில்கிடையாத் திண்டாட்டமும் தேசத்துக்கொரு வடிவெடுத்துத் தாண்டவமாடுகின்றன.

### நம்மால் தடுக்க முடியாத காரணங்கள்

உற்பத்தியாகும் உணவுப் பொருள் போதாது போய்விடும்படி ஜனத்தொகை உலகில் அதிகரிக்கும்

போது வறுமை மேலிடும். அப்போது பிழைக்க வழியில்லையென்று மக்கள் வருந்துவர். புதிய தொழில் முறைகள் எத்தனைதான் உண்டுபண்ணின போதிலும் வறுமைநோய் நீங்கிவிடாது. மனிதப் பிரயத்தனம் எதுவும் அக்கஷ்ட நிலையில் பயன்படாது. இவ்வாறு விளையும் விபத்துக்கு இயற்கைதான் ஈடு அளிக்க வேண்டும். இயற்கையும் விதி தவறுது ஏற்றத் தாழ்வினை ஒழுங்குப்படுத்திவிடுகிறது. ஜனப்பெருக்கு மட்டுக்கு மிஞ்சிவிடும்போது பஞ்சம் அல்லது கொள்ளை நோய் தோன்றி மக்களின் தொகையைக் குறைத்துத் திருத்தியமைத்துவிடுகிறது. ஆனல் உணவுப் பொருள் விளைவு போதாமையால் ஏற்படும் அபாயம் இப்போது உலகினுள் வந்துவிடவில்லை. செல்வம் மிகப் படைத்திருக்கும் வியாபாரிகளாலேதான் பொது மக்களுக்குப் பேரிடஞ்சல் உண்டாகிறது. தானியங்களை நியாயமான விலைக்கு உலகெங்கும் எடுத்து வழங்குவது வைசிய தர்மம். இக்காலத்திய முதலாளிகள் அங்ஙனம் செய்கிருர்களில்லை. பணப் பெருக்கத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கும் அவர்கள் விளைபொருள்களின் விலையை வேண்டியவாறு உயர்த்தவும் தாழ்த்தவும் வல்லவர்களாயிருக்கிருர்கள். பாமரர் வறுமை வாய்ப்படுதற்கு இது ஒரு காரணம். விலை விகிதத்தில் உறுதியொன்றுமில்லாமையால் அமரிக்கையாகத் தொழில் செய்ய அவர்களுக்கு இயலுகிறதில்லை.

தொழில் கிடையாத் திண்டாட்டம் ஏற்பட்டிருப்பதற்கு மற்ருெரு காரணம் உண்டு. கைத்தொழில்கள்

அனைத்தும் இக்காலத்தில் யந்திரத் தொழில்களாக மாறிவிட்டன. சமைப்பது முதற்கொண்டு மனிதனால் ஆக வேண்டிய வேலைகளெல்லாம் யந்திரங்களால் எளிதில் செய்து முடிக்கப்படுகின்றன. எண்ணுதல், அளத்தல் முதலிய புத்தி நுட்பத்தால் ஆகவேண்டிய வேலைகளும் கருவிகளின் உதவியால் நடைபெற்றுவிடுகின்றன. இது காரணத்தால் பொருள்கள் மிகக் குறைந்த விலைக்கு அகப்படுகின்றன. யந்திர உலகம் மனிதனுக்கு அளிக்கும் உபகாரம் ஆச்சரியப்படத்தக்கது. மற்று அது செய்யும் அபகாரம் சமுதாயத்தையே அடியோடு குலைத்து விடுவதாயிருக்கிறது. இலட்சக்கணக்கான பேர் வேலையினின்று விலக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுக்குப் புதிய ஜீவனோபாயம் எதுவுமில்லை. ஒரு புறம் தாழ்மையும் தரித்திரமும் அவர்களைப் பிய்த்துத் தின்கின்றன. மற்றொரு புறம் யந்திர பூதங்களின் எஜமானர்கள் பெருமித ஐசுவரியத்தில் சொக்கிக்கிடக்கின்றனர். மலிவான யந்திரச் சிருஷ்டிப் பொருள்கள் கடைகளில் வந்து குவிந்து எங்கும் ஆக்கம் நிறைந்திருப்பதுபோற் காட்சி கொடுக்கின்றன. ஆனால் செய்ய வேலையில்லாது, உண்ண உணவில்லாது, ஏழைகள் படும் பாட்டைச் செல்வந்தர்கள் அறிகிறார்களில்லை. வறியர்களது வறுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. யந்திரசாலைகளையுடைய தனவான்களது தனம் கணந்தோறும் பெருகிக் கொண்டே போகிறது. இவ்வாறு வேகமாய் வளர்ந்துவரும் செல்வ வேற்றுமை எப்போது எவ்வாறு முடிவுறுமோ தெரிய

வில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்பது வாழ்வு சம்பந்தமான ஓர் அரும்பெரும் தத்துவம். இது என்றும் பொய்போகாது. பல்லாயிரம் பேர்களைப் பட்டினி கிடக்கச் செய்து சேமிக்கும் செல்வமானது, அதை உடையவர்களுக்கே உயிர்க்கொல்லியாகமாறும் காலமொன்று வரும். ஆனால் தொழில் கிடையாது அலைந்திடுபவர் இதை நினைத்து ஆறுதல் பெறுவது ஒண்ணாது. மற்று வெளி நாடுகளில் நிகழ்வதுபோன்று கலகங்கள் செய்வதும் இந்தியர்களுக்குத் தகாது.

## இந்தியாவில் வேலை வேண்டுபவர் யார் ?

தொழில் கிடையாத் திண்டாட்டம் நம் நாட்டில் பெரிதும் பாமரர்களுக்கில்லை. அவர்களது அறிவு இன்னும் தெளிவுறாது இருப்பதுபோன்று ஆசையும் மட்டுடனே இருக்கிறது. அவர்களுக்குக் கட்டத்துணியொன்றும், குடிக்கக் கால்வயிறு கஞ்சியும் கிடைத்தாற்போதுமானது. ஊராருக்காக உடல் நலிய உழைப்பவர்கள் இவர்களே. தாங்கள் படும்பாட்டிற்குப் பிரதிபலனாக இவர்கள் அடையும் ஊதியம் மிகச் சிறியது எனலாம். எனினும் இவர்கள் அதிருப்தியடைகிறார்களில்லை; யார்மீதும் குறை கூறுகிறதுமில்லை. வறுமை வாய்ப்பட்டிருந்தும் அமரிக்கையாக வாழும் நன்மக்கள் இவர்களேயாம். பின்பு வேலை தேடி வருந்துபவர் யார் ? அவர்கள்தான் கற்றறிந்த மேன்மக்கள் என்ற பட்டம் கிடைக்கப் பெற்றவர்கள். உத்தியோகம் கிடைக்கிறதில்லை என்கிற கூக்குரல்

இவர்கள் மாட்டிருந்துதான் எங்கும் எதிரொலிக்கிறது. தொழில் தேடிக்கொண்டு தேசாந்தரம் போகிறவர் களும் இவர்களே. ஏதேனுமொரு இடத்துக்கு உத்தி யோகஸ்தன் ஒருவன் தேவையென்றால் அங்கு நூற்றுக் கணக்கான விண்ணப்பங்களும் சிபார்சுக் கடிதங்களும் கல்விமான்களிடமிருந்து வந்து குவிகின்றன. கலா நிபுணர்களது பரிதாபகர நிலைமைக்கு எடுத்துக் காட்டாக இரண்டொரு சம்பவங்களைக் குறிப் பிடலாம். சில வருஷங்களுக்கு முன்பு சென்னை சர்வ கலாசாலைக்கு கொஞ்சம் ஆங்கிலம் அறிந்த சேவகன் ஒருவன் தேவையென்றும், அத்தொழிலுக்குச் சம்பளம் இருபத்தைந்து ரூபாய்வரை கிடைக்குமென்றும் விளம் பரம் செய்யப்பட்டிருந்தது. இந்தச் சேவகத் தொழி லுக்காகத் தொளாயிரத்துச் சொச்சம் விண்ணப்பங் கள் வந்து வீழ்ந்தன. விண்ணப்பதார்களுள் இருபத்து மூன்றுபேர் சட்டப் பரீக்ஷையில் தேர்ந்தவர்கள்; நூறு பேருக்கு மேல் பி. ஏ. பட்டம் பெற்றவர்கள்; நூற்றுக் கணக்கானவர்கள் எஸ். எஸ். எல். சி. தேர்ந்தவர்கள். பெரும்படிப்பாளிகள் இத்தனைபேர் பேராவலுடன் நாடிய அப்பதவி முடிவில் ஒன்பதாவது வகுப்பில் தேர்ந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டது. இது போன்ற மற்றொரு நிகழ்ச்சி ரெயில்வே கம்பெனி ஒன்றில் நேர்ந்தது. தலைக்கு முப்பது ரூபாய் சம்பளத் தில் ஐம்பது குமாஸ்தாக்கள் தேவையென்று அக் கம்பெனியார் விளம்பரம் பண்ணியிருந்தார்கள். விண்ணப்பம் செய்பவர் பதிவுக் கட்டணம் ஒரு ரூபாய்

செலுத்தவேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்கள். விளம்பரம் வெளியான சில தினங்களுக்குள் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட விண்ணப்பதார்கள் கிளம்பினர். பதிவு காணிக்கையும் அவ்வளவு பெரிய தொகையாக ரயில்வே கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தது. வேலை நாடின இத்தனை பேர்களும் நவீன கலாசாலைகளிற் பயின்றவர்களாவார். வாழ்வை விளையாட்டுப்போன்று எளிதில் நடாத்தத் தெரிந்துகொள்வது கற்றதனாலாய முதற்பயன். அங்ஙனமின்றி நம் நாட்டு இளைஞர் இக்காலத்தில் கல்லூரிப்பட்டம் பெற்ற பின்னர் தங்கள்மீதும், பெற்றோர்மீதும், சமுதாயத்தின்மீதும் சுமையாயிருந்து சங்கடத்தை விளைவித்து வருகின்றனர். வேலையில்லை என்கிற நோய் இவர்களைத்தான் விசேஷமாகப் பிடித்து வாட்டி வருகிறது.

## அடிமையாவதற்கு அவ்வளவு ஆடம்பரம்

திண்ணைப்பள்ளிக்கூடத்தில் துவக்குகிற கல்வியைக் கல்லூரியில் பூர்த்தி பண்ணிப் பட்டம் பெற்று வெளியேகுதற்குள்ளாக இளைஞர்கள் பண்ணும் ஆரவாரமும் குழப்பமும் கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனைக்கும் பாடபுத்தகங்களைத் தவிர வேறு எதைப்பற்றியும் எண்ண அவர்களுக்கு நேரமில்லை. பிற்காலத்தில் வாழ்வுக்குப் பயன்படாத விஷயங்கள் பலவற்றை மனங் கலங்கப் படிப்பதையும் நெட்டுருப் பண்ணுதலையும் அன்றி அன்னிய இயக்கம் எதையும் அவர்கள் அறியார். வாலவயதில் ஓடிவிளையாடி உடல் நலனும்

உரனும் பெறவேண்டும் என்கிற அவா மிகச் சிலருக்கே உளது. பெரும்பாலர் தேகக்கட்டும் திட்பமும் இழந்தவர்கள் ஆகின்றனர். ஓயாது ஒன்றன்பின் ஒன்றாக வந்துகொண்டிருக்கும் பரீக்ஷையில் எப்படியாவது தேறவேண்டுமென்ற பீதி சதா சித்தமிசை குடிகொள்கிறது. பரீக்ஷையில் பிரதானம் வகித்துத் தேர்வதற்கு ஒப்பான ஆற்றலும் ஆண்மையும் உலகில் வேறு எதிலும் இருப்பதாக இவர்களுக்கு விளங்குகிறதில்லை. அதனில் சிறப்புற்றுத் தேர்பவர்பால் பூவுலக சம்பத்து அனைத்தும் வலிய வந்து சாரும் என்பது அவர்கள் காணும் கனவு.

பிள்ளைகளை வித்தியா பட்டதாரிகள் ஆக்குதற்குள்ளாகப் பெற்றோர் படும் பாடுதான் என்ன! தங்கள் வருவாயின் பெரும்பகுதியை அவர்களின் படிப்புச் செலவுக்காகவென்று ஒதுக்கி வைத்துவிடவேண்டும். இதற்காகச் சொத்துக்களை ஈடுகொடுக்கவும் வேண்டும். குடும்ப வருமானத்தைப் பறிகொடுப்பது பெரிதல்ல. மாணவன் வருஷந்தோறும் தவறாது தேர்ந்து மேல் வகுப்புக்குப் போனால் போதுமானது. அப்போது அவன் நிமித்தம் செலவாகும் செல்வம் வீண்போய் விடாதாம். வட்டியும் முதலும் சேர்ந்து வருங்காலத்தில் அவன் உத்தியோகம் செய்து சம்பாதித்துவிடுவான் என்கிற திடநம்பிக்கையொன்றே பெற்றோருக்கு உற்சாகம் ஊட்டுகிறது. பயன்படாத பாடங்களைப் படித்துப் படித்து இளைஞனது கண் கெடுவதும், உடல் நலிவதும், ஆற்றல் குன்றுவதும் அவர்களுக்குக்

கவலைக்கு இடம் தருவனவாகா. இவ்வாறெல்லாம் இன்னற்பட்டு இளைஞனும் வித்யா பட்டம் பெற்ற வனாகிவிடுகின்றான். கல்லூரியினின்று வெளியேகும் போதே, "**வேலை வேண்டும்**" என்கிற மூலமந்திரத்தை ஓதிக்கொண்டே அவன் புறப்படுகிறான். ஆனால் இந்த மந்திரத்துக்கு இக்காலத்தில் சக்தி யொன்றுமில்லை யென்பது படிப்பு முடிந்த பிறகுதான் அவனுக்கு விளங்குகிறது. ஏனைய கலாவல்லவர்கள் படும் பாட்டி லிருந்தாவது அவன் கால நிலைமையை முன்னமே அறிந்து கொண்டிருக்கக் கூடாதா? தான் கல்லூரியி லிருந்தபோது கற்பனை பண்ணின உயர் பதவியும் ஆடம்பர வாழ்வும் அடிபட்டுப் போகின்றன. ஒரு வேளை இதற்குள்ளாக இவனுக்கு விவாகமும் முடிந்து சில சிசுக்களையும் பெற்றெடுத்துவிடுவான். உண்ண உணவில்லாது, கட்டத் துணியில்லாது அவைகள் தகப்பனைப் பின்தொடர்ந்து கத்தியழுகின்றன. அப் பனோ தொழில் கிடைக்கவில்லை யென்று இங்கும் அங் கும் தேடியலைகிறான். எவ்வளவுதான் கெஞ்சிக் கூத் தாடின போதிலும் இவனுக்காகப் புதிதாக உத்தியோ கம் உண்டுபண்ணுவார் இல்லை. கல்லூரிப் பட்டமும் கௌரவ உடையும் படும் பாடுதான் என்னே! இத்த கைய இழிவான அடிமை வாழ்வுக்கா அத்தகைய ஆடம்பரம்!!

### வேலையாளின் மனப்பான்மை

வேலையாள் என்பவன் சுதந்திரம் இல்லாதவன். தன் காரியங்களைத் தானே நிர்வகித்துக்கொள்ள அவ

னுக்கு இயலாது. சுவாதீனம் வகிப்பதற்கேற்ற அறிவும், ஆற்றலும், ஆண்மையும் அவன்பால் இல்லை. யாண்டும் பராதீனனாய் இருப்பதே அவன் தர்மம். இப்போது நம்நாடு வேலையாட்களின் நாடாய்விட்டது என்பது வெளிப்படை. ஆரியவர்த்தம் என்னும் பெயர் இக்காலத்தில் இதற்குப் பொருந்தாது. அறமும் அழகிய தன்மையும் உடையவன் ஆரியன். அவன் யாருக்கும் எவ்வுலகிலும் அடிமை புகான். அவனது கொள்கையின்படி சுதந்திரத்துக்காக உயிர் கொடுப்பது அடிமை வாழ்வினும் சாலச் சிறந்தது. ஆனால் நம் நாடோ இதுபோழ்து பொருளாதாரத்துறையில் அடிமைத்தனத்தையே நாடி வந்திருக்கிறது. சமுதாயத்தில் சீரும் சிறப்பும் பெற்று முதன்மை வகித்தவர்களது சந்தானம் இப்போது சம்பளம் கொடுக்கும் யாருக்கேனும் கீழ்ப்படிந்து நடக்க ஒருப்படுகிறது. தங்களது பேரறிவையும் ஆற்றலையும் சமூக நன்மைக்காகவென்று அர்ப்பணம் பண்ணியிருந்த அந்தணர்களுக்குப் பிள்ளைகளாக வந்திருக்கும் இக்காலத்தவர்கள் தங்களது வாழ்வை வேலைக்காரர் போன்று விலைக்கு விற்றுவிடுகின்றனர். மேலும் தலைவனது தகைமையை அன்னவர் ஆராய்ந்து பார்ப்பதில்லை. நீசர்களிடத்திலும் அவர்கள் வேலை யேற்றுக்கொள்கின்றனர். இந்நாளிற் கற்கும் கல்வியானது இவ்விதம் தொழில் பெறுதற்குச் சாதனமாய்ப் போய்விட்டது. சீரிய நோக்கத்துக்கும் தெய்வத் தன்மைக்கும் வழிகாட்டியாயிருக்கும் பரவித்தை இப்போது அறவே புறக்கணிக்கப்படுகிறது. அதிகச் சம்

பளத்துக்கு எளிதில் வேலை வருவித்துத் தரும் கல்வி பெரிதும் பாராட்டப்படுகிறது. மனிதன் மாட்டுப் புதைந்து மறைந்து கிடக்கும் சம்பூரணத்தை ஓங்குவிப் பது கல்வி என்பது மேலோரது பழங்கொள்கை. ஆனால் க்ஷீணதசை யடைந்திருக்கும் இக்காலத்தவரது கொள் கையின்படி வயிற்றுப் பிழைப்புக்கு ஏதுவாயிருப்பது கல்வி. படிக்காதவனுக்குத் தொழில் கிடையாது என் பதுதான் பிள்ளைப் பருவத்திலிருந்து பெற்றோர் புகட் டும் பாடம். சம்பளத்துக்கு வேலை செய்வது இழிவான சூத்திர தர்மம் என்பது மேன்மக்கள் என்று சொல்லிக் கொள்வார் யாருக்குமே புலப்படுகிறதில்லை. பன்னி ரண்டு வருஷகாலம் சம்பளத்துக்கு வேலை செய்பவன் ஒருவன் சுய அறிவையும், சுயப்பிரயத்தனத்தையும், சுயமரியாதையையும் இழந்துவிடுகிறான் என்பது விதி. நம் நாடோ சென்ற அறுநூறு வருஷங்களாக அரசியல் துறையில் அடிமைப்பட்டுக் கிடந்தது. பொருளா தாரத்துறையில் இன்றைக்கும் அதன் அடிமைத்தனம் போய்விடவில்லை. பிறருக்குக் குற்றேவல் செய்து உயிர் வாழ்தலினும் உயர்ந்த லட்சியம் எதையும் இது அறி யாது. கண்ணிய வாழ்வையும் சுயேச்சையையும் பற்றிய அறிவு மழுங்கி, மானம் இழந்து, மதிகெட்டுத் திரியும் இந்நாட்டாரைக் கூலியாட்கள் என்று சொன் னாற் போதாது. மானிட வடிவெடுத்து உழலும் கால் நடைகள் என்று பகரினும் பொருந்தும். இத்தகைய வாழ்வு முறையை யார்தான் ஆரிய தர்மம் என்பார்?

***சர்க்கார் சேவை***

நம் நாட்டு மக்களுக்கு அரசாங்க ஊழியத்தில் இருக்கிற கவர்ச்சி வேறு எதிலும் இல்லை. கல்வி பயிலும் ஒருவன் கொள்ளும் பேராசை எப்படியாவது தான் சர்க்கார் உத்தியோகஸ்தன் ஆகவேண்டும் என்பதாம். இவ்வாசைக்கு அடிப்படையான காரணம் அடிமைத்தனம். சுய ஆதிக்கம் இன்னதென்று அறிந்து கொள்ளாதவனிடத்து அடிமைத்தனம் ஊறிக் கிடக்கிறது. அதிகார வர்க்கத்தினிடத்து அவன் அடிவணங்குவது அவனது பான்மையை நன்கு விளக்கிக் காட்டிவிடும். சுயேச்சையில் நிலைநிற்கும் ஒருவன் அரசாங்க உத்தியோகஸ்தர்களைப் பொது மக்களின் ஊழியர்கள் என்று கருதுகிறான். அடிமைக்காரன் ஒருவன் அவர்களை அசாதாரணமான பிண்டங்களெனக் கருதி அவர்கள் முன்னிலையில் அஞ்சி நடுநடுங்குகிறான். இவ்விரண்டுக்கும் இடையே உள்ள வித்தியாசம் ஆராயற்பாலது. அடிமை ஒருவனுக்கு அதிகாரம் கிட்டிவிட்டால் அவன் பெருவீச்சு வீசுவான். உடனே தன்னையும் அசாதாரண பிண்டமெனக் கருதுவான். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அப்போது அவனுக்குத் திரணமாய்த் தென்படுவார்கள். அடிமைத்தனமும் கொடுங்கோன்மையும் இணை பிரியாதவைகள். Slavery and tyranny are obverse and reverse of the same coin—என்பது பொய்யாமொழியாம். நம் நாட்டு மக்கள் இக்கூற்றுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆவர். சுதந்தர நாடாகிய இங்கிலாந்தில் இருக்கிற உத்தியோகஸ்தன்

ஒருவன் தன்னை ஜனங்களின் சேவகன் என்று நினைத்து அதன்படி நடக்கிறுன். பொதுப்பட இந்திய உத்தியோகஸ்தன் ஒருவனைவிட ஆங்கில உத்தியோகஸ்தன் குணத்திலும் சமூக சேவையிலும் மேலானவன் எனலாம். அவன் சுதந்தர நாட்டில் பிறந்து வளர்ந்து வந்ததே அதற்குக் காரணமாகும். நம்மவன் ஒருவனுக்கு அதிகாரம் வந்துவிட்டால் அவன் தோரணையை என்னென்பது! அதிகாரத்தைப் போலிமுறையில் பெறுதற்காகத்தான் அடிமையானவன் சர்க்கார் உத்தியோகத்தில் மயக்கமுற்று அதை நாடுகிறுன். இது விஷயத்தில் தேசத்தின் மனப்போக்கு அடியோடு மாறினுலொழிய நமக்கு விமோசனம் இல்லை. நாம் இப்பொழுது தான் புதியதாக சுதந்தரத்தைப் பெற்றிருக்கிறேம். வீர சுதந்தரம் இன்னதென்று அறியும் ஒருவன் யாரையும் ஆள விரும்புகிறுனில்லை; தானும் ஆளப்படமாட்டான். அதிகார ஆசையை நாடு நீத்துவிட்டுச் சம உரிமைப் பிரீதி பெறவேண்டும். அப்போதுதான் சர்க்கார் உத்தியோகத்தின்பால் உள்ள மயக்கம் மறைந்துபோம்.

**நவீனக் கல்விமான் நாட்டை நலிவுறுத்துகிறுன்**

எளிய வாழ்வும் உயரிய எண்ணமும் பழங்காலத்துப் பயிற்சியின் பயனுய் வந்திருந்தன. ஆனுல் படாடோப வாழ்வும் சுய நன்மையும் புதிய படிப்பு முறையின் பயனுய் வந்திருக்கின்றன. நவீன கல்விமான்கள் வடிவத்தில்தான் இந்தியர்களே யொழிய நடை உடை பாவனையில் அவர்கள் இந்தியர்கள் அல்லர். மேல்

நாட்டு மேன்மையும் அவர்கள்பால் இல்லை. மேல்நாடு கீழ்நாடுகளின் சிறுமைகளுக்கு அவர்கள் உறைவிடமா கின்றனர். படிக்குங்காலத்திலிருந்தே அன்னவர்களுக் குப் பெருமித வாழ்வு துவங்குகிறது. உடலை அலங் கரிப்பதுபோன்று உள்ளத்தை அலங்கரிக்க இவர்கள் கற்றுக் கொள்கிறார்களில்லை. தேசத்தின் செல்வம் வெவ்வேறு விதங்களில் விரயமாவது பெரும்பாலும் கற்றவர்களின் மூலமாகவேதான். படிப்பின் நிமித்தம் செலவாகும் பணத்துக்கேற்ற பிரதிபலன் நற்பயிற்சி மயமாக அல்லது சம்பாதிக்கும் திறமை மயமாகக் கிடைப்பதில்லை. படித்தவன் பாமரனைத் தன் இன மெனக் கருதுகிறானில்லை. அவனுக்கு உதவி செய்வ தைப்பற்றிய பேச்சு எழவோ இடமில்லை. பாமரனது உழைப்பாலும் பண உதவியாலும் முன்னேற்ற மடைந்தபின் படித்தவன் அவனை வெறுக்கவும் தலைப் படுகிறான். இத்தகைய மனப்பான்மையானது நல்ல பயிற்சிக்கு அறிகுறியாகாது. விழலுக்கு இறைத்த நீர் போன்று பெரும்பாலாரது படிப்பின் நிமித்தம் செல வான பணம் வீணேயாம். சம்பாதிப்பவர்களிற் பலர் பாமரரது பணத்தையே பலவிதங்களிற் பறிக்கின்ற னர். பின்பு அதைத் தங்களது பெருமித வாழ்வுக்கா கப் பலவிதங்களில் வாரிக்கொடுக்கின்றனர். இவ்விதம் பயிற்சி முறையிலும் பொருளாதாரத் துறையிலும் படித்தவர்களால் நாடு நலன் எதுவும் பெறுகிறதில்லை யென்றே சொல்லலாம்.

**உத்தியோக வேள்வி**

நாட்டினுள் வறுமைநோய் வந்திருப்பது வெளிப் படை. எவ்வளவுதான் முயன்றபோதிலும் அதை இப்போது அறவே அகற்றிவிட முடியாது. உடைமை யும் வறுமையும் ஒருவழி நில்லா என்பது விதி. இவை யிரண்டும் தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் மாறி மாறி வந்து கொண்டிருக்கின்றன. தரித்திரதசை தலையெடுத்திருக்கும் இந்நாளில் நாம் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பதுதான் ஈண்டு ஆராயப் படுவது. வறியோர்க்கு அழகு வறுமையிற் செம்மை. ஆதலால் இப்பொல்லாத காலம் மாறிப்போமளவும் நாம் பொறுத்திருப்பதுமன்றிப் புனித வாழ்வினின்று சற்றேனும் பிசகாமலும் இருத்தல் வேண்டும். இது விஷயத்தில் கற்றறிந்தவர்களது கடமைதான் மிகப் பெரியது. உலகில் எத்தகைய காரணங்களால் நிலை குலைவு நேர்ந்திடினும் இந்திய சமுதாயஅமைப்பு அவை யாவையும் தாங்கி நிற்க வல்லது என்பதை நாட்டுமக் கள் அறியவேண்டும். மேலும் தேசீயலட்சியத்திலிருந்து அவர்கள் எள்ளளவும் பிசகாதிருத்தல் அவசியம். சுக போகங்களையும் தேக சௌகரியங்களையும் மட்டுக்கு மிஞ்சிப் பெருக்கிக்கொண்டு வரும் நவீன நாகரிகத்துக் கிடையில் விவேகிகள் அடக்கமுடைய எளிய வாழ்வு வாழவேண்டும். தேவைகளைக் குறைப்பவனுக்கு ஆசை குறைகிறது. அங்ஙனம் அவாவை வெல்லுகிறவன் வேலை வேண்டுமென்று காண்பவரிடத்திலெல்லாம்

தலைவணங்கான். வறுமையிலும் தன்னை விலைக்கு விற்காத வீரம் ஒருவனுக்கு இருக்கவேண்டும்.

படித்தவர்கள் போலிப் பெருந்தன்மையொன்று படைத்து வந்திருக்கிறார்கள். அதாவது தேக உழைப்பு கல்விமான்களது மேன்மைக்கு ஒவ்வாதாம். கிருஷி, கைத்தொழில் போன்ற பிரவிருத்திகளை அவர்கள் அறவே வெறுக்கின்றனர். சம்பளம் கொடுப்பவர்களைத்தொழுது வாழ்தலிலும் பூமியை உழுதுபிழைப்பது உத்தமம் என்பது இவர்களுக்கு விளங்குகிறதில்லை. விவசாய நாடாகிய இந்தியா இத்துறையில் இன்னும் பின்னணியில் கிடப்பதற்குக் காரணம் கற்றவர்களது பராமுகமேயாம். நகரங்களின் செயற்கை வாழ்வை நீத்துவிட்டு இவர்கள் திரும்பவும் கிராமங்களுக்குச் சென்று வேளாண்மை, நானாவிதச் சிறு கைத்தொழில்கள், கல்வி, வாணிகம், சுகாதாரம் முதலியவைகளை ஒழுங்குபடுத்துவார்களானால் அது நாட்டுக்குப் பெருநன்மை விளைவிக்கும். இங்ஙனம் செய்வது யந்திர பூதத்தோடு போட்டி போடுவதற்கும் ஏராளமாகப் பொருள் சம்பாதிப்பதற்குமன்று; ஆனால் மனிதனுக்கு அத்யாவசியமாயிருப்பவை மிகச்சில என்பதையும், அவைகளைச் சுயப்பிரயத்தனத்தால் எளிதிற் பெற்றுவிடலாம் என்பதையும் தங்களது வாழ்வின்மூலம் விளக்கிக் காட்டுதற் பொருட்டேயாம். தூய எளிய வாழ்க்கை வாழத்தெரிந்து கொண்டவர்களுக்குக் கிராமங்கள் வேண்டியவாறு இடங்கொடுக்கும். உத்தமர்கள் கடைப்பிடிக்கும் மார்க்கத்தைப் பாமரர்களும் பின்

பற்றுகின்றனர். ஆதலால் தேசத்தை அக்ஞானத்தினின்றும், தரித்திரத்தினின்றும் உய்விக்கும் பொறுப்பு கற்றவர்கள்பால் மிக உண்டு.

உத்தியோகம் வேண்டுமென்று யாசகம் பண்ணுபவர் இழிவுறுகின்றனர். ஆனால் **யாகம்** செய்பவர்கள் யாண்டும் மேன்மையுறுகின்றனர். யாகம் அல்லது வேள்வி யென்பது தம்மாட்டுள்ள நன்மை யாவையும் பிறரது நன்மைக்காகவென்று எடுத்து வழங்குவதாம். மேலும் வேள்வி ஒன்றில் அதை வேட்பவர் பெறும் பயன் சிறிதளவும், உலகம் பெறும் பயன் பெரிதளவும் இருத்தல்வேண்டும். ஆதலால் தாம் கற்ற கல்வியையும் பெற்ற ஆற்றலையும் நாட்டு நன்மைக்காக அர்ப்பணம் பண்ண வித்தியா பட்டதாரிகள் முன்வருவார்களாக. தமக்கென வேண்டுதற்குப் பதிலாகப் பிறருக்கெனத் தமது ஜீவிதத்தை எடுத்து வழங்க இவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். கரவாது வழங்கும் கொடையாளர்க்கே என்றும் சீரும், சிறப்பும், செல்வமும் ஓங்குகின்றன. ஆற்றிலே பெருக்கு இல்லாது அடி சுடுகின்ற காலத்தும் அது ஊற்று நீரால் உலகை உய்விக்கிறது. அதுபோன்று நம் நாட்டிலே கற்றறிந்த நன்மக்கள் வறுமையில் வாடிக்கிடக்கின்ற இந்நாளிலும், சமுதாய சேவை என்கிற யாகம் செய்து, பழியினின்று மீண்டு, மேன்மையுறுவார்களாக.

# 7. காப்பது விரதம்

### வாழ்க்கைக்கு உறுதுணை

மனிதன் உயிர் வாழ்ந்திருந்தால் மட்டும் போதாது. யாண்டும் நலம் மிகப் பெற்றுப் பெருமையுடன் வாழ வேண்டும். வாழ்க்கையை வீடு கட்டுவதோடு ஒப்பிட லாம். வீட்டுக்கு வெளி அலங்காரத்தைவிட முக்கிய மாக வேண்டப்படுவது அஸ்திவாரம். அது பலப் படாது போய்விடின் பாக்கிப் பகட்டுகள் யாவும் பயன் படா. கற்பாறை போன்று அசைக்க முடியாத அஸ்தி வாரமே மனைக்கு மாண்பும் வலிவும் மிக அளிக்க வல்லது. வாழ்க்கையை வகைப்படுத்திய நமது முன் னோர்கள் அதற்கு அழியாத அஸ்திவாரம் எது என்ப தையும் ஐயம் திரிபற விளக்கியுள்ளார்கள். எண்ணரிய பிறவிகளில் மானுடப் பிறவிதான் அரிதினும் அரிது என்று அவர்கள் முரசறைந்தது வெறும் வீண் வார்த்தையல்ல. ஜீவிய சம்பந்தமாக அவர்கள் கண் டறிந்த பேருண்மையைப் புகட்டுதற் பொருட்டே அங்ஙனம் மொழிந்தனர். முக்தி அல்லது பரம் பொருளில் ஐக்கியமாதல் உட்பட எத்தகைய உயர் நிலையை வேண்டுமானாலும் பெறுதற்கு மானுடப்பிறவி ஒன்றே உற்ற உபாயமாகும். மேலாம் அந்தஸ்தை எய்த விரும்பும் தேவர்கள்கூட இவ்வுலகில் வந்து மானுடராய்ப் பிறக்கவேண்டுமாம். கிடைப்பதற்கரிய இத்தகைய சந்தர்ப்பத்தைப் பாழ்படுத்துதல் மடமை

யாகுமன்ரு ? பெருவாழ்வு, பேரறிவு, பேரின்பம் இவைபோன்ற மாண்புகளை நீத்துவிட்டுத் துன்பம் நிறைந்த அற்ப வாழ்வைக் கைக்கொள்வது முறை யன்று. பிணியறியாப்பேராளர், எண்ணியதை எண்ணி யாங்கு எய்தவல்ல வீரர், நமனை யஞ்சாதவர், நரகத் தில் இடர்ப்படாதவர்—இத்தகைய பெருமக்கள் நம் நாட்டில் பிறந்தது வெறும் காரணமற்ற குருட்டு வாய்ப்பல்ல. கல்வியறிவிற் சிறந்தவர்கள் திகைத்திடும் படி ஞானம் பேசிய ஞானசம்பந்தர், நசிகேதர், சுக தேவர் முதலிய பாலயோகிகள் தோன்றிய காலமும் இருந்தது. அத்தகைய மகோன்னத நிலையில் இருந்த சமுதாயம் இப்பொழுது எண்ணிறந்த பயங்களாலும், சஞ்சலங்களாலும், அதிருப்திகளாலும் பீடிக்கப்பட்டி ருக்கிறது. அஞ்சாத நெஞ்சம் படைத்த வீரர்களையும், பேரன்பே வடிவெடுத்த பரம புருஷர்களையும், தியாக மூர்த்திகளையும் தேசத்தில் காண்பது இக்காலத்தில் மிக அரிதாய்விட்டது. இதற்குக் காரணம் யாது?

அக்காலத்தில் அக்னிபோன்று ஜ்வலித்துக்கொண் டிருந்த பிரம்மச்சரிய ஆச்ரமமானது இக்காலத்தில் இருக்குமிடந் தெரியாது பாழாய்விட்டது. உயிர்க்கு உறுதுணையாகிய அதன் உட்பொருளை அறிந்துகொள் ளாது அதைப் புறக்கணிப்பவர்களே பெரிதும் இந்த ஞான பூமியில் இக்காலத்தில் தோன்றியிருக்கின்றனர். விலங்குக் கூட்டத்தின் வாழ்க்கையைவிட மானுட வாழ்க்கை மிக மேலானதென்று அறிந்த நம் முன்னோர் கள் அதை நான்கு ஆச்ரமங்கள் அல்லது படித்தரங்

ளாகப் பகுத்தனர். அவைகள் பிரம்மசரியம், கிரு ஹஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்பனவாம். அவைகளுள் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போன்றிருப் பது பிரம்மசரியம். ஆயுள் முழுதுக்கும் அது உயிர் ஊட்டுகிறது. இம்மைப் பயன், மறுமைப்பயன் ஆகிய இரண்டுக்கும் அது ஆணிவேர் போன்றது. மாந்தர் அனைவர்க்கும் அது மாண்பு அளிக்கவல்லது. ஆண், பெண் ஆகிய இருபாலர்க்கும் பிரம்மசரியம் பொது வானது. இல்வாழ்பவனுக்கு பிரம்மசரிய விரதம் வேண்டியதில்லை என்னும் அக்ஞான இருளில் இது போழ்து மக்கள் உழல்கின்றனர். அத்தகைய அறியா மையே சமுதாயத்தின் வீரியம் குறைந்ததற்குக் காரண மாகும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளை ஒரு வகுப் பில் தேர்ச்சி பெற்றாலன்றி அதைவிட மேலான வகுப் புக்குப் போகமுடியாது. அதுபோன்று பண்டைக் காலத்து வாழ்க்கை முறையில் பிரம்மசரிய ஆஸ்ரமத் தில் ஸ்திரமானாலொழிய ஒருவன் ஏனைய எந்த ஆஸ்ர மத்துக்கும் அருகன் ஆகான். வாழ்க்கைக்கு யாண்டும் பொன்றாத் துணையாவது பிரம்மசரியம்.

### பயிற்சிகளுள் பெரியது

கல்வி பயிலும் பருவம் பிரம்மசரிய ஆஸ்ரமம் என்று சொல்லப்படுகிறது. கலைகள் பயிலுதற்கு இளமைப் பருவமே சாலச் சிறந்தது. அதனாலேதான் 'இளமையிற் கல்' என்ற ஆணை பிறந்தது. மானுட ராய்ப் பிறந்தவர் எல்லார்க்கும் இது பொதுவான நெறி. இதன்படி ஒழுக எல்லாரும் கடமைப்பட்டிருக்

கின்றனர். பிள்ளைப் பருவம் புதிதாக வனைந்த சட்டி போன்றது. அப்போது அதன்மீது பதிப்பிக்கப்படும் உயர்ந்த எண்ணங்களும் சீரிய இயல்புகளும் என்றைக்கும் மாறா. மாணுக்கர்களுக்குத் தொழிற்கல்வி இன்றியமையாதது என்று இக்காலத்தில் உலகெங்கும் உள்ள அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இந்தியாவும் இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறது. உடல் உழைப்பை ஒட்டிய தொழில் ஆடவர் மகளிர் ஆகிய இருபாலர்க்கும் வேண்டப்படுவது என்பதும், அப் பயிற்சி இளம்பிராயத்திலேயே அளிக்கப்படவேண்டும் என்பதும் பலர் கருத்து. ஆனல் நம் நாட்டில் முன்பு ஒரு காலத்தில் இருந்த, இதைவிட முக்கியமான பயிற்சி ஒன்றை மறந்துவிடலாகாது. அக்காலத்தைவிட இக் காலத்தில் அது பெரிதும் வேண்டப்படுகிறது. மானுட வாழ்க்கையானது பரஸ்பர உதவியை அடிப்படையாகக் கொண்டது என்னும் கோட்பாடு இந்நாளில் அறவே மறைந்து போய்விட்டது. எங்கும் ஒரே போட்டி மயம். போர்க்களத்தின் காட்சியே யாண்டும் தென்படுகிறது. பகுத்தளித்தல் என்னும் பண்புக்குப் பதிலாகப் பறித்துப் பிடுங்குதல் என்னும் பாதகமே பார்க்குமிடமெங்கும் காட்சி கொடுக்கிறது. நவீனப் படிப்பு முறையே இத்தகைய புல்லிய நோக்கத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. பழம் புனிதம் பாடசாலைகளை விட்டுப் பறந்தோடிவிட்டது. கல்வியானது கைங்கரிய மயமாய் இருந்ததுபோய் இப்போது போட்டி மயமாய் மாறியிருக்கிறது. என்னென்ன முறைகளில்

பிறரைவிடத் தாம் மேலாம் அந்தஸ்து வகிக்கமுடியும் என்பதுவே இக்காலத்தவர் பெறும் பயிற்சியாகும். துவேஷமும் துயரமும் அதிகரிப்பது இதனாலேயாம்.

பண்டைக் காலத்திய பிரம்மசரிய ஆஸ்ரமம் எவ்வாறிருந்தது? செல்வத்தைவிடச் சீலம் சிறந்தது என்ற கொள்கையை அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. குணசீலத்தை வளர்ப்பதில் கவனம் முழுதும் செலுத்தப்பட்டது. ஒழுக்கமும் உயர் குணமும் உடையார்க்குப் பிற யாவும் உண்டு; அஃதிலார்க்கு வேறு எது இருந்தும் பயன்படாது. நற்குணமும் நல்லொழுக்கமும் வெறும் ஏட்டுக்கல்வியால் வருவதன்று. ஒருவனுடைய புனித வாழ்வானது பலபேர் புனிதம் பெறுதற்குத் தூண்டுகோலாகிறது.

நலம் பெறுதற்கு நல்லாரிணக்கம் இன்றியமையாதது. தோய்க்கும் சாயம் எதுவோ அதை வெள்ளை வேஷ்டி எளிதில் ஏற்பதுபோன்று சிறுவர் மனது சகவாசத்துக்கு ஏற்ப அமைகிறது. மேன்மையனைத்துக்கும் உறைகளமாயிருந்த ஆசிரியர்களோடும் ரிஷிகளோடும் பிரம்மசாரிகள் குருகுலவாசம் பண்ணுவது முன்னாளில் ஏற்பட்ட முறையாகும். தம்பால் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களை அப்பெரியார்களும் சாலப் பரிந்து பராமரித்து வந்தனர். காந்தத்தினை அணுகிய இரும்பு காந்தம் பெறுவதுபோன்று மாணாக்கர்களும் மாண்பு மிகப் பெறலாயினர். புலனடக்கம் இயல்பாகவே வந்து வாய்த்தது. தொண்டு புரிதலும், பிறர்க்கென வாழ்தலும், மலரானது மணம் கமழ்வதுபோன்று சர்வ சாதா

ரணமாய் அமையலாயின. உலையில் இட்ட இரும்பு துரு நீங்கப் பெறுவது போன்று சத்சங்கத்தால் தீக் குணங்களெல்லாம் பறந்தோடின. அஹிம்சை, க்ஷமை, தபசு முதலிய தெய்வத்தன்மைகள் என்றைக்கும் மாறா வண்ணம் மனதிற் படிந்தன. வாழ்க்கை இனிது பண் பட்ட பிறகு ஆத்ம சாதனம் பயிலுவிக்கப்பட்டது. அத்தோடுகூட சமுதாய வாழ்க்கைக்குத் தேவையா யிருந்த தொழில்கள் பல கற்பிக்கப்பட்டன. தூய உள்ளம், அலர்ந்து ஞான ஒளி வீசும் முகவிலாசம், எக் காரியத்தையும் சாதிப்பதற்கு ஏற்றவாறு பயிற்சி பெற்ற உடல் ஆகியவைகளோடு அவ்விளைஞர் திகழ்ந் தனர். அத்தகைய மேலாம் பயிற்சிகள் யாவையும் பெற்ற பின்பே பிரம்மசாரிகள் சமூக வாழ்க்கையில் பிரவேசிக்க அனுமதியையும் ஆசீர்வாதத்தையும் பெற்றனர்.

பொருளை மிகப் படைத்திருப்பதாலேயே ஒரு தேசம் மேலானதாய்விடாது. செல்வம் சேமிப்பதும் ராஜ்யம் நிறுவுவதும் பெரிதல்ல. இகலோக வாழ்வுக்கு இவை யாவும் வேண்டப்படுவன வெனினும், இவை களை நன்னெறியில் பயன்படுத்த வல்ல உத்தமர்களே இவைகளுக்குப் புனிதமும் பண்பும் வழங்குகின்றனர். ஆக, எல்லாவற்றிலும் மேலாக மக்களைத் தேவர் போன்று ஆக்குதலே நம் தேசியக் கல்வியின் குறிக் கோள் என்பதை யாண்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

## உடலையும் உள்ளத்தையும் ஒட்டிய தத்துவம்

உணவு, உடை, உறக்கம் இவைகளின் தத்துவங்களை அறிந்து அதற்கேற்ப ஒழுகுவது நன்மைபயக்கும். இவை யாவையும்விட மேலானது உடலையும் உள்ளத்தையும் ஒட்டிய தத்துவம். மனதில் மாறுதல் உண்டாகும்போது சரீரத்திலும் மாறுதல் உண்டாகிறது. அவ்வாறே சரீரத்தில் உண்டாகும் மாறுதல் மனதையும் மாற்றியமைக்கிறது. உள்ளம் தளர்வுறும்போது உடலும் தளர்வுறுகிறது. ஒன்று வலிவு பெறும்போது மற்றதும் வலிவு பெறுகிறது.

உடல் முதிர்ந்து பக்குவமடைதல் என்பதொன்று உண்டு. பக்குவமடைதல் ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் பொதுவானது. பிரஜோத்பாதனம் அல்லது பிள்ளையைப் பிறப்பிக்கும் ஆற்றல் சரீரத்துக்கு உண்டாகும்போது அது பக்குவமடைந்ததெனக்கருதப் படுகிறது. பக்குவம் அடையும் பருவம் வரும்போது உள்ளத்திலும் உடலிலும் பல மாறுதல்கள் உண்டாகின்றன. வாழ்க்கையில் அது ஒரு நெருக்கடியான சந்தர்ப்பமாகும். அதுபோழ்து எந்த விதமாக நடந்து கொள்ளவேண்டும் என்று பெற்றோர்கள் அல்லது ஆசிரியர்கள் இளைஞர்களுக்குப் புகட்டவேண்டும். ஆனால் தௌர்ப்பாக்கிய வசத்தால் இக்காலத்தில் அதைப்பற்றிப் பேசுவார் கிடையாது. பகரத் தகுதியற்ற புல்லிய விஷயமென்று அதை அனைவரும் புறக்கணித்துவிடுகின்றனர். பக்குவம் அடைந்துவரும் இளைஞர்களோ அத்தத்துவத்தை இன்னதென்று அறிந்துகொள்ளாது

வாழ்க்கையைப் பலவிதங்களில் பாழாக்கிவிடுகின்றனர். அவ்வாறு மானுட வர்க்கம் பாழாகாவண்ணம் பண்டைக்காலத்தவர் பிரம்மசரிய ஆஸ்ரமத்தைப்பற்றி எச்சரிக்கை மிக எடுத்துக்கொண்டிருந்தனர். சமுதாயத்துக்குத் தபோதனர் செய்த பேருபகாரம் அதுவேயாம். உடலும் உள்ளமும் சின்னுபின்னப்பட்டுக் கிடக்கிற இக்காலத்தில் அறிஞர் அது விஷயத்தில் பேரூக்கம் செலுத்தவேண்டும். வாழ்க்கைத் தத்துவத்தை உள்ளபடி அறிந்து அதைப் பழக்கத்தில் கொண்டுவருவது அவர்களது கடமையாகும்.

வாலிபர் பக்குவம் அடைவது பன்னிரண்டாம் வயதுக்கு மேற்பட்டுப் பதினுரும் வயதுக்குள்ளாம். பக்குவமாதல் எவ்வளவு பிந்துகிறதோ அவ்வளவு உடலுக்கு நல்லது. விரைவில் அதாவது பருவத்துக்கு முன்னதாகவே பக்குவமாதற்குக் காரணங்கள் இரண்டு உண்டு. உஷ்ணப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் குளிர்ச்சி பொருந்திய நாட்டில் வசிப்பவர்களைவிட விரைவில் முதிர்ச்சியடைந்து விடுகிருர்களாம். அவர்களுக்கு ஆயுளும் பொதுவாகக் குறைவு என்றே சொல்லப்படுகிறது. இங்ஙனம் சீதோஷ்ணத்தால் வரும் பலாபலன்களைத் தடுப்பது எளிதன்று. விரைவில் பக்குவமடைதற்கு மற்ருெரு காரணமுண்டு. அது மிக முக்கியமானது; அனைவரும் கவனிக்க வேண்டியதும் அதுவே. உடலுக்கும் உள்ளத்துக்கும் பெரும் பொருத்தமிருக்கிறது. மனதில் காமமும் பால் எண்ணமும் (sexual thought) எந்த இளைஞர்களுக்கு அதிகம் உண்டாகின்றனவோ

அவர்கள் விரைவில் சரீர முதிர்ச்சியடைந்துவிடுகின்றனர். வியாகூலப்படுபவர்களுக்கு விருத்தாப்பியமும் நரையும் வேகமாய் வருவதுபோன்று உள்ளத்தில் காம எழுச்சியை உகக்கும் சிறுவர்களுக்குச் சீக்கிரமாய் சரீர முதிர்ச்சி வந்துவிடுகிறது.

தங்கள் குழந்தைகளுக்கு மணம் முடித்துவைப்பதைப்பற்றிப் பெற்றோர்கள் எத்தகைய உவகையுடன் உரையாடுகிறார்கள் என்பது உலகறிந்த விஷயம். மக்களுக்கு அன்னவர் ஆற்றும் பணி அதைவிட மேலானது ஒன்றும் இல்லைபோலும்! இயற்கையாகப் பழுத்தற்குரிய காயைப் புகை போடுதல், வெப்ப மூட்டுதல் முதலிய செயற்கை முறைகளால் விரைந்து பழுக்கும்படிச் செய்கின்றனர். அதனால் அது வெம்பிச் சுவையை இழந்துவிடுவது வெளிப்படை. அதுபோன்று தூய எண்ணங்களில் தோய்ந்து தெய்வீகமாகத் திடம்பெற வளருதற்குரிய சின்னஞ் சிறுவர்களுக்குக் காமம் என்னும் கொதிப்பை ஊட்டி விரைவில் முதிர்ந்து வீரியத்தை இழக்கும்படிச் செய்வது சமுதாயத்தையே பாழ்படுத்துவதாகும். மரஞ்செடி கொடிகள் வலிவு பெற்று வளர்வதிலும், கால்நடைகள் கட்டுடையவைகளாவதிலும் கவனம் மிகச் செலுத்தப்படுகிறது. ஆனால் மக்கள் மட்டும் தங்களிடத்து உள்ள அறியாமையினால் தமது மாண்புகளையெல்லாம் வீணாக்குகின்றனர். இத்தகைய பெருஞ் சேதத்தைப்பற்றிச் சிந்திப்பார் இலர்.

**பக்குவமடைதல்**

உடலில் உள்ள அமைப்புகளில் மிக உயர்ந்தது மூளை. தாதுக்கள் அனைத்தின் சாரம் என்றே அதைச் சொல்லலாம். உறுதியான மண்டையோட்டினுள் அது இயற்கையாகவே நன்கு காப்பாற்றப்பட்டுள்ளது. அதற்கு மேலேயுள்ள மூடியும் ஒருவிதமான பாதுகாப்பாகும். எண்ணம் என்னும் உயர்ந்ததும் சூக்ஷ்மமானதுமாகிய தத்துவம் மூளையின் வாயிலாகவே உத்பவிக்கிறது. மக்களை மிருகங்களினின்று சிறப்பிப்பது எண்ணம். அது சீரியதாகுமளவு மனிதனும் மேலோன் ஆகின்றான். ஆதலால் எண்ணம் அல்லது சிந்தைக்குப் பிறப்பிடமாகிய மூளைக்கு அத்தகைய உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பட்டுள்ளது. மூளையினின்று மூலாதாரம் வரையில் (அதாவது உடலின் அடிப்பாகம் வரையில்) சுஷும்னை என்னும் நாடி ஒன்று உண்டு. ஆங்கிலத்தில் அதை Spinal cord என்பார்கள். முதுகுக்கு ஆதரவாயிருக்கும் முள்ளந்தண்டு அல்லது முள் எலும்புச் சங்கிலியின் நடுவில் ஒரு குழாய் வழியாக அது செல்லுகிறது. மூளையைக் கபால ஓடு காப்பது போன்று சுஷும்னை நாடியை முள் எலும்புச் சங்கிலி ஆதரித்து வருகிறது. ஜீவநாடிகளுள் சுஷும்னை நாடியே மிக முக்கியமானது.

சிறுவர்களுக்குப் பக்குவம் வரும்போது மூளைக்கு ஒப்பாகிய ஒரு உயர்ந்த தாது சுஷும்னை நாடியில் உண்டாகிறது. உச்சந்தலையிலிருந்து மூலாதாரம் வரையில் அது பரவுதற்கு அறிகுறியாக ஆங்காங்கு ரோமம்

வளர ஆரம்பிக்கும். சரீரத்தின் பக்குவ தசையை அது விளக்குகிறது. சுஷும்னை நாடியில் உண்டாகும் தாது வானது பால்வேற்றுமைக்கு ஏற்பச் சுக்கிலம் என்றோ அல்லது சுரோணிதம் என்றோ சொல்லப்படுகிறது. ஆடவரிடத்து அது சுக்கிலம் என்றும், மகளிரிடத்து சுரோணிதம் என்றும் பெயர் பெறுகிறது. ஈண்டு நாம் அதை விந்து என்னும் பொதுப் பெயரால் அழைப் போம். மரத்தில் வித்து உண்டாவது போன்று மக் களிடத்து விந்து உண்டாகிறது. மரம் வலிவுபெற்று வளர்தற்கு வித்தே முதற்காரணம் என்பது தேற்றம். மரத்தைவிட மனிதன் எவ்வளவு மேலானவனோ, விந் தைப்பற்றிய தத்துவமும் அவ்வளவு மேலானது. ஆத லால் அறிவிற் சிறந்த மக்கள் அனைவரும் அதை நன்கு உய்த்துணர வேண்டும். ரத்தத்தில் மிக உயர்ந்ததும் சக்திவாய்ந்ததுமான அணுக்களினின்று விந்து உண்டா கிறது என்று வைத்திய நிபுணர்களும் யோகியர்களும் ஒருங்கே இயம்புகின்றனர். தெள்ளி யெடுக்கப்பட்ட ரத்தத்தின் சில நூற்றுக்கணக்கான துளிகள் சேர்ந்து ஒரு துளி விந்துவாகின்றதாம். ரத்தத்தைவிட அது பன்மடங்கு சக்திவாய்ந்தது. ஜீவகளை என்பது முற்றும் அதனூடே உளது. எல்லாம் வல்ல இறைவனிட மிருந்து மக்களுக்கு வரும் பேராற்றல் அதுவேயாம். சூரிய ஒளி போன்று அது எல்லார்க்கும் பொதுவானது. சரீரத்தில் விந்து உண்டாகப்பெறும் சிறுவர் அதை எங்ஙனம் உபயோகிக்கின்றனரோ அங்ஙனம் அவர்களு டைய வாழ்வானது உயர்வு அல்லது தாழ்வு எய்து

கிறது. பணத்தை ஒரு மனிதன் மிக மேலான காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும். மற்று அதனுல் தானும் உலகமும் துன்புறுமாறு துர்ப்பிரயோகப் படுத்தவும் கூடும். பணம் எல்லார்க்கும் சமனுக அகப்படுவதில்லே. விந்து என்னும் ஜீவதாதுவோ எல்லார்க்கும் பொதுவாய் இறைவனுல் அளிக்கப்படுவதுமன்றி அது செல்வத்துள் மிகச் சிறந்ததாகும். அத்தகைய பெருஞ் செல்வத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதே பலருக்குத் தெரியாதிருக்கிறது. விந்துவை என்னென்ன விதங்களில் உபயோகப்படுத்திஞல் என்னென்ன தன்மைகளே அடையலாம் என்று மக்கள் அனைவர்க்கும் அறிவுறுத்துவதே நாம் அவர்களுக்குச் செய்யும் அரும்பணியாகும். இது சம்பந்தமான கோட்பாடுகளேக் கற்றறிந்து அவைகளே வாழ்வில் கடைப்பிடிக்குமளவு அவர்கள் நன்மை யெய்துவர்.

### விரதங்களுள் பெரியது

ஆகாயகங்கை கட்டுக்கடங்காது வேகமாய் பூலோகத்துக்கு வருவதுபோன்று பக்குவமடைந்த சரீரத்தில் விந்துதாரை சிரசினின்று மூலாதாரத்தை நோக்கி வரும். நெருக்கடியான அப்பருவத்தில் காளேகளின் மனதில் புதிய புதிய எண்ணங்கள் உத்பவிக்கும். சிந்தையானது அப்போது பெரிதும் சிற்றின்பத்தையே நாடிச் செல்லும். சிற்றின்ப ஞானத்தைக் கேட்டறியாதவர்களுக்கும் ஜன்மாந்தர வாசனேயின் பயனுக அது இயல்பாகவே உதித்துவிடும். இந்திரியங்கள் வேகம் பெற்று, வெறிபிடித்துக் கட்டுக்கு அடங்காது அலேந்து

திரியும். விஷய சுகங்களைப்பற்றி மனோராஜ்யம் பண்ணு வதில் பேருவகை உண்டாகும். மனம் திமிர் பிடித்துக் கொண்டு அற்பச் செய்கைகளில் சரீரத்தை உந்தித் தள்ளும். காமநோயால் உடற்றப்படும் காளைக்கு எப் படியாவது விந்துவைக் கலைப்பதற்கே எண்ணம் வரும். அதை விரயம் செய்தாலன்றி வெறியும் அடங்காது. அத்தகைய பொல்லாத நிலைமையில் இருக்கும்போது தான் இளைஞர்கள் பலர் எத்தனையோவிதத் தீச்செயல் களுக்கு ஆளாகின்றனர். மதம் பிடித்த யானையைக் கட்டியடக்கினால் அது நமக்கு வேண்டிய வேலை செய் யும். ஆனால் அது போகின்ற வழியில் விட்டுவிட்டால் நம்மை மிதித்துக் கொன்றுவிடும். விந்து தாரையானது மதயானையைவிடப் பன்மடங்கு வீரியம் வாய்ந்தது. அதைச் சேதப்படுத்துபவன் வீரியத்தை இழந்து வாழ்க்கையை அறவே குலைத்துக் கொள்கிறான். அப் படியல்லாது அதை நல்வழியில் நன்கு காப்பது ஒன்றே அவன் அனுஷ்டிக்கும் விரதமாகும். ஏனைய விரதங்க ளெல்லாம் இதனுள் அடங்கிவிடுகின்றன. நன்மை பயக்கும் ஒழுக்கத்துக்கு விரதம் என்று பெயர். விந் துவை விரயம் பண்ணாது காப்பதால் தெய்வ சம்பத் துக்கள் சகலமும் தாமே உண்டாகின்றன. அதை ஆத்ம சக்தி என்கிறோம். ஆகையினால் பிரம்மசரியம் ஒன்றே விரதம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. ஆங்கிலத்தில் "Chastity is life and sensuality is death" என்று ஓர் அறிவுரை உண்டு. தூய்மையே வாழ்வு, சிற் றின்பநுகர்ச்சியே மரணம் என்பது அதன் பொருள்.

கெட்ட எண்ணமும் செய்கையும் விந்துவைக் கலைத்து விடுகின்றன. விந்து நாசத்தைவிட உடலுக்குக் கேடுடையது வேறு ஒன்றுமில்லை. வெண்ணெய் திரண்டு வரும் தருணத்தில் தயிர்ப் பாண்டத்தை உடைப்பதற்கு ஒப்பாகும் விந்துவை விரயம் பண்ணுவது. அத்தகைய தீச்செய்கையுடையவனது தேகத்தில் திட்பத்தைக்காணமுடியாது. தைரியத்துக்கும் அவனுக்கும் வெகுதூரம். திடகாத்திரத்துடன் அவன் எக்கர்மத்திலும் பிரவேசிக்கமாட்டான். உள்ளத்தின்கண் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் காணமுடியாது. தேகம் தளர்வுற்றுக்கிடக்கும். முகம் வாடி வதங்கி ஜீவகளை யற்றுப்போம். ஒளி மழுங்கிக் கண்களும் கெட்டுவிடும். வாலிபத்துக்கு இன்றியமையாத பொலிவு அழிந்து கிழத்தனம் தட்டும். புத்தியில் தீட்சண்யம் இராது. சித்தமிசை சதா சஞ்சலமும் சந்தேகமும் குடிகொள்ளும். காமநோய்க்கு அவன் மேலும் மேலும் எளிதில் இரையாவான். உடலில் உள்ள உறுப்புக்கள் ஒழுங்காக வேலை செய்யா. நரம்புகளெல்லாம் தளர்ந்தும் தசைகள் வலிவற்றும் போய்விடும். மூளை கலங்கி ஞாபக சக்தி குன்றும். எத்தகைய ஆகாரமும் மருந்தும் இக்கேடுகளுக்குப் பரிகாரம் ஆகா. ஒழுக்கம் தவறிய ஒரு செய்கையினின்று இத்தனைகேடுகளும் தொடர்ந்து வருகின்றன.

பிரம்மசரியம் எத்தகைய பண்பு அளிக்கவல்லது என்று சிவசம்ஹிதை தெற்றென விளக்குகிறது.

'मरणं बिन्दु पातेन जीवनं बिन्दु धारणात् '

'மரணம் பிந்து பாதேன ஜிவனம் பிந்து தாரணாத்'

விந்து கலைந்து வீழ்வதால் மரணமும், விந்து முறையே கட்டிக் காப்பாற்றப்படுவதால் ஜீவனமும் உண்டாகின்றன என்று அது முரசறைகிறது. சூரியப்பிரகாசம் தன்னைத்தானே விளக்குவதுபோன்று விந்து தாரணத்தின் மகிமையும் ஓவாது ஒளிரும். தேக வளர்ச்சிக்கும் மனத்திட்பத்துக்கும் பிரம்மசரியத்தைப் போன்று வேறு எதுவும் பயன்படாது. வாழ்க்கையில் ஒழுக்கமும் தூய்மையும் உடைத்திருப்பவர்க்கு ஜீவதாதுவாகிய விந்து உடலெங்கும் வியாபித்து அதில் லயமாகின்றது. மேலான மூளையும் நாடிகளும் தசைகளும் அதினின்று உண்டாகின்றன. உடலுக்கும் உள்ளத்துக்கும் அத்தகைய வலிவூட்டிய பழங்காலத்துப் பிரம்மசாரியானவன்

**आप्यायन्तु ममाङ्गानि वाक्प्राणश्चक्षुः ।**
**श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि ॥**

ஆப்யாயந்து மமாங்கானி வாக்ப்ராணஸ்சக்ஷுः
ஸ்ரோத்ரமதோ பலமிந்த்ரியாணி ச ஸர்வாணி

"எனது அங்கங்களும், வாக்கும், பிராணனும், கண்களும், காதும், பலமும், இந்திரியங்கள் யாவும் திட்பமுடையனவாகுக" என்று பிரார்த்தித்தான். விரும்பியவாறு அவன் அத்தகைய மாண்புகளையும் எய்தினான்.

ஆக, பிரம்மசரிய விரதத்தைக் காப்பவனுக்கு ஆண்மையுண்டு. அவனே அஞ்சாத நெஞ்சம் படைத்

தவன் ஆவான். தைரியம் அவன் மாட்டுத் திகழும். வீரன் என்று அவனை அழைக்கலாம். அவனுடைய வதனத்தில் ஆனந்தம் வழியும், கண்களில் ஒளிவீசும். சிதறடையாத அவனது சிந்தையில் கூர் அம்புபோன்று அறிவு ஒளிரும். தொடுத்த கருமத்தை விடாதுசெய்து சாதிக்கும் வல்லமை பிரம்மசாரிக்கே உண்டு. உள்வலிவு கலையாமை என்னும் விரதத்தைக் கடைப்பிடிப்பவனை மனிதன் என்றுசொன்னால் போதாது, மானுட வேடம் தாங்கியுள்ள தேவன் என்றே அழைக்கவேண்டும்.

**சிந்தையின் வலிமை**

வஸ்து ஒன்று சூக்ஷ்மமாதற்கேற்ப அது வலிவு மிகப் பெறுகிறது. ஜலத்தை அதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். அது உறைந்து பனிக்கட்டியாகக் கிடக்கும்போது அதன் ஆற்றலும் மறைந்து போகிறது. உருகி நீராகப் பெருகும்போது அது ஒரு யானையையும் அடித்துக்கொண்டு போகவல்லதாகிறது. அதே நீர் ஒரு குழாய் வழியாக மலையினின்று கீழே கடத்தப்படும்போது பெரிய யந்திரங்களை ஓட்டுதற்கேற்ற வேகம் பெறுகிறது. இன்னும் கொதித்து ஆவியாகும் போது பெரிய யந்திரங்களை இயக்குகின்ற சக்தி அதற்கு அதிகரிக்கிறது. எனவே பொருள் ஒன்றே எனினும், நுண்ணியதாகுமளவு அதன் திறமை மேம்படுகிறது. சரீரத்தில் சூக்ஷ்மம் ஸ்தூலம் ஆகிய இரண்டு பகுதிகளும் சேர்ந்தே இருக்கின்றன. ஊன் உடம்பு ஸ்தூல சரீரம் என்றும், மனோதத்துவம் சூக்ஷ்மசரீரம் என்றும் சொல்லப்படுகின்றன. பருத்த உடலை நுண்ணியதாகிய

உள்ளம் எப்பொழுதும் இயக்குகிறது. ஏதேனும் ஒரு ஆபத்தினின்று தப்பவேண்டுமென்ற எண்ணம் சிந்தையில் துள்ளியெழும்போது தளர்வுற்றிருக்கும் சரீரமும் நெடுந்தூரம் விரைந்து ஓடுகிறது. சூக்ஷ்ம சரீரமே ஸ்தூல சரீரமாகத் திரளுகிறது. அதாவது நுண்ணிய மனமே பருத்த உடலாகப் பரிணமிக்கிறது. இன்னும் தேகமானது மனத்தால் உபயோகிக்கப்படும் ஒரு கருவியாகும். மனதுக்கிசைந்து உடல் நடந்துகொள்வதுமன்றி, மனத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப உடலும் மாறி அமைகிறது. தேக அமைப்பு சித்த விருத்தியை ஒட்டியதாகும். உள்ளம் தூயதாகும் போது உடலும் தூயதாகிறது. உள்ளம் காமனது உறைவிடமாகும்போது உடலும் அவ்வாறே திரிவு படுகிறது.

வலிவு மிக வாய்க்கப்பெற்ற சிந்தையை மேலும் பண்படுத்துவதே பிரம்மசரிய ஆச்ரமத்தின் நோக்கமாகும். சிந்தைக்கு வலிவு ஆத்மாவிடத்திருந்து வருகிறது. உடலை அலங்கரிப்பதில் இக்காலத்தில் கருத்து வைக்கப்படுகிறது. பாங்குடன் ஆடையணிபவர் மேன்மக்களெனப் போற்றப்படுகின்றனர். சீருடன் உடை தரியாதவர் சமுதாயத்தின் முன் தோன்றலாகாதென்று எண்ணப்படுகிறது. உடலை அலங்கரிப்பது யாருக்குமே எளிது. உள்ளத்தை ஒழுங்குப் படுத்துபவனே உத்தமனுவான். உடல் அமைப்பில் மனிதர் போன்று காணப்படுபவர் பலர் மன அமைப்பில் மிருகங்கள்போன்று உளர். பிறர் மேனியைக் காண்பது

போன்று பிறருடைய மனதையும் காண மனிதனுக்கு இயலுமாயின் அநேகர் சமுதாயத்தின் முன் தோன்றத் தயங்குவர். ஏனென்றால் வெட்ககரமான கசுமலங்கள் மனதில் புதைந்து கிடக்கின்றன. நாள்தோறும் மனதில் உதிக்கும் எண்ணங்களையெல்லாம் உள்ளபடி உலகுக்கு எடுத்துச் சொல்ல யாருமே வெட்கப்படுவர். இத்தகைய பரிதாபகரமான நிலைமையில் இருக்கும் மனிதன் தன்னைப்பற்றிப் பெருமை மிகப் பாராட்டுவது எதற்காக?

பிரம்மசரிய வாழ்க்கையில் முக்கியமாக வேண்டப்படுவது மனதை நன்கு அலசிப்பார்த்து அதன்கண் உள்ள ஊழல்களையெல்லாம் அகற்றுதலேயாம். ஏனைய ஊழல்களுக்கெல்லாம் காரணமாயிருப்பது காமநோய். காமம் என்னும் மலம் சித்தத்தினின்று அறுபடும்போது ஜீவன் சிவமாகின்றான். அவ்வாறு தெய்வத் தன்மை எய்துதற்கு மனிதன் என்ன செய்யவேண்டுமென்று கடவுளே தபசு புரிந்து காட்டுகிறார். சிவபெருமான் ஆழ்ந்து ஆத்ம நிஷ்டையிலிருக்கும்போது காமன் வந்து அவரது மனதைக் கலைக்க முயலுகிறான். மன்மதனுக்கு வசப்படாத அவர் ஞானக்கினியால் அவனைப் பஸ்பம் செய்துவிடுகிறார். உயர்நிலையடைய விரும்புபவர் செய்யவேண்டியது இதுவேயாம். காமனுக்கு வசப்படுபவர் கீழ்மையையும், அவனை வெல்லுபவர் மேன்மையையும் அடைவார். For there are some eunuchs, which were so born from their mother's womb; and there are some eunuchs, which

were made eunuchs of. men; and there be eunuchs, which have made themselves eunuchs for the kingdom of heaven's sake. He that is able to receive it, let him receive it. "சிலர் தாயின் வயிற்றினின்றே பேடுகளாகப் பிறக்கின்றனர்; சிலர் மக்களால் பேடுகளாக்கப்படுகின்றனர்; இன்னும் சிலர் பரலோகப் பிராப்தியின் பொருட்டுத் தாமே பேடுகளாகின்றனர். இதை அறிந்துகொள்ள வல்லவன் அங்ஙனம் செய்யட்டும்," என்றார் கிறிஸ்துநாதர். பரலோகப் பிராப்தியின் பொருட்டுப் பேடு ஆகின்றவன் வெறும் அலி அல்லன். அலியினிடத்து ஆண்மையில்லை, வீரியமில்லை; பதர் போன்றவன் அவன். ஆனால் இந்திரியங்களை வென்று பிரம்மசரிய விரதத்தில் நிலை நிற்பவன் மகாவீரன். அவனது மனவலிமையையும் ஆத்ம சக்தியையும் அளவிட யாருக்கும் இயலாது. சங்கரர், புத்தர், ஏசு கிறிஸ்து, விவேகானந்தர் போன்ற பெரியார்கள் பாரமார்த்திகப் பெருவாழ்வின் பொருட்டுப் பேடுகளாயினர். அத்தகைய வாழ்வின் மூலம் உலகுக்கு அவர்கள் வழங்கிய நன்மையும் ஒப்பற்றதாகும். தெய்வத் தன்மை யெய்த விரும்பும் அனைவர்க்கும் என்றென்றைக்கும் அப்பெரியார்களுடைய வாழ்வு தூண்டுகோல் போன்று பயன்படும்.

### விழிப்பு வெற்றிதரும்

தீய எண்ணம் திருடனைப் போன்றது. திருடனுக்கு வெளிச்சத்தில் வேலையில்லை; விழித்திருப்பவர் வீட்டினுள்ளும் அவன் நுழையமாட்டான். மேலாம்

வாழ்க்கையைப்பற்றிய உணர்ச்சியில்லாதவர் உறங்குபவர்க்கு ஒப்பாவார். இருள் சூழ்ந்த அவர்களது உள்ளத்தில் அற்ப எண்ணங்கள் எளிதில் உதிக்கின்றன. அத்தகைய நினைவுகளைத் தடுப்பதும் அவர்களுக்குச் சாத்தியமன்று. கேடுடைய செய்கைகளைப்பற்றி நினைக்க நினைக்க அவைகளைப்பற்றிய ஞானம் உண்டாகிறது. முன்பு தெரிந்திராத ஒன்றின்மீது மனிதனுக்கு ஆசை வருவதில்லை. கேட்டும், பார்த்தும், எண்ணியும், தீண்டியும் ஒரு பொருளை அறிந்த பின்பே அதன்மீது பற்று உண்டாகிறது. உயர்ந்த லட்சியத்துக்கு உழையாதவரது இருள் நிறைந்த உள்ளத்தில் புல்லிய எண்ணங்களே உதிக்கின்றன. அவர்கள் பார்ப்பதும், கேட்பதும், புழங்குவதும் அற்ப விஷயங்களையேயாம். எனவே அற்ப ஆசைகளில் கட்டுண்டு அவர்கள் கீழ்மக்களாகின்றனர்.

ஓர் எண்ணத்தில் ஆழ்ந்து மூழ்கியிருப்பவனுக்கு மற்றோர் எண்ணம் உதிப்பதில்லை; உதித்தாலும் அது உடனே மறைந்துபோம். நெருங்கிய உற்றார் அல்லது உறவினர் உயிர்மரித்தகாலை ஒருவனுக்கு அற்ப ஆசை உதிப்பதில்லை. துயரத்தில் மூழ்கிக் கிடக்கும் மனதிற்கு அப்போது வேறு எதையும் பற்றி எண்ண அவகாசமில்லை. அவ்வாறே உயர்ந்த லட்சியம் ஒன்றில் கண்ணும் கருத்துமாயிருப்பவர்க்கு, அந்த உயர்ந்த லட்சியத்தை அடைந்தாலொழிய உயிர் வாழ்ந்திருக்கச் சகியாதவர்க்கு சிற்றின்பங்களைப்பற்றி சிந்திக்க நேரமில்லை. சிற்றின்பத்துக்கு ஏதுவானவைகள் அவரைநாடி வலிய

வரினும் அவர் அவைகளைத் துச்சமெனத் தூர ஒதுக்கு வர். ஏசுகிறிஸ்துவின் ஜீவியத்தில் நாம் அத்தகைய மனநிலையை நன்கு காண்கின்றோம். பரத்தினைச் சார அவர் பசித்திருந்தார். அவ்வுயர் நிலையை அடைந்தா லொழிய உயிர் வாழ்ந்திருக்கவும் அவர் ஒருப்பட்டார் அல்லர். அதுபோழ்து புல்லிய ஆசைகளுக்கு உறைவிட மாகிய பிசாசு அவரை வந்து மயக்க முயன்றது. பெறு தற்கு அரிதாகிய ஒன்றை நாடிப் பரிதவிப்பதைத் தவிர்த்துவிட்டு இன்பகரமான சுகங்களை எளிதிற் பெற்று இன்புற்றிருக்கலாமென்று அது மையலூட் டிற்று. "பிசாசே, நீ அப்பால் செல்லுக," என்று ஏசு நாதர் அதை விரட்டியோட்டினார். ஏனென்றால் அவர் மெய்ப்பொருளை நாடி விழிப்புற்றிருந்தார். அதற்கு அன்னியமான எதனிடத்திலும் அவர் சிந்தையைச் சிதறவிட இயைந்தாரல்லர்.

புத்தர் பெம்மானது நிலைமையும் அத்தகையதே யாம். அவர் கடுந்தவம் புரிந்துகொண்டிருந்தபோது மன்மதன் அவர் முன்தோன்றி அவரை மயக்கமுயன் றான். அதுபோழ்து புத்தர் என்செய்தார்? ஆசை என்னும் காற்று வீசும்போது அற்ப மனதையுடை யவர் செடி கொடிகளைப்போன்று ஊசலாடுவர். கற்பாறை போன்று உறுதியான உள்ளத்தையுடை யவர்முன் ஆசை என்னும் புசல்காற்று என் செய்யும்? மன்மதனால் மயக்கப்பட்டபோது புத்தர் செய்த தீர்மா னம் சாதகர்களுக்குச் சந்ததமும் உயிர் ஊட்டவல்ல தாகும் சிங்கம்போன்று அவர் கர்ஜித்தசபதமாவது:—

"பர்வத ராஜனுகிய மேரு தன் இடத்தைவிட்டு நகரலாம், அண்டங்களெல்லாம் நொறுங்கி ஆகாயத்தில் மறைந்து போகலாம், சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரகணங்களும் தத்தம் போக்கினின்று பிசகிவிடலாம், ஜகத்திலுள்ள ஜீவர்களெல்லாரும் ஒரே மனப்பான்மையைப் பெற்று விடலாம், சமுத்திரம் வறண்டுபோய்விடலாம் — ஆனல் ஓ மன்மதா! நான் கொண்டுள்ள விரதத்தினின்று நீ என்னை அணுவளவும் அகற்றமுடியாது." *பிரம்மசரிய விரதத்தில் நிலைநிற்பவர்க்கே இத்தகைய உறுதி உண்டாகும். நாடிய கருமத்தைத்தவிர வேறு எதிலும் அவர் கருத்துவையார். விழிப்பும் வீரியமும் வாய்க்கப்பெற்ற அவர்களது உள்ளம் மேலாம் லட்சியத்தின்மீது கூர்அம்பெனப்பாய்ந்து வெற்றிபெறுகிறது. நலம் அனைத்தையும் அடையவல்ல பரிபாகமே ஆத்ம சக்தி என்று சொல்லப்படுகிறது.*

## இயற்கை வாழ்க்கைக்கு முரண்பட்டதா ?

*பிரம்மசரிய வாழ்க்கை இயற்கை வாழ்க்கைக்கு முரண்பட்டதென்று பலர் கருதுகின்றனர். தக்க வயது வரும்போது மணம் புரிந்துகொண்டு, இல்வாழ்க்கை நடாத்திப் பிள்ளைகளைப் பெற்றபின்பு சிற்றின்ப இச்சைகளை நீக்கலாமென்கின்றனர் ஒரு சாரார். அவ்விச்சை இருக்குமளவு அதைப் பூர்த்தி பண்ணுதலே முறை என்கின்றனர் இன்னொரு சாரார். இச்சையை அடக்குவதும் மாற்றுவதும் இயற்கைக்கு ஒவ்வாதது என்பர் அன்னவர். பின்பு இயற்கைக்கு உடன்பாடானது எது என்பதுதான் கேள்வி. அவரவர் அடைந்திருக்கும் பண்பையும் பயிற்சியையுமே ஒவ்*

வொருவரும் இயற்கை வாழ்க்கை யென்பர். மிருகங்களுக்கும், மிருகங்களின் இயல்பையுடைய மக்களுக்கும் புலனடக்கத்தைப்பற்றிய பிரச்னை கிடையாது. அப்போதைக்கப்போது எழும் உணர்ச்சியின்படி ஒழுக வேண்டுமென்பது அவர்கள் கருத்து. ஏகபத்தினி அல்லது பதிவிரதம் எதற்காகஎன்றும் அவகர்ள் கேட்கின்றனர். மனம்போனபடி வாழ்தலே அவர்கள் அறியும் இயற்கை வாழ்க்கையாகும். தத்தம் மனதுக்கு உகந்ததை நன்னெறியென்று சாதிப்பாரை அறிவாளர் எனலாகாது. வடிவத்தில்மட்டும் மக்களாகிய அவர்கள் இயல்பில் விலங்குகளுக்கு ஒப்பாவர்.

இயற்கையில் எல்லாப் படித்தரங்களுக்கும் இடமுண்டு. விலங்குத்தன்மை, மனிதத்தன்மை, தெய்வத்தன்மை ஆகிய அனைத்தும் இயற்கையில் அடங்கிவிடுகின்றன. இவைகளுள் விரும்பியதை அடையும் சுதந்திரம் மனிதனுக்கு உண்டு. தெய்வத்தன்மையில் தனக்கு இன்னும் அவா எழவில்லையென்று மனிதன் உண்மையைச் சொல்லட்டும். அத்தகையவன் காலக்கிரமத்தில் முன்னேறுவான். தெய்வசம்பத்து நிறைந்த பிரம்மசரிய வாழ்க்கை இயற்கைக்கு விரோதமானது என்று கூறி காமவாழ்க்கையில் இறங்குபவனுக்கு எந்நாளும் விமோசனமில்லை. அப்புல்லறிவாளன் எப்போதும் மிருகத்தன்மையிலேயே உழன்றுகிடப்பான்.

இல்வாழ்க்கைக்கு பிரம்மசரியம் முற்றிலும்வேண்டப்படுகிறது. விரும்பியவாறு சிற்றின்பத்தில் மூழ்கிக்கிடப்பதற்கென்று ஏற்பட்டதன்று கிருகஸ்தஆச்ரமம்.

அது புனிதம் மிகவாய்க்கப்பெற்றது. சத்புத்திரர்களை ஈன்றெடுத்து உலகுக்கு அளிப்பதே இல்லறத்தின் முடிவான நோக்கமாகும். விலங்குகளைப்போன்று காம நுகர்ச்சியில் திளைத்துக்கிடப்பவர்க்கு மேலோர் ஒரு நாளும் பிள்ளைகளாகப்பிறவார். புலன்கள் அடங்கப் பெற்றுத் தவம்புரிந்து இறைவனை இறைஞ்சி நிற்பவர்க்கே சத்புத்திரர் உத்பவிப்பர். பிள்ளைகளைப் பெறுதல் ஒரு பெரும் யாகம் என்று சொல்லப்படுகிறது. யாகம் பரிசுத்தமாயிருப்பதற்கு ஏற்ப அதன் பலனாகிய பிள்ளைப்பேறும் பரிசுத்தமானதாகும். ஆச்ரமம் என்பதன் பொருள் தூயநிலை. பிரம்மசரியம் முதல் சன்னியாசம் வரையில் உள்ள நான்கு ஆச்ரமங்களும் தூய்மையில் நிலைத்திருப்பவைகள். விலங்குகளைப்போன்று சரீர சுகத்தில் கட்டுண்டு கிடப்பவர் எந்த ஆச்ரமத்துக்கும் உரியவர் ஆகார். கிருகஸ்த ஆச்ரமம் பவித்திரமடையுமாயின் ஏனைய மூன்று ஆச்ரமங்களும் மேன்மையுறுவது நிச்சயம். வாழ்க்கைக்கு அஸ்திவாரம் போன்றிருப்பது பிரம்மசரியம் என்று இயம்பினோம். அந்த அஸ்திவாரத்தை அமைப்பவர் இல்வாழ்பவர்களேயாம். "ஹே மானுட, நீ விவாகம் செய்துகொண்டபடியால் விரும்பியவாறு சிற்றின்பத்தில் மூழ்கலாமென்று கருதாதே" என்று ஸ்ரீராமகிருஷ்ணர் எச்சரிக்கை செய்துள்ளார். இரண்டொரு சத்புத்திரரைப் பெற்றபிறகு கணவனும் மனைவியும் சகோதர சகோதரிகளைப் போன்று வாழவேண்டுமென்று அவர் அடிக்கடி இல்வாழ்பவர்க்கு உபதேசித்து வந்தார்.

சிலர் பிறவியிலேயே நித்திய சித்தர்களாயிருக்கின்றனர். அவர்கள் உடற்கூற்றை அடியோடு வென்றவர்கள். சுகர், சங்கரர், ஏசுகிறிஸ்து முதலாயினோர் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். பிரம்மசரிய வாழ்க்கையே அத்தகையவர்க்கு இயற்கையான வாழ்வாகும். அதினின்று வழுவுபவர் பரலோகப் பிராப்தியினின்று வீழ்ந்தவர் ஆவர். மனிதனுக்கு இயற்கையாயும் சாசுவதமாயுமுள்ள அந்நிலையை மீண்டும் எய்தினலொழிய அவன் பிறவிப் பெருங்கடலை நீந்தான். தனக்குச்சொந்தமாயுள்ள தூய நிலையைப் பாதுகாத்து வைப்பவனது ஆத்ம சக்தி ஓங்குகிறது. மலரில் மணம் நிறைந்திருப்பது போன்று அவனது சிந்தையும், சொல்லும், செயலும் அத்தூய்மையை விளக்கும்.

**சில அனுஷ்டான விதிகள்**

சரீரத்தில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்று ஆறு ஆதாரங்களிருக்கின்றன. அவைகளுள் உடலின் அடிப் பாகத்தில் குறியின்கண் இருப்பதற்கு மூலாதாரம் என்று பெயர். பின்பு அதற்குச் சற்று மேல் இருப்பது சுவாதிஷ்டானம்; நாபியில் இருப்பது மணிபூரகம்; ஹிருதய கமலத்தில் இருப்பது அனுகதம்; கண்டத்தில் இருப்பது விசுத்தி; நெற்றியில் இருப்பது ஆஞ்ஞை. மூலாதாரம் முதலிய முதல் மூன்று ஆதாரங்களில் மனது உழலும்போது சரீர உணர்ச்சி தடித்திருக்கும். காம விருத்திகளும் சரீர சுகங்களைப்பற்றிய எண்ணங்களும் அப்போது அதிகரித்துக்கொண்டே போகும்.

அந்நிலைமையிலிருப்பவனுக்கு பிரம்மசரிய விரதம் அனுஷ்டிப்பது சாத்தியமன்று. உயர்ந்த எண்ணங்கள், பெற்றதாயினிடத்திருப்பது போன்ற தூய அன்பு, ஈசுவர சிந்தனை முதலிய தெய்வத்தன்மைகளில் மனது லயிக்கும்போது, அது அநாகதம்முதல் ஆஞ்ஞைவரையில் உள்ள ஆதாரங்களில் வீற்றிருக்கும். அந்நிலைமையில் சரீர ஞாபகம் மங்கிவிடுகிறது; ஆத்மபோதம் மேவிடுகிறது; பிரம்மசரியம் என்னும் தூயநிலை இயல்பாகவே வாய்க்கின்றது. மனதை யாண்டும் ஹிருதய கமலத்திலும் அதற்கு மேலுள்ள ஆதாரங்களிலும் நாட்டவல்லவன் சாதகர்களுள் சிரேஷ்டமானவனாகின்றான். சொப்பனத்திலும் அவனுக்கு உலக ஆசைகள் உண்டாவது கிடையாது. விந்துதாரை அவனுக்கு எப்போதும் மேல்நோக்கிச் செல்லும். ஆதலால் அவன் ஊர்த்துவரேதஸ் என்று அழைக்கப்படுகிறான்.

न तपस्तप इत्याहुर्ब्रह्मचर्यस्तपोत्तमः
ऊर्द्ध्वरेता भवेद्यस्तु स देवो न तु मानुषः

மற்ற தவங்களெல்லாம் தவங்களாகா. பிரம்மசரிய விரதம் ஒன்றே தபசு என்று சொல்லத்தகுந்தது. ஊர்த்துவரேதஸ் ஆக இருப்பவன் மனிதனல்லன். அவனே தேவனாகிறான்.

மனிதன் காம எழுச்சிக்கு வசப்படும்போதெல்லாம் அதன் ஆதிக்கம் வலுக்கிறது; அதனால் அவனுடைய ஆற்றலும் சுதந்திரமும் குறைகின்றன. மனிதன் காமத்தை வெல்லுகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்

அதன் ஆவேசம் குறைகிறது; மனிதனது ஆத்ம சக்தி அதிகரிக்கிறது; ஆதலால் காமம் தலையெடுக்கும்போதே அதைக் களைந்தெறியவேண்டும். காமம் எப்போதும் உடலின் கட்டழகில் களிப்புறச் செய்கிறது. அது போழ்து உடலின் அழியும் தன்மையையும் அருவருக்கத் தக்க இயல்புகளையும் பற்றிச் சிந்திக்கவேண்டும். உடலின் ஆபாசங்களை உள்ளபடி உணர்பவன் ஒருபோதும் அதன்மீது வாஞ்சை வைக்கான். தத்துவ விசாரணை பண்ணுதல், சதாசத்கர்மத்தில் ஈடுபடுதல், கசிந்துருகிப் பிரார்த்தனை செய்தல் முதலிய சாதனங்களால் மனதை எப்போதும் உன்னத நிலைமையில் வைத்திருக்க இயலும்.

நல்லார் இணக்கம் பிரம்மசரிய வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும். தருணம் வாய்க்கும்போதெல்லாம் மனிதன் ஏகாந்தத்துக்குச் சென்று சிந்தையை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஆண் பெண் ஆகிய இருபாலரும் கூடி வாழ்தல் பிரம்மசரிய வாழ்க்கைக்குப் பிரதிகூலமாகும். காம நுகர்ச்சியைப் பற்றிய மனப்பான்மையை இருபாலரும் அடியோடு மாற்றுதல் அவசியம். பெண்களையெல்லாம் பராசக்தியின் வடிவாகக் காண்பது ஆடவர்க்கு அவசியம். அவ்வாறே மகளிர் ஆண்பாலரை சிவம் அல்லது நாராயணவடிவாகக் கருதவேண்டும். சரீரமுதிர்ச்சி, மனமுதிர்ச்சி முதலியவைகளுக்கிடையில் ஆண் பெண் என்ற பேதமறியாது என்றைக்கும் பச்சைக் குழந்தைகளைப் போன்றிருப்பவர் மகாயோகிகளாவர்.

நாம் படைத்திருக்கும் சரீரத்தின் மகிமையே பல ருக்குத் தெரிகிறதில்லை. சிற்றின்ப உணர்ச்சி வரும் போதுதான் அதன்கண் உள்ள அசுசியை முன்னணிக் குக் கொண்டுவரவேண்டும். மற்று, எத்தகைய நன்மை யின் பொருட்டு இறைவன் அதை நம்பால் ஒப்படைத் திருக்கிறார் என்பதை சந்ததமும் அறிவது நம் கடமை யாகும். "Know ye not that ye are the temple of God, and that the Spirit of God dwelleth in you? If any man defile the temple of God, him shall God destroy; for the temple of God is holy which temple ye are."— "நீங்கள் இறைவனுடைய கோயில் என்ப தையும், இறைவனுடைய அருள் உங்களிடத்துக் குடி கொண்டுள்ளது என்பதையும் நீங்கள் அறியவில்லையா? யாராவது கோயிலுக்குத் தீங்கிழைப்பானாகில் அவனைக் கடவுள் அழித்துவிடுவார்; ஏனென்றால் கோயில் பரி சுத்தமானது, நீங்களே அக்கோயில் ஆவீர்கள்." இவ் வாறு கிறிஸ்துவப் பெரியார் ஒருவர் பகர்ந்துள்ளார். நம் நாட்டுப் பெரியார்களும்

> **உள்ளம் பெருங்கோயி லூ னுடம் பாலயம்**
> **வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசற்**
> **றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
> **கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே.**

என்று உரைத்திருக்கின்றனர். இமைப்பொழுதும் நம் நெஞ்சத்தினின்று நீங்காது இறைவன் அதனுள் குடி கொண்டிருக்கிறார். அவரது ஆலயத்தைத் துர்ப்பிர யோகப்படுத்துவது அவரைப் புறக்கணிப்பதாகும்.

அதை அவரது இருப்பிடமாகக் கருதுபவர் பிரம்மசரிய வாழ்க்கையின் மூலம் அதை யாண்டும் தூயதாக வைத்திருப்பர். அப்பொழுது ஆத்ம சக்தியானது தானுகவே அவர்களிடம் மிளிரும்.

காமம் எப்போதும் ரஜோ குணத்தினின்று உத்பவிக்கிறது. ஆதலால் ரஜோ குணத்துக்கு ஏதுவாகிய எண்ணங்களையும் உணவுகளையும் விலக்குதல் அவசியம். அதிகக் கசப்பு, காரம், புளிப்பு, உவர்ப்பு, உஷ்ணம் முதலியன நிறைந்த ஆகாரத்தையும் பதைபதைப்பை உண்டுபண்ணும் உணவையும் புசிக்கலாகாது. ஜீரணக் கருவியும் குடலும் எப்போதும் சுத்தமாயிருக்கும்படி எச்சரிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். மிருதுவான படுக்கையும் சொகுசான ஆடையும் பிரம்மசரிய வாழ்க்கைக்குத் தகா. சிற்சில வேளைகளில் கொஞ்சம் பட்டினி இருப்பது நன்று. இரவில் உண்டியைச் சுருக்கி, அதுவும் பெரிதும் ஜீரணமான பின்பே படுக்கைக்குப் போகவேண்டும். நேரத்தில் நித்திரைபோய் அதிகாலையில் எழுந்திருந்து குளிர்ந்தஜலத்தில் நீராடுவது நன்மை பயக்கும். உறங்குதற்கு முன் இறைவனைப்பற்றிய சிந்தனை; விழித்தெழுந்ததும் அவனுடைய சிந்தனை; இப்பழக்கம் மனதைத் தூயதாக்குதற்கு இன்றியமையாதது. இரண்டு அல்லது மூன்று தடவை வியர்வை வரும்வரை தினந்தோறும் தேகப்பயிற்சி செய்வது முற்றிலும் அவசியம். பிரம்மசாரி யாண்டும் கோவணதாரியாயிருத்தல் வேண்டும். கட்டுக்கடங்காது மனது காம எண்ணங்களில் பிரவேசிக்கும்போது பகவானுடைய

திருநாமத்தை உரக்க உச்சரித்துப் பிரார்த்தனையும் ஸ்தோத்திரமும் செய்யவேண்டும். குரு, மாதா, பிதா நீங்கலாக வேறு யாருடைய சரீரத்தையும் பிரம்மசாரி தீண்டலாகாது. தேகத்தை மறந்திருக்குமளவு ஒருவன் பிரம்மசரிய வாழ்க்கையில் வெற்றி பெறுகிறான். பகவத் சிந்தனை வலுக்குமளவு தேகசிந்தனை அற்றுப் போகிறது.

### பிறவிப் பெரும்பயன்

பிரம்மசரிய வாழ்க்கையால் வரும் பயனை யோக சூத்திரம் தெற்றெனத் தெளிவுறுத்துகிறது.

**ब्रह्मचर्य प्रतिष्ठायां वीर्य लाभः ।**

பிரம்மசர்ய பிரதிஷ்டாயாம் வீர்ய லாப :

பிரம்மசரியத்தில் நிலைநிற்பவர்க்கு வீரிய லாபமுண்டாகிறது என்பது அதன் பொருள். காம உணர்ச்சிகளை அடியோடு வென்றுவிடுவது பிரம்மசரியம். மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களும் சிற்றின்ப ஆசையால் கலைக்கப்படாதிருத்தல் வேண்டும். அங்ஙனம் காப்பதன்மூலம் சரீரமே புதியதாக மாறி அமைகிறது. அப்போது ஓஜஸ் என்னும் ஆத்ம சக்தி உண்டாகிறது. தேகத்திலுள்ள நாடிகளெல்லாம் வலிவு பெறுவதோடு மேதை என்னும் புதியதொரு நாடியும் உண்டாகிறது. அதுபோழ்து மலங்களெல்லாம் நீங்கப்பெற்ற சித்தம் ஸ்படிகம்போன்று ஆய்விடுகிறது. சூரியனைக் கண்ணாடியானது உள்ளபடி பிரதிபிம்பிப்பது போன்று ஸ்படிக மயமான உள்ளத்தின்கண்

ஆத்ம தேஜஸ் திகழ்கின்றது. அதை ஞானக்கண் என்றாலும் ஒவ்வும். தெளிந்த சித்தத்தில் ஆத்ம ஞானம் உள்ளபடி ஒளிர்கின்றது. சிற்றறிஞன மானுடன் அப்போது வாலறிவன் அல்லது சர்வக்ஞன் ஆய்விடுகிறான். ஏட்டுக்கல்வியால் வருவது ஞானமல்ல. பிரம்மசாரியின் ஸ்படிகம் போன்ற மனதில் மிளிரும் ஆத்மஜோதியே மெய் ஞானமாகும்.

பகவத் சம்பத்துக்கள் ஆறில் ஒன்று **வீரியம்.** அதை உடைத்திருப்பவன்மாட்டுப் பொலிவது தெய்வப்பெற்றியேயாம். பிரம்மசாரிக்கே வீரியம் உண்டாகிறது. அவன் எதற்கும் அஞ்சுவது கிடையாது. உலகத்தையே துச்சமென எண்ணி அவன் அதைப்பொருள் படுத்துகிறதில்லை. ஆனால் உலகம் அவனிடமிருந்து அடையும் நன்மைக்கோர் அளவில்லை. இதுபரியந்தம் இத்தொல்லுலகம் பெற்றிருக்கும் நன்மைகளனைத்தும் பிரம்மசரிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர்களிடமிருந்தே வந்தவைகளாம். தேகசுகத்தில் ஈடுபடுபவர்க்குச் சுயநலப்பற்றும் தொடர்ந்தே வந்துவிடும். சுயநலம் கோருபவருக்குப் பயமுண்டு. பொருள் போய்விடும், போகம் போய்விடும் என்று அவர்கள் அஞ்சுகின்றனர். பிரம்மசரியம் என்னும் பொக்கிஷத்தைப் பிறர் யாரும் கைப்பற்ற முடியாது. அதையுடைத்திருப்பவன் வீரன்போன்று வாழ்கிறான், வீரன்போன்று உலகுக்குச் சேவை செய்கிறான், வீரன்போன்று மரணத்தை அங்கீகரிக்கிறான். அனாயாச மரணம் மனிதனால் வேண்டப்படும் பேறுகளில் ஒன்றாகும். ஒருவன்

எவ்வளவுக்கெவ்வளவு பிரம்மசரிய விரதம் அனுஷ்டிக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு வேதனையின்றித் தேகத்தை விடுவது உறுதி. பூரண பிரம்மசாரிக்கு மரணம் ஒரு ஆபரணம் போன்றது. அவன் வாழ்வதிலும் மகிமையுண்டு, மாய்வதிலும் மகிமையுண்டு. வீரியத்துக்கும் சிறுமைக்கும் வெகுதூரம். பிரம்மசரியம் வாழ்க்கைக்கு முகாமையாயிருப்பது போன்று அதுவே வாழ்க்கையின் முடிவுமாகின்றது. பிரம்மசாரிகளுக்கு மட்டுமே இம்மண்ணுலகம், விண்ணுலகாகக் காட்சி கொடுக்கிறது. ஆதலால் தங்களுக்கும் உலகுக்கும் நன்மைசெய்யும் ஆத்ம சக்தியைப் பெற விரும்புபவர் பிரம்மசாரிகளாவார்களாக.

---

# 8. மரணத்தின் மாண்பு

## சக்தி பூஜையில் தலையாயது

மனிதன் எதைப் போற்றுகின்றானோ அதன் மயமாய்த் தானே ஆய்விடுகின்றான். சக்தியை வணங்குபவன் சக்தி பெறுகின்றான். ஒருவன் சக்தியற்றிருப்பானாகில் அவன் அதை வகையுடன் வேண்டவில்லையென்பது வெளிப்படுகிறது. உலகில் யாரிடத்தாவது பேராற்றல் பொலியுமாயின் அது சக்தி வழிபாட்டின் பயனேயாம். வெறும் சடங்குகள் ஒருநாளும் வழிபாடாகா. மன எழுச்சியும் அதற்கேற்ற வாழ்க்கை முறையுமே உண்மையில் வழிபாடாகின்றன. கண்கூடாக வலிவைப் பெறுபவனே சக்தியைப் போற்றுபவன் ஆகின்றான். தெய்வத்தன்மைகள் அனைத்தும் சக்தியில் அடங்கிவிடுகின்றன. சக்தி வேறு, சிவம்வேறு அன்று. சக்தியே சிவமாகின்றது; சிவமே சக்தியாகின்றது.

சக்தியின் இயல்புகளை உள்ளபடி அறிந்துகொள்ள இயலாதவன் சக்தி வழிபாட்டுக்கு உரியவன் ஆகான். இரவும் பகலும் காலம் என்பதில் அடங்கியிருப்பது போன்று, பிழைப்பும் சாவும் சக்தியில் அடங்கியிருக்கின்றன. பகலை வேண்டுபவர் இரவையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒன்றையொன்று சார்ந்துள்ள இராப்பகலில் இரவை நீக்கிவிட்டுப் பகலை மட்டும் பெற முடியாது. அவ்வாறே சக்தியின் இரு கூறுகளாகிய

ஜீவியமும் மரணமும் இணைபிரியாதிருக்கின்றன. பிரிக்க முடியாத அவ்விரு பகுதிகளை மனிதன் பிரிக்க முயலுகிறான். மரணத்தை அவன் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. அதை மறந்திருப்பதே நன்மையுறுதற்கு உற்ற உபாயம் என்பது அவன் கருத்து. ஆனால் உண்மையோடு ஒவ்வாத அவனது ஆசை ஏமாற்றமாக முடிகிறது. மரணத்தை மறப்பவரும் மறைப்பவரும் அதினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. அன்னை பராசக்தி உயிர் மயமாய் இலங்குகின்றாள். அதே சமயத்தில் அவள் மரண வடிவெடுத்தும் மிளிர்கின்றாள். வாழ்வின் வாயிலாக அவளைப் போற்றுவது போன்று மாய்வின் வாயிலாகவும் வழுத்துபவனே சக்தியின் அருளுக்கு உரியவன் ஆகின்றான்.

மரணம் சக்தியின் திருவிளையாடல்களில் ஒன்று. மரணத்துக்கு மருண்டோடுபவன் சக்தி வழிபாட்டுக்கு உரியவன் ஆகான். அப்படி ஓடுவதால் அதன் வலையினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. உயிருக்குக் கொடுக்கும் மதிப்பை மரணத்துக்கும் கொடுக்க வேண்டும். உயிரை நேசிக்கின்றவாறு மரணத்தையும் நேசிக்கின்றவனே மாண்புறுகின்றான். உயிர்ப்பிச்சை கேட்பவர் கணக்கற்றவர். ஆனால் ஒரு லட்சியத்தின் பொருட்டு உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருப்பவர் மிகமிகச் சிலரேயாம். நன்கு வாழக் கற்றுக்கொண்டவன் வீரனைப்போன்று நன்கு சாகவும் கற்றுள்ளான் என்று சொல்ல முடியாது. ஆனால் சாகும் வகை தெரியும் வீரனுக்குப் பிழைக்கும் வகையும் அவசியம் தெரி

யும். ஒருவனது வீரம், உள் வலிவு முதலியன எத்தகையவை என்பதை அவன் ஏற்றுக்கொள்ளும் சாவு காட்டிவிடும். உயிர் வழங்கவேண்டிய விடத்தில் வீரன் அதை உவகையுடன் வழங்குகின்றான். மரணம் எத்தகைய வடிவெடுத்துவரினும் வீரன் அதை வழிபடு தெய்வமென வரவேற்கின்றான். செல்வமாக வடிவெடுத்திருப்பதும் சக்தி; அறிவாக வடிவெடுத்திருப்பதும் சக்தி; ஆற்றலாக வடிவெடுத்திருப்பதும் சக்தி; உயிராய் இலங்குவதும் சக்தி; இவைகளுக்கெல்லாம் மேலாக மரண வடிவெடுத்திருப்பதும் சக்தி. ஆக, மனமுவந்து மரணத்தைப் போற்றுதலே சக்தி பூஜையில் தலையாயது.

### தேசங்களின் சிறப்பு

எந்த நாட்டில் அச்சமின்றி மக்கள் மரணத்தை வரவேற்கின்றனரோ அந்த நாடு மேன்மையுறுவது உறுதி. உலக சரித்திரமே இதற்குச் சான்றாகும். மரணத்தை வரவேற்பது என்பதன் பொருள் தற்கொலை செய்யத் தலைப்படுவதல்ல. தற்கொலைக்கு முற்படுபவன் பயங்கொள்ளி. துன்பத்தினின்று மீளமுடியாமற் போய் அவன் உயிரை மாய்த்துக் கொள்கிறான். தற்கொலை செய்துகொள்ள முயன்று வேதனையில் தவிக்கின்ற ஒருவனைத் தப்புவித்தால் அவன் மறுபடியும் அத்தீய தொழிலில் பிரவேசியான். உயிரைப் பாழாக்குவதே தற்கொலையாகும். அதனால் அவனுக்காவது மற்றவர்க்காவது இம்மையிலும் மறுமையிலும் ஒருபயனும் இல்லை. ஓயாத்துயரமே தற்கொலையின் விளைவு.

பின்பு மரணத்தைப் போற்றுவதன் கருத்துயாது? அதைச் சிலசெயல்களால் விளக்கலாம். தங்கள் தேசத்தைக் கப்பல் படையெடுப்பினின்று காத்துக்கொள்ள ஜப்பானியர் ஒரு வெடிகுண்டு கண்டுபிடித்திருக்கின்றனர். அதற்கு நீந்தும் உயிருடைய வெடிகுண்டு (Living torpedo) என்று பெயர். ஒரு மனிதன் அதனுள் புகுந்துகொண்டு கடலில் எதிரியின் கப்பலை நோக்கி அதைச்செலுத்துவான். நீரினுள்செல்லும் அதை வெளியிலிருந்து யாரும் பார்க்கமுடியாது. கப்பலின் கீழ்ப்பாகத்தில் மோதியதும் அது உக்கிரமாக வெடித்து அதைச் சுக்கலாக்கிவிடும். வெடிகுண்டைச் செலுத்திய மனிதனும் மாண்டுபோவான். ஒரு மனிதனையும் ஒரு வெடிகுண்டையும் இழப்பதன் பலனாக எதிரிக்கு உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் பெருமிதமாக ஏற்படும். தேசமும் பிறர் ஆட்சிக்கு உட்படாது. இத்தகைய வெடிகுண்டைக் கண்டுபிடித்ததும், இதைப் பலவிதங்களில் பரீக்ஷைசெய்து பார்க்கப் பன்னிரண்டு பேர் தேவையென்று விளம்பரம் செய்யப்பட்டது. பரீக்ஷையின் பலனாக அப்பன்னிரண்டுபேரும் உயிர் துறப்பார்கள். நாட்டின் நன்மையின்பொருட்டு அதற்கு ஆயத்தமாயிருப்பவரே முன்வரலாம் என்பது அவ்விளம்பரத்தின் கருத்து. அரசாங்கம் வேண்டினது பன்னிரண்டுபேர் மட்டும். ஆனால் ஒரே நாளில் அறுநூறுபேர் உயிரைக்கொடுக்க முன்வந்தனர்! ஒரு லட்சியத்தின்பொருட்டு உயிரை வழங்குதலின்கருத்து இதுவே யாம். ஜப்பானிய

ஆடவர் மகளிர் ஆகிய அனைவரும் தங்கள் நாட்டுக்காக யாண்டும் உயிரைக்கொடுக்க ஆயத்தமாயிருக்கின்றனர். அதன் பலனாக அவர்கள் வல்லரசு நாடுகளில் ஒன்றாக இலங்கியிருந்தனர். ஐம்பது ஆண்டுகளுக்குள் அவர்கள் அடைந்திருந்த முன்னேற்றம் உலகத்தவரை வியக்கச் செய்துவிட்டது. உலகம் கண்டறிந்த இரண்டாவது மகாயுத்தத்தில் ஜப்பானியர் தோல்வியுற்றதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். சீனரை அடக்கியாள வேண்டுமென்ற முறைதவறிய அவாக்கொண்டது ஒரு காரணம். அணுகுண்டு வந்து அவர்களைப் பாழ் படுத்தியது மற்றொரு காரணம். தோல்வியுற்றபிறகும் தலையெடுக்க அவர்கள் முயன்றுவருகின்றனர். ஜப்பானியர்களுக்கு முன்பே முன்னேற்றமடைந்துவிட்ட அமெரிக்கர், ஆங்கிலேயர் முதலாயினோர் வரலாறுகளும் இத்தகையவைகளேயாம். மிகச்சிறு கூட்டத்தார் எனினும் ஆதிக்கம் மிகப்பெற்றுச் சீரும் சிறப்புடனும் அந்நாட்டவர் வாழ்கின்றனர். கணக்கற்றபேர் தேச நன்மையின்பொருட்டு உயிர்வழங்கியதும் இன்னும் வழங்க ஆயத்தமாயிருப்பதுமே அதற்குக் காரண மாகும்.

எப்படியாவது உயிர் வாழ்ந்திருந்தால் போதும் என்று கருதுபவர்க்கு மேன்மை கிடைப்பதில்லை. வாழ்ந் தால் சிறப்புடன் வாழவேண்டும். அல்லாவிடில் அதற்காக முயன்று மாளவேண்டும் என்று துணி பவர்க்கே பெருவாழ்வு கிட்டும். தக்க விலை கொடா விட்டால் உலகில் எதுவும் அகப்படாது. விலைகளுள்

சிறந்தது உயிர்; அதை விலையாகக் கொடுக்கக்கற்றுக் கொள்பவர்க்கு எதையும் பெறமுடியும். ஒரு லட்சியத்தின் பொருட்டு மரணத்தை ஏற்க ஆயத்தமாய் இருப்பவர்க்கே உயிரை விலையாகக் கொடுக்க இயலும். பொருளைத் தேடவும் அதை நல்வழியில் செலவிடவும் கற்றுக்கொள்பவனே மனிதன். பெரும்பாலர் பொருளைத் தேடுவதில் கருத்துடையராயிருக்கின்றனர். ஆனால் அதைப் பயன்படுத்தும் வகை தெரியாமையால் அது வீணாய்ப்போகின்றது. உயிர் என்னும் பொருள் அதைவிடப் பன்மடங்கு மேலானது. கோடானுகோடி பேர்க்கு உயிர்வாழ்தல் என்னும் பேறு கிடைத்திருக்கிறது. அதை ஒரு மேலாம் லட்சியத்தின்பொருட்டுப் பயன்படுத்த அவர்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஒரு லட்சியத்துக்காக உயிரைக்கொடுப்பவரே, அந்த லட்சியத்தை அடையப்பெறுவர். அணு அணுவாய் அதன் பொருட்டுச் சாகத்துணிந்துகொள்ள வேண்டும். மரணத்தின் மாண்பை அறிந்திருப்பதற்கு அதுவே அறிகுறியாகும். மரணத்தின் வாயிலாக மரணமின்மை அடையப்படுகின்றது. இவ்வுண்மைக்கு ஒப்ப ஒழுகினமையால் தேசங்கள் பலமேன்மையுற்றுத் திகழ்வனவாயின.

**மரண ஸ்நானம்**

உண்மையை அறிதற்கு, அறிந்தபின் அதற்கு ஒப்ப வாழ்தற்கு இயற்கைத்தாய் ஓயாது உதவிபுரிந்து கொண்டிருக்கிறாள். இயற்கை என்னும் நூலைப் படிக்கத் தெரிந்துகொள்பவனுக்கே ஏனைய நூல்கள் பயன்

படுகின்றன. அங்ஙனமன்றி வெறும் ஏட்டுக்கல்வி வீண் விவாதத்துக்கும் மனக்குழப்பத்துக்கும் ஏதுவாகும். இயற்கை புகட்டும் பாடங்களில் ஒன்று மரணத்தின் மாண்பைப் பற்றியது. மரணமானது ஸ்நானத்துக்கு ஒப்பானது. நீராடுவதால் உடலும் உள்ளமும் புதுப்பிக்கப்படுகின்றன; தேகம் தூயதாகின்றது; மனம் உற்சாகம் பெறுகின்றது. இதுவே நீராடுவதன் பலன். இந்த மேன்மையை மரணத்தின் வாயிலாக அன்னை பராசக்தி அண்டங்களிலெங்கும் வழங்கி வருகின்றாள். எத்திசையில் திரும்பிப் பார்க்கினும் மரணத்தின் விளையாட்டைக் காணலாம். அழகிய மலர் ஒன்று தோன்றுகிறது; பின்பு அது வாடி வதங்கி உதிர்கின்றது. அதன் மரணமே வித்து உண்டாதற்குக் காரணமாயிற்று. புத்தம் புதிய வித்து மலரின் மரணத்தால் வருவதாயிற்று. பின்பு விதை பூமியில் நசிக்கின்றது. அதன் நாசத்தால் புதிய செடி ஒன்று தோன்றுகிறது. இதே கூற்று ஊர்வன நடப்பன பறப்பனவாகிய உயிர்களனைத்துக்கும் பொருந்துகின்றது. இயற்கை ஓயாது தன்னைப் புதுப்பித்துக்கொள்கிறது. இத்தொல்லுலகம் என்றைக்கும் புத்தம் புதியதாகவே யிருக்கிறது. மரணமே அதற்கு மூலகாரணம். மரணம் என்னும் வினை நடைபெறாவிடின் உலகம் வசிக்கத் தகுதியற்றதாய்விடும்.

வேறு கதியின்றி மனிதனும் இயற்கையின் இத்திட்டத்துக்கு உட்பட்டிருக்கின்றான். பழைய உயிர்கள் மடிவதால் புதிய உயிர்கள் தோன்றுகின்றன. இன்

றைக்குப் புதியதாயிருக்கும் உடல் நாளைக்குப் பழுது பட்டு நசிக்கின்றது. நசித்த உடல் வேறு புதிய தேக மாக மாறியமைகின்றது. சமுதாயங்கள் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றுகின்றன. புதிய புதிய வாழ்க்கைத் திட்டங்களும் நாகரிகங்களும் அவைகளால் நிறுவப்படு கின்றன. அரசாங்கங்கள் மாறி மாறி அமைகின்றன. தேச சரித்திரம் என்று அழைக்கப்படும் அவைகளின் செயல்களை ஆராய்ந்து பார்த்து மனிதன் ஆச்சரியப்படு கிருன். அறிவுத் துறையைப் பெருக்குதற்கான மனி தர்கள் அப்போதைக்கப்போது தோன்றுகின்றனர். தங்கு தடையின்றி நிகழும் மரணம் தன் தொழிலைச் செய்யாதிருந்தால் இவையனைத்தும் தடைபட்டுவிடும். புதுமையொன்றும் தோன்ருவிடத்து உலகம் சுவை யற்றுப்போம்; வாழ்வும் வேண்டப்படாததாய்விடும். பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையின் திட்டம். இதற்குச் சாதனமாயிருப்பது மரணம்; அதன் வாயிலாக இயற்கைத்தாய் ஓயாது தன் மகிமை யைக் காத்துவருகின்ருள்.

### வித்தைகளின் முடிவு

மரணம் இயற்கையின் ஒரு கூறு என்ருல் பின்பு அதற்கு அஞ்சுவான் ஏன்? இதுதான் உலகில் நாம் காணும் ஆச்சரியங்களுள் பெரியது. உயிர்களனைத்தும் சாவினின்று விலகியோட முயலுகின்றன. ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் ஈருக ஜீவன்களெல்லாம் மர ணத்தை வெறுக்கின்றன. அவைகள் அல்லும் பகலும் அலைந்து திரிந்து அல்லற்படுவதெல்லாம் மரணத்தி

னின்று தப்பித்துக்கொள்ளுதற் 'பொருட்டேயாம். ஆனால் நதிகளெல்லாம் வேறு வகையின்றிச் சமுத்திரத்தில் போய் மறைவதுபோன்று உயிர்களெல்லாம் முடிவில் மரணத்தின் வசப்படுகின்றன.

ஒவ்வொரு வித்தையும் மனிதனுக்கு ஒவ்வொரு விதத்தில் வலிவைத் தருகின்றது; அச்சத்தை நீக்குகின்றது. கொடிய நோய் உற்றவிடத்தும் ஆயுர்வேதத்தில் வல்லவன் அதற்காக மருளுவதில்லை. தக்க சிகிச்சையைக் கையாண்டு அதை நீக்க முயலுகின்றான். பெரிதும் நோய் வாராது தடுக்க முடியும் என்கின்ற நம்பிக்கையும் அவனுக்குண்டு. சிலம்பம், குஸ்தி முதலிய வித்தைகளில் வல்லவனுக்குப் பலபேரை ஒரே வேளையில் எதிர்க்கும் ஆற்றல் உண்டாகிறது. பௌதிக ஞானங்களாகிய ரசாயனம், வானநூல் முதலியவைகள் அவ்வவைகளின் இயல்புகளுக்கேற்ப மனிதனுக்கு ஆற்றலைத் தருகின்றன. ஆனால், அவைகளெல்லாம் ஒன்று கூடினும் மரணத்தின் கூறு ஒன்றைமட்டும் விளக்கிக் காட்ட வல்லவைகளாகா. அது இவ்வித்தைகளுக்கெல்லாம் எட்டாத ஒரு மர்மமாயிருந்து மக்களுக்கு மயக்கமூட்டி வருகின்றது.

சாவு என்றால் என்ன, என்னும் கேள்வி நெடுநாளைக்கு முன்பு சான்றோர் உள்ளத்தில் எழுவதாயிற்று. தீவிரமாக அவர்கள் இதை ஆராய்ந்தனர். நானாவிதமான உபாயங்களைக் கையாண்டனர். உண்மையை அறியுமுன்பு முயற்சியை நிறுத்துவதில்லை என்று முடிவு கட்டினர். அந்தர்முகமாக அறிவைச்

செலுத்திப் படலம் படலமாக மானுட அமைப்பின் தத்துவங்களை ஓர்ந்துணர்ந்தனர். மரணம் என்னும் கார் இருளினுள் நெடுந்தூரம் தேடிச்சென்றனர். இறுதியில் வெற்றியும் கிடைத்தது. வாழ்வு, மாய்வு ஆகிய இணைபிரியாத இவ்விரு நிலைக்கும் அப்பால் மாருத நிலையொன்று உளதென்றும், அதை அடையுமுன்பு அல்லலுக்கு ஓய்வில்லை யென்றும், பேரானந்தப் பேரொளிப் பெருவாழ்வாகிய அதன்கண் பயணம் போகின்றவனுக்கு மரணத்தைப்பற்றிய அச்சமில்லை யென்றும் சான்ருேர் கண்டறிந்தனர். உறக்கமும் விழிப்பும் போன்று ஜனனமும் மரணமும் மாறி மாறி வருகின்றன. உறக்கத்தின் தன்மையை அறிபவன் இன்புடன் உறங்கச் செல்கின்ருன். அவ்வாறே மரணத்தின் தன்மையை அறிபவன் உவகையுடன் அதை வரவேற்கின்ருன். முடிவில் பிறப்பு இறப்பு அற்ற நிலையை எய்துகின்ருன். மரணத்தைப் போற்றுதலே அதற்கு உற்ற உபாயமாகின்றது. ஆதலால்தான் வித்தைகளிலெல்லாம் தலையாய வித்தைக்கு மரணவித்தை யென்று பெயர். இதைப் பொதுவாக மக்கள் வேதாந்தம் என்பர். இதன் முக்கிய கோட்பாடு மரணத்தை அறிவதாகும். நசிகேதன் என்னும் ரிஷிபுத்திரன் மரணத்தினிடம் சென்றே மரணமற்ற நிலையை அறிகின்ருன். அவ்வாறே உலக நன்மையின் பொருட்டு ஏசுநாதர் மரணத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிருர். உயிர்களை உய்விக்கும் பொருட்டுப் புத்தர் பெம்மான் தம் உயிரையே வழங்க முன் வருகின்ருர். ஆக, மரணத்தை

வகையுடன் தரிசிக்கக் கற்றுக்கொள்பவனே இருமையிலும் உலப்பிலா இன்பம் எய்துவான்.

**தேவதைகளின் தத்துவம்**

மெய்ப்பொருளைப் பெரியோர் பல்வேறு விதங்களில் விளக்கியுள்ளார். ஒவ்வொரு விளக்கமும் ஒவ்வொரு தேவதையாக வடிவெடுத்துள்ளது. அவைகளைத் தேவதைகள் எனினும் சரி; அல்லது உண்மையின் வெவ்வேறு வருணனைகள் எனினும் சரி. தத்துவத்தோடு முரண்படாமலும், அதை நன்கு விளக்கிக் காட்டுதற்பொருட்டும் புதிய வருணனைகளை ஆன்றோர் உருவகப்படுத்துவது இயல்பு. அத்தகைய தத்துவ விளக்கங்களே காலக்கிரமத்தில் தேவதைகளாகப் பாமரர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மற்று இந்திரன், வருணன், மித்திரன் முதலிய பழைய தேவதைகள் பின்னணிக்குப் போவதும், காளி, கணேசன், கார்த்திகேயன் முதலிய புதிய தேவதைகள் முன்னணிக்கு வருவதும் உலக வழக்கு. தேவதைகள் எத்தனைதான் தோன்றினும் மறையினும் அவைகளுக்கு அடிப்படையாயுள்ள தத்துவத்தைப் படைக்கவோ துடைக்கவோ யாராலும் இயலாது.

தத்துவத்தின் ஒரு கூறு மரணம். இதை மனிதனுக்கு ஞாபகமூட்டுதற் பொருட்டு தேவதைகளெல்லாம் மரண வடிவெடுத்திருப்பதாகச் சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. அனுக்கிரகத்தின் பொருட்டு அம்பாள் வழிபடப்படுகின்றாள். ஆனால் அவள் சாந்த சொரூபிணியாயிருப்பதைவிடப் பன்மடங்கு அதிக உக்கிர

சொரூபிணியாயிருக்கின்றாள். துர்க்கை, சாமுண்டி, ஜகதாத்திரி முதலாயினோர் பராசக்தியின் வடிவங்களாகின்றனர். மூல பிரகிருதியின் பல்வேறு அம்சங்களாவர் இவர்கள். இவர்களுடைய திருவிளையாடல்களெல்லாம் பெரும்பாலும் சம்ஹார மயமாயிருக்கின்றன. தேவி உபாசனை செய்துகொண்டு வந்த ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அம்பாளின் முடிவான தத்துவத்தை அறிந்துகொள்ள விரும்பினார். அப்போது அவருக்கு ஒரு தரிசனம் கிடைத்தது. திடீரென்று பெண் ஒருத்தி தோன்றினாள். அச்சௌந்தரிய நாயகி பல அழகிய குழந்தைகளைப் பெற்றெடுத்தாள். அவளுடைய படைப்போ வனப்பு மிக வாய்ந்ததாகவேயிருந்தது. பின்பு அவள் தான் ஈன்ற பிள்ளைகளைத் தானே எடுத்து விழுங்கிவிட்டாள். இதுதான் இயற்கையின், அல்லது பராசக்தியின் நடைமுறையென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் தெளிந்தார்.

திருமால் காக்கும் கடவுளாகக் கருதப்படுகிறார். ஆனால் அவருடைய முழு இயல்பை ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்கு விசுவரூப தரிசனமாகக் காட்டுகின்றார். ஞானக்கண்ணால் அதைக்காணலுற்ற பார்த்தன் பகர்ந்ததாவது :— “கொழுந்துவிட்டு எரியும் தீயே உன் வாய். உன்னுடைய சுவாலையால் உலகம் முழுதும் கொதிக்கிறது. உன்னுடைய உக்கிர ரூபத்தைக்கண்டு மூவுலகும் நடுநடுங்குகின்றன. வானவர் திரள் திரளாக உன்னிடத்து வந்து ஒடுங்குகின்றனர். ஊழித்தீ போன்ற உன்னுடைய கணக்கற்ற முகங்க

லைக்கண்டு நான் திசை தெரியாமல் மனங்கலங்குகின்றேன். பயங்கரமான பற்களையுடைய உன்னுடைய வாய்களினுள் இப்பூலோகப் பெருமக்களெல்லாம் தாறுமாருக வீழ்ந்து மடிகின்றனர். இன்னும் சிலர் கசங்கிய தலைகளுடன் பற்சந்துகளுக்கிடையில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். நாசமடைதற் பொருட்டு வண்டுகள் பெரு வேகத்துடன் தீயினுள் பாய்வது போன்று உலகத்தவர் உன் வாயினுள் வீழ்ந்து மடிகின்றனர். ஓ விஷ்ணுவே! எரிகின்ற வாயால் நீ உலகனைத்தையும் விழுங்கிக்கொண்டு பிரீதியுடன் உதடுகளை நக்குகின்றாய். பொறி பறக்கின்ற சம்ஹாரத் தீயாக நீ பிரபஞ்சமெங்கும் பரவியுள்ளாய்." ஆக, மகாவிஷ்ணுவிடத்தும் மாய்க்கும் தொழில் ஓயாது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிவம் என்பதன் பொருள் செம்மை வாய்ந்தது, அல்லது மங்களகரமானது என்பதாகும். அவன் ருத்திரனுயிருப்பதே அவனுடைய மங்களத்துக்கு மூல காரணம். ருத்திரன் என்பதன் பொருள் அழச்செய்பவன் என்பதாகும். வல்வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே என்ருர் அவனுடைய அன்பர்களில் ஒருவர். மருளை நீக்கவல்லது கண்ணீர். ஆனல் அருளை நாடித் தாமாகவே கசிந்துருகுபவர் மிகச்சிலரேயாவர். தீயில் உருக்குமளவு ஓர்உலோகம் தூயதாவதுபோன்று, மரணமென்னும் தீயிலிட்டு உயிர்கள் உருக்கப்படுகின்றன. மரணத்தின் வாயிலாக உயிர்கள் விரைவில் புனிதமடைகின்றன. அத்தகைய சம்ஹாரத் தொழிலை

நிகழ்த்துபவன் ருத்திரன். சுடுகாடே அவனுடைய இருப்பிடம். அவன் அணிந்திருப்பது அக்காட்டினுடைய சுடலைப்பொடி — அதாவது பிணங்களைச் சுட்டதனுல் உண்டாகிய சாம்பல். மரணத்தை அணிகலமாகக் கொண்டுள்ள ருத்திரன் உலகத்தை ஓயாது அழச்செய்கிருன். மரணம் என்னும் துன்பமே விவேகத்துக்கும் வைராக்கியத்துக்கும் (பற்றின்மைக்கும்) பிறப்பிடமாகின்றது. ருத்திரனை வழிபடுபவர் ருத்திரமயமாகின்றனர். மரணத்தைத் தாங்களும் அணியாக ஏற்றுக்கொள்கின்றனர். அதற்கு அறிகுறியாக நீறு (சாம்பல்) நெற்றியில் அணிகின்றனர். மந்திரமாவதும், மாண்பனைத்தையும் தருவதும், வேதத்தில் உள்ளதும் நீறு ஒன்றே என்பதன் பொருள் மரணத்தைப் போற்றத் தெரிந்துகொள்பவர்க்குப் பிறவிப் பெரும் பயன் யாவும் கிடைத்துவிடுகின்றன என்பதாகும். மரணத்தை இன்புடன் ஏற்றுக்கொண்டு உடலை வெந்து நீருனதாகக் கருதுபவரே சைவர். எமனுக்கும் எமனுயிருப்பவன், காலனுக்கும் காலனுயிருப்பவன் ருத்திரன். உலகனைத்தையும் அவன் அழச் செய்கின்றுன். ஆனல் அவனை ஏற்றுக் கொள்பவர்க்கே, அதாவது மரணத்தைக்கண்டு மருண்டோடாதவர்க்கே அழுகையில்லை.

**நம் கடமை**

உயிரை வழங்கத்தெரிந்து கொள்பவனுக்கே உயிர் வாழவும் இயலுகிறது. சாகத்தெரியாதவனுக்குப் பிழைக்கவும் தெரியாது; சாகத்துணிபவனே முன்னேற்றம் அடைபவன் என்பதற்கு உலக சரித்திரம்

சான்ருகும். சாவைப்பற்றிய உண்மையை அறியாத வன் அதற்கு அஞ்சுவான். மற்ற தேசத்தவர்களைவிட இந்தியன் மரணத்தைச் சிறிதும் பொருட்படுத்தாத வனாய் இருத்தல்வேண்டும். ஏனென்ருல் அவசியம் ஏற்படுமிடத்து வீரனைப்போன்று அதை ஏற்றுக்கொள் பவனே மனிதன், என்கின்ற பாடம் தொன்றுதொட்டு அவனுக்குப் பலவிதங்களில் புகட்டப்பட்டிருக்கிறது. சமயங்களின் முடிவான நோக்கமும் அதுவேயாகும். தன்னைச் சமயவாதியென்றும், வேதாந்தியென்றும், ஆயுதங்களால் வெட்டமுடியாத ஆத்மாவென்றும் பெருமைபாராட்டும் இந்தியனுடைய நிலைமை இது போழ்து எத்தகையதாயிருக்கிறது? மரணத்துக்கு அஞ்சி மருண்டு ஓடுதலில் இந்தியனுக்கு ஒப்பாவானை உலகில் வேறு எங்கும் காணமுடியாது! பிறர்க்கு அடிமைப்படுவது வீரனுக்குஅல்லது தீரனுக்கு ஒவ்வுமா என்னும் சிந்தனை இக்காலத்து இந்தியனுக் கில்லை. துஷ்டர்களால் தனக்கும் தன் உற்ருர் உறவி னர்க்கும் மானபங்கம் உண்டாவதை எண்ணி அவன் நாணுறுவதில்லை. அடிமைவாய்ப்பட்டாவது, அவ மானத்துக்குட்பட்டாவது, கெஞ்சிக் கூத்தாடிப் பிறர்க்குக் குற்றேவல் புரிந்தாவது, எத்தகைய இழி தொழில் புரிந்தாவது உயிர் வாழ்ந்திருந்தால் அவ னுக்குப்போதுமானது. இத்தகைய இழிநிலையைப் போற்றுவாரை உலகில் வேறு எந்தநாட்டிலும் காண முடியாது. அவமானத்துக்குட்பட்டு வாழ்தலைக்காட் டிலும், அதை எதிர்த்துப்போராடி மாய்தலே மேலா னது என்கின்றது தர்மசாஸ்திரம்.

புற்றீசல்போன்று பெருகிக்கொண்டே போகும் இந்தியர் சிறகொடிந்த ஈசல்போன்று மிதிபட்டுச்சாக லாகாது. மேலாம் வாழ்வு, முன்னேற்றம் முதலிய சீரிய லட்சியங்களுக்காக வீரர்போன்று உயிரைக் கொடுக்கவேண்டும். எத்தனைபேர் ஒரு லட்சியத்துக் காக வலியச்சென்று மடிகின்றனரோ அத்தனைமடங்கு அந்தலட்சியம் வலிவுபெறுகின்றது. சீலமும், ஒழுங்கும், அன்பும், உழைப்பும் நிறைந்த மேலாம்வாழ்வு நமது தேசியலட்சியமாகும். இந்தியர் அனைவரும்—ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் ஆகிய எல்லாரும்—இந்த லட்சியத்துக்காக உயிரைக்கொடுக்கத் துணிந்துவிட் டால் அதினின்றும் புதிய சக்தியொன்று பிறக்கும்; பலபேர் தர்மத்துக்காக மடிவதினின்று உலகின் மனப் பான்மை திட்பம்பெற்றுத் தெளிவுறுகின்றது. மரண மின்றி உலகைத்தூயதாக்கிவிட முடியுமென்றெண்ணு வது கோழைகளின் கனவு. உலக நன்மை, கடவுள் வழிபாடு, முக்தி ஆகிய மேன்மையனைத்தும் மர ணத்தை இன்புடன் ஏற்பவர்க்கே வந்தமைகின்றன. தர்மயுத்தம் என்பதன்பொருள் இதுவேயாம். குரு க்ஷேத்திரம்போன்ற போர்க்களமே தர்மக்ஷேத்திரமா கின்றது. ருத்திரபூமியே மனிதனுக்கு மாண்பளிக் கிறது. ஆக, பழம் பெருமையைப்பெறுதற்குப் பழம் வீரர்போன்று சாகக்கற்றுக்கொள்ளுதலே இந்தியர் இப்போது செய்யவேண்டிய கடமையாகும். மரணத் தைப்பற்றி நாள்தோறும் எண்ணுதல், அதை அணி கலமாகப்பூணுதல், பின்பு ஒரு லட்சியத்தின்பொருட்

டுத்தன்னை மாண்டுபோனவனாகவே வைத்துக்கொள்ளுதல் ஆகிய மரணவித்தையைக் கற்றுக்கொள்பவர்க்கு இம்மையுமுண்டு மறுமையுமுண்டு. இந்திய வீரர் இதைச் செய்துசாதிக்க லட்சக்கணக்கில் முன்வருவார்களாக. எதிர்கால இந்தியாவானது புத்துயிர் பெற்றுப் பொலிவதற்கு இதுவே உற்ற உபாயம்.

---

# 9. எதிர்கால இந்தியா

## இந்தியாவின் பழமை

பல்லாண்டு பல்லாண்டாக வளர்ந்து வந்துள்ளது ஆலமரம் ஒன்று. கிளைகள் விட்டு நாலாபக்கமும் அது பரவிக்கொண்டே போகிறது. அப்படிப் பரவுவதால் அதனிடத்துப் புதுமையும் ஒன்று ஓயாது பொலிந்து கொண்டே இருக்கிறது. இடம் விட்டு அசையாது நெடிது நிஷ்டையிலிருக்கும் முனிவர் ஒருவரது ஜடையும் தாடியும் தொங்கிக் கொண்டிருப்பது போன்று விழுதுகள் அம்மரத்தினின்று தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதனடியில் எத்தனைபேர் வேண்டுமென்ருலும் தங்கி நிழலைப் பெறலாம். அதன் கிளைகளில் புள்ளினங்கள் குடியிருக்க வேண்டியவளவு இட வசதி உண்டு. பருவங்களில் அவைகளுக்கு உண்ணக் கனிகளும் கிடைக்கும். இத்தனை விதமான பெருமைகள் அவ் ஆலமரத்துக்கு உண்டு. அதன் அருகில் செவ்வந்திச் செடி ஒன்று. அது செழித்து வளர்ந்து இருக்கிறது. கண்ணைக் கவரும் வண்ணமுடைய மலர்களை அது தோற்றுவித்திருக்கிறது. அழகும் கவர்ச்சியும் அதனிடத்து மிளிர்ந்துகொண்டிருக்கின்றன. செவ்வந்தி சொல்லுகிறது: "பூமியில் இடத்துக்குக்கேடாக நீ ஏன் இவ்வளவு அகன்று உயர்ந்து வீணுய் நின்று கொண்டிருக்கிருய்? என் வடிவத்தில் பொலியும் அழகைப்பார். என்னைக்கண்டு களிக்கும் கூட்டத்தின் தொகையைப்பார். காற்றடிக்கும்பொழுது நான்புரியும்

நர்த்தனத்தைக் கண்டுகளிக்க உனக்கு இயலுமா ?'' இப்படியெல்லாம் அச்செடி பிதற்றுவதாயிற்று.

அதற்குச் செவிமடுத்து விடை விடுக்கவேண்டிய அவசியம் ஆலமரத்துக்கில்லை. அது தன் காம்பீரியத்தில் அசைவற்றிருந்தது. ஆயினும் கொசுக்கடிப்பது போன்று திரும்பத் திரும்ப வினவிய செவ்வந்திச் செடிக்கு சிறிய விடை ஒன்று அவ்விருக்ஷம் விடுத்தது: "சில மாசங்கள் பொறுத்திரு. உனக்கும் எனக்கும் உள்ள தராதரம் தானே விளங்கும். பருவந்தோறும் தோன்றித் தோன்றி மறையும் உன் வமிச பரம்பரையை நான் நெடிது அறிவேன். உனக்குப்பின் வரவிருப்பவைகளையும் அறிவேன்.'' இந்த ஆலமரத்தின் பூர்வீகம் போன்றது இந்தியாவின் சரித்திரம். செவ்வந்திச் செடிக்கு ஒப்பாகும் இந்தியாவைச் சுற்றிலும் ஆங்காங்குத் தோன்றிய பிற நாடுகள் பல. சரித்திரத்துக்கும் எட்டாத அவ்வளவு புராதனமானது பரத கண்டத்தின் பண்பு. பழைய நாடுகள் பல இருக்குமிடம் தெரியாது மறைந்து பட்டுப்போயின. இந்தியாவோ பழையவைகளில் மிகப் பழையது எனினும் இன்றைக்கும் அதன் வியக்தியை இழந்துவிடாது அது நிலைத்திருக்கிறது. புதிய நாடுகளுக்குப் புதுமையை வழங்குகின்ற ஆற்றலும் அதற்கு உண்டு. இப்படி இந்நாடு நீடூழி வாழ்ந்திருந்தும் தனது ஜீவநாடி ஜீரணமடைந்து போகாது இருப்பதற்குக் காரணம் யாது? இனித் தோன்றும் நாடுகளுக்கிடையிலும் அது தக்கதோர் ஸ்தானத்தை சிறப்புற்று வகிக்கும் என்பதற்கு ஐய

மில்லை. பழையவைகளிற் பழையது எனினும் புதியவைகளுக்கெல்லாம் புதியதாக இருக்கக்கூடிய பேராற்றலும் இந்நாட்டுக்கு இருந்து வருகிறது. இதன் உள் வலிவை நம்மனோர் துருவி ஆராய்ந்து அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது.

### நமது நாகரிகம்

இப்பரந்த உலகின்கண்ணுள்ள பாங்குகள் அனைத்தும் திரண்டு அமைந்தது இது என்று நம் நாட்டைப் பற்றிப் பகரவேண்டும். உலகத்தில் எத்தனைவித மனித ஜாதிகள் உண்டோ அவை யாவையும் இந் நாட்டில் காணலாம். மொழிகள் எத்தனை உலகில் இருக்க முடியுமோ கிட்டத்தட்ட அத்தனையையும் இங்கே காணலாம். விதவிதமான பழக்க வழக்கங்களோ பகர்ந்து முடிவுறா. ஐதிகங்களுக்கும் கொள்கைகளுக்கும் ஈண்டு எல்லையில்லை. ஆலமரத்தை நாடி வரும் பறவைகளுக்கெல்லாம் ஆங்குத் தங்க இடமிருப்பது போன்று இந்நாட்டை நாடிவரும் மக்களுக்கெல்லாம் இங்கே இடமுண்டு. இத்தனைவித வேறுபாடுகளுக்கிடையில் தன் வியக்தியை இழந்துவிடாது இந் நாடு என்றென்றும் வாழ்ந்திருக்கிறது. சில காலங்களில் இது சிறப்புற்று வாழ்கின்றது, வேறு சில காலங்களில் சீர்கேடு அடைந்ததுபோன்று இது பொலிவற்றுப் போய்விடுகிறது. ஹேமந்தருதுவிலும் ஆலமரம் அழிந்துபட்டுப் போகாதிருப்பது போன்று, நம் தாய் நாடு பலவிதமான எழுச்சிகளுக்கிடையிலும், படையெடுப்புகளுக்கிடையிலும் தனது தனி இயல்பை

இழுந்துவிடாது காத்துவந்திருக்கிறது. தன்னிடத்து வந்த மக்களை யெல்லாம் சில நூற்றுண்டுகளுக்குள் சிறிது சிறிதாகத் திருத்தியமைத்து தன் சொந்தச் செல்வர்கள் என சுவீகாரம் செய்திருக்கிறது. இந்நாட்டின் உள்வலிவுக்கு இதுவும் தக்கதொரு காரணமாகும்.

இந்நாட்டின் உள் வலிவு செல்வத்தால் அமைந்ததன்று, ஆதிக்கத்தால் அமைந்ததன்று, பராக்கிரமத்தாலும் அமைந்ததன்று. பொறுமையே வடிவெடுத்திருந்து பாரமார்த்திப் பெருவாழ்வு வாழ்வதுதான் இந்நாட்டிற்குரிய நாகரிகமாகும். ஏனைய பெருமைகள் இதற்கு வந்து அமையுங்கால் அவைகளில் மூழ்கி இந்நாடு தலைபிறழ்ந்து போய்விடுவதில்லை. வறுமை வந்தமைந்தகாலை அதை எண்ணி வெறிபிடித்துப் போய் விடுவதும் இந்நாட்டுக்குக் கிடையாது. உடைமையையும் வறுமையையும் ஒரே பாங்கிற் கருதி உயர்ந்த எண்ணத்தில் ஊறி எளிய வாழ்வு வாழ்ந்திருப்பதே இந்நாட்டின் நாகரிகமாம்.

எந்த நாட்டின் மீதும் இந்தியாவானது படையெடுத்துப் போனது கிடையாது. பிறரை அடக்கியாள வேண்டும் என்ற சாம்ராஜ்யப்பித்து இந்நாட்டுக்குக் கிடையாது. அத்தகைய பேராசை எதிர்காலத்திலும் இதற்கு வந்து அமையாது. இருந்தபடி தான் இனிது வாழ்ந்திருப்பதும், பிறரை அங்ஙனம் வாழ்ந்திருக்கத் தூண்டுவதுமே இந்நாட்டின் செயலாயிற்று. இனியும் அச்செயலைத்தான் இது செய்து முடிக்கும். பிறரை அழிக்க முயலுகின்றவன் தானே அழிந்துபட்டுப்

போகின்முன்; உலகையெல்லாம் உய்விக்க முயலுகின்ற வன் தானே உய்வு பெறுகிமுன். இக்கோட்பாட்டுக்கு இந்தியா எடுத்துக்காட்டு ஆகிறது. சென்ற சில நூற்றுண்டுகளில் இந்தியா பிற ஆட்சிகளுக்கு அடிமைப் பட்டுக்கிடந்தது. வறுமை நோய் இங்குத் தாண்டவ மாடிற்று. பேரறிவுக்குப் பிறப்பகமாகிய இந்நாட்டிலே அக்ஞானம் என்னும் கார்மேகமும் கொஞ்சகாலம் சூழ்ந்திருந்தது. அவையாவும் நீங்கப்பெறும் அறி குறிகள் இப்பொழுது தென்படுகின்றன. இனி வருதற் குரிய நற்காலம் எத்தகையது ஆகும் என்பதை நாம் ஓரளவு யூகிக்கலாம். நற்காலம் வரும்பொழுது அது நமக்கு வேண்டியவாறு உருவெடுக்கும்படிச் செய்வதும் நமக்கு இயலும். எத்தகைய எதிர்காலத்தை நமக்கு நாம் அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதைச் சிறிது ஆராய்வோம்.

**நமது சமுதாயம்**

செயற்கையாக மக்களுக்கிடையில் பிளவை உண்டு பண்ணும் இயல்பு பல இடங்களில் இருந்து வருகிறது. பிறப்பை முன்னிட்டுப் பிளவு, ஜாதியை முன்னிட்டு வேற்றுமை, மொழியை முன்னிட்டு முரண்பாடு,பழக்க வழக்கங்களைக் காரணமாகக் கொண்டு பிரிவினை—இப் படியெல்லாம் வேற்றுமையை வளர்க்கும் பாங்கை ஆங்காங்குக் காணலாம். நம் நாட்டிலும் அத்தகைய சிற்றியல்பு வடிவெடுத்து வந்திருக்கிறது. எதிர்கால இந்தியாவில் அத்தகைய பிணக்குகளுக்கு இடம் இராது. உலகில் தோன்றிய மக்களுக்கு உலகில் வாழு

தற்கு உரிமையுண்டு. அதே விதத்தில் நம் நாட்டுக்குரிய மக்கள் எல்லார்க்கும் இங்கு இனிது வாழ இடமுண்டு.

தனியுரிமை தேடுவது சுயநலம்படைத்த மக்களின் இயல்பு ஆகும். பிறப்பை முகாமையாகக் கொண்டும், தொழிலை ஏதுவாகக் கொண்டும், கற்ற கல்வியைக் காரணமாக எடுத்துக்காட்டியும் சிலர் தங்களுக்காகவேவென்று அலாதியான பாத்தியதைகளை பாதுகாத்து வைத்துக்கொள்கின்றனர். அத்துடன் நின்றுவிடாது தாங்கள் அனுபவித்து வரும் சலுகைகளையும் தனி வசதிகளையும் பெறுதற்கு மற்றவர்கள் எந்த விதத்திலும் முயன்று முன்னேற்றம் அடையலாகாது என்று முட்டுக்கட்டை போட்டுவைப்பாரும் உளர். இச்சிறுமைகளெல்லாம் சுயநலப் பற்றினின்று உதிப்பவைகளாகும். அத்தகைய அலாதியான பாத்தியதைகளுக்கு எதிர்கால இந்தியா இடம் கொடுக்காது. சுவாசிக்கும் காற்றுக்கு எப்படி எல்லார்க்கும் உரிமையுண்டோ அங்ஙனம் தாங்கள் விரும்பியவாறெல்லாம் எல்லாரும் முன்னேற்றம் அடைதற்கு ஏற்ற வாய்ப்பைத் தருவதே மேன்மைதங்கிய சமுதாயத்தின் கோட்பாடு ஆகும். முன்னேற்றம் அடைதற்கும் மேலாம் நிலைக்கு வருவதற்கும் எல்லார்க்கும் சமமான சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதன் பிறகு மேன்மையுறுவதும், கீழ்மையிலேயே நின்று விடுவதும் அவரவர் முயற்சிக்கு ஒத்ததாகும். இத்தகைய சீர்மை எதிர்கால இந்தியாவின் தனிச்சிறப்பு ஆகும்.

கொள்கைகளிலும் சமய அனுஷ்டானங்களிலும் எல்லார்க்கும் பூரண சுதந்தரம் உண்டு. தத்துவ விசாரத்திலோ, மதத்தைக் கையாளும் முறையிலோ கட்டுப்பாடுகளும் நிர்ப்பந்தங்களும் ஏற்படா. ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு இடுக்கண் செய்யாதிருக்கும் வரையில் அவன் எத்தகைய கொள்கையை வேண்டுமானாலும் ஆதரித்து வரலாம். நம்நாடு எப்பொழுதுமே தத்துவ ஆராய்ச்சிக்கு இருப்பிடமாக இருந்து வந்திருக்கிறது. ஆஸ்திகர்கள் வழிபட்டு வரும் தேவாலயங்களுக்கு வந்து நாஸ்திகர்கள் தங்களுடைய கொள்கைகளை வேண்டுமானால் புகட்டலாம். அப்படிப் புகட்டுதற்கு ஒருவித ரீதியும் முறைமையும் உண்டு. புகட்டும் போதனை யுக்திக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். மனிதனுடைய முன்னேற்றத்துக்குத் துணைபுரிய வேண்டும். அறிவு வளர்ச்சிக்கு ஆதரவு அமைந்திருத்தல் வேண்டும். இப்பாங்கிலே எக்கொள்கையை வேண்டுமானாலும் இந்நாட்டிலே பரப்பி வரலாம். ஆகையினால்தான் புறமத சகிப்பு என்பதும், சர்வ மத சமரசம் என்பதும் இத்தேசத்தின் ஐதிகத்தில் இயல்பாக அமைந்திருக்கின்றன. அறிவுத் துறையிலும், அருள்நெறித் துறையிலும் இத்தகைய சுதந்தரம் அமைவதாலேயே விதவிதமான பாங்கிலே மக்கள்மேலோர் ஆவதற்குசந்தர்ப்பங்கள் ஏராளமாக வாய்க்கின்றன. எதிர்கால இந்தியாவில் அத்தகைய வாய்ப்பை யாண்டும் காணலாம்.

மாகாணவாரியாக மக்கள் தங்களைப் பிரித்துக் கொள்ளுதல் பொருளற்ற பிரிவினை ஆகும். நம் நாட்

டிலே இமயமலைச் சாரலிலே அமைந்துள்ள தேவால யங்களிலும் தென்கோடிக்கடற்கரையில் அமைந்துள்ள தேவாலயங்களிலும் நாட்டு மக்கள் எல்லாரும் கலந்து வணங்குதற்கு எங்ஙனம் உரிமை இதுகாறும் அமைந் திருக்கிறதோ, அத்தகைய தேவாலயங்களில் அவர்கள் ஆயுட்காலமெல்லாம் வசித்திருப்பதற்கும் எங்ஙனம் உரிமை அமைந்திருக்கிறதோ அதே பாங்கில்தான் நாடெங்கும் நாட்டு மக்கள் எல்லார்க்கும் வசித்திருக்க வசதியளிக்கப்படும். வடநாட்டான் தென்னாட்டுக்கு வரலாகாதென்றோ, தென் நாட்டான் வடநாட்டுக்குப் போகலாகாதென்றோ செயற்கையாகக் கிளப்பிவரும் கிளர்ச்சிகளெல்லாம் இத்தேசத்தின் பண்பை அறிந்த வர்களுடைய போக்கு அன்று. ஒவ்வொரு மாகாண மும் அந்தந்த மாகாணத்து மக்களுக்கே உரியது என் கின்ற குறுகிய நோக்கத்தில் நம் நாடு இதுவரையில் பழகி வந்திருந்தது கிடையாது. பல்லாயிரம் ஆண்டு களாக அத்தகைய குறுகிய நோக்கம் என்கின்ற பாடத்தை நம் நாட்டவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. இனி, அதைப்புகட்டத் துணிவதும் நமது பரந்த ஐதி கத்துக்கு ஒவ்வாது. இந்தியர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாட்டவர்களுக்கும் இங்கே வந்து குடியேறுதற்கு மனமுவந்து நாம் இடம் கொடுக்கவேண்டும். பண் டைக்காலத்தில் வந்த பாரசீகர்களுக்கும் யூதர்களுக்கும் நாம் அப்படி இடம் கொடுத்திருக்கின்றோம். இனி இந் நாட்டுக்கு வருபவர்கள் வெறும் ஜீவனோபாயத்திற் கென்று வரமாட்டார்கள். நமது தேசியப் பண்

பாட்டை தங்களுடைய சொந்த வாழ்க்கையில் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடனே பலர் வருவார்கள். அத்தகையவர்களை அன்புடன் வரவேற்பது நமது கடமையாகும்.

இந்நாட்டில் வசிப்பவர்கள் எல்லோரும் இந்நாட்டின் ஒற்றுமையை வளர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஜன சமுதாயத்தை ஒரே குடும்பமாகக் கருதுவது இதன் நாகரீகம். இத்தகைய நாகரிகத்துக்கு உடன்படுகின்றவர்கள் எல்லாம் இந்நாட்டு மக்கள் ஆவர். ஐரோப்பா, அமெரிக்காபோன்ற மேல்நாடுகளிலிருந்தும் நம் நாட்டுக்கு வரவிரும்பும் பெருமக்கள் எதிர்காலத்தில் பலர் இருப்பார்கள். சுகஜீவனத்தில், வசதியான வாழ்க்கை அமைப்பில் நம் நாடு என்றைக்கும் அவர்களுடைய நாடுகளுக்கு நிகராகாது. ஆயினும் உயர்ந்த மனப்பான்மையும், அமைதியான வாழ்க்கையுமே நமது குறிக்கோள். இந்த லக்ஷியத்தைக் கடைப்பிடித்து வாழ விரும்புபவர்களுக்கு ஏற்ற சூழ்நிலை நமது நாடே ஆகும். ஆகவே ஒரு விதத்தில் புண்ணிய க்ஷேத்திரத்தை நாடிப் போவது போன்று பிற தேசத்தவர்கள் எதிர்காலத்தில் இங்கு வர முற்படுவர். அன்புடன் ஆதரவு கொடுத்து அவர்களை வரவேற்பது நமது பரந்த நோக்கமாகும். மற்றும் நமது எதிர்கால சமுதாயம் எளிய வாழ்க்கையையும் உயர்ந்த எண்ணத்தையுமே அடிப்படையாகக் கொண்டதாகும். அத்தகைய வாழ்க்கையை நாடுபவர்க்கு இங்கு ஆதரவுடன் இடம் அளிக்கப்படும்.

**கல்வித் திட்டம்**

ஒரு நாட்டின் பண்பை அறிதற்கு அந்நாடு முழுதையும் ஒருவர் சுற்றிப்பார்க்க வேண்டியது அவசியமில்லை. அந்நாட்டு மக்களை ஆயத்தப்படுத்தும் சில கல்விச்சாலைகளைச் சென்று பார்த்தால் போதுமானது. பண்டொரு காலத்தில் நமது பண்பின் வளர்ப்பிடங்களாக ஆரண்யங்களிலிருந்த ரிஷிகளால் நிர்மாணிக்கப்பெற்ற சர்வகலாசாலைகள் திகழ்ந்துவந்தன. அதன் பிறகு காசி, காஞ்சி, மதுரைபோன்ற பட்டணங்களில் நமது உயர்ந்த கல்விச்சாலைகள் அமைந்திருந்தன. ஆங்குச் சென்று சிலகாலம் வசித்து வருவதே பலர்க்கு உயர்ந்த பாடங்கள் பல கற்பதற்கு உற்ற உபாயமாயிற்று. இன்றைக்கு நம்நாட்டில் தென்படும் புதியசர்வகலாசாலைகள் நமது தேசியப்பண்பை வளர்ப்பவைகள் அல்ல. ஆங்கிலேயர்கள் தங்கள் காரியத்துக்காக என்று அமைத்த சர்வகலாசாலைகள்தான் எஞ்சியிருக்கின்றன. எழுதப் படிக்கத் தெரிந்தவர்களைப் பெருவாரியாக ஆயத்தப்படுத்துவதே அவைகளின் நோக்கமாயிற்று. இனி அவைகளை யெல்லாம் அடியோடு திருத்தியமைப்பதற்கு நம் நாட்டுப் பேரறிஞர்கள் பலர் முன்வருவார்கள். வெறும் பிரசங்கங்களாலும், கட்டுரைகளாலும், பரீக்ஷைகளாலும் மக்களைப் பெருமக்கள் ஆக்கிவிட முடியாது.

குருகுல முறையில் பண்டைப்பெருமை பாதுகாக்கப்பட்டதுபோன்று எதிர்காலத்திலும் வந்து அமையும். கல்வி புகட்டுபவர்களும் கல்வி கற்பவர்களும்

சேர்ந்து வாழ்ந்திருப்பது அதன் நோக்கமாகும். இன்று நாம் கண்டுவரும் கல்வித் திட்டங்களில் ஏட்டுப்படிப்பு முதன்மை பெற்று வருகின்றது. மற்று குருகுல அமைப்பிலோ, மக்கள் வாழும் வாழ்க்கைக்கு முதன்மை தரப்படுகிறது. நல்வாழ்வுக்கு எடுத்துக் காட்டாயிருப்பவர் ஆசாரியர். அவரிடத்துப் பேரன் பும் இணக்கமும் வைப்பவர் மாணுக்கர். அல்லும் பக லும் அவரோடு தொடர்பு வைப்பதால் பிள்ளைகளின் வாழ்க்கை முறை ஆசாரியரது வாழ்க்கைக்கு ஒத்ததா கிறது. பிறர் வாழ்க்கையைப் பார்த்து அதன்படி தன் னையும் திருத்தியமைப்பது உண்மையான மனவளர்ச்சி யாகிறது. உணவை உண்டு உடல் வளர்வதுபோன்று பிறர் மனதுக்கு ஆட்பட்டு மாணுக்கனுடைய மனது வளர்கிறது. ஆட்கொள்பவருடைய மனது எவ்வளவு பெரியதோ அவ்வளவு பெரியதாகிறது ஆட்படுபவரு டைய மனது. ஆகையாலேதான் ஆட்கொள்பவர் மேலோராகவும் சீலமே வடிவெடுத்தவராகவும் இருந் தாகவேண்டும். அல்லும் பகலும் அத்தகையவருடைய சகவாசத்தால் மாணுக்கனுடைய மனது தூயதாகிறது; மாண்பு அவனுக்கு இயல்பாக வந்து அமைகிறது. தீயைச் சார்ந்த விறகுக்கட்டை தானே தீ மயம் ஆவது போன்று தூய மனமுடைய குருவைச்சார்ந்து வாழும் மாணுக்கனுக்குத் தூயசீலே தானே வந்தமைகிறது. புஸ்தகப் படிப்பைவிடப் பன்மடங்கு பெரியது சான் ரேர் சன்னிதி சார்ந்து வாழ்ந்திருப்பது. ஆதலால் குரு குலவாசம் திரும்பவும் புதுப்பிக்கப்படுவதாகும்.

புதிதாக வந்துள்ள பௌதிக விக்ஞானத்துக்கும் அதில் வேண்டியவாறு இடம் இருக்கும். ஆனால் பௌதிக விக்ஞானம் முழுதும் பௌதிக உலகைப் பற்றியதாகும். உலகத்தினுடைய பெருமைகளையெல்லாம், மர்மங்களையெல்லாம் அறிந்த பின்பும் மனிதன் தன் மனத்தகத்திருக்கும் மாண்பை அறிந்துகொள்ளாது போய்விடுவானாகில் அவன் அத்தகைய பௌதிக உலகக் கல்வியைக் கற்றதனால் ஆகப்போம் பயன்தான் என்ன? குடியிருக்கும் வீட்டைவிட அதில் குடியிருப்போன் சிறந்தவனே யாம். இவ்வுலகம் என்னும் வீட்டிலே மக்களாகிய நாம் குடியிருக்கிறோம். வீட்டை மட்டும் அலங்கரிக்கத் தெரிந்துகொண்டு மக்களை மேன் மக்கள் ஆக்காது விட்டுவிடுவோமானால் அதினின்று கேடுகள் பல உதிக்க ஏதுவாகிறது. அப்படி உதித்து வந்திருக்கின்ற கேடுகள் பலவற்றை இன்று நாம் உலகெங்கும் கண்டுவருகின்றோம். இனி, நாம் அமைக்கும் கலாசாலைகளில் பேராசிரியர்கள் நல்ல ஆசாரியர்களாக அமைவார்கள். பாடம் புகட்டுவதோடு இன்றைக்கு ஆசிரியருடைய வேலை முடிந்துவிடுகிறது. ஆனால் ஆசாரியரோ தமது சொந்த வாழ்வைப் பாடபுத்தகமாக எடுத்துக் காட்டுகிறார். அவர் மாணாக்கர்களுக் கிடையிலே வாழ்ந்துவரும் வாழ்வே மாணாக்கர்களைச் சிறிது சிறிதாகப் பண்படுத்தி வருகிறது. தொழிற்சாலைகளில் யந்திரங்களைப் பூட்டியமைப்பதுபோன்று உயிர்வாழும் மக்களை ஆயத்தப்படுத்திவிட முடியாது. அவர்களைப் பண்படுத்துதற்குப் பண்பட்டுள்ள சான்றோர்க்கே

சாலும். முன்னாளில் மிகமேலாம் பாங்கு படைத்திருந்த முனிவர்கள் மக்களைப் பண்படுத்துவதையே தங்களுடைய குறிக்கோளாகக்கொண்டிருந்தனர். அதே பாங்கில் எதிர்காலக் கல்லூரி ஆசிரியர்கள் சீரியவாழ்வு வாழும் பெருமக்களாகவந்து அமைவார்கள். போகத்தையும், சுக ஜீவனத்தையும் குறிக்கோளாகக்கொண்டிருப்பவர்கள் அத்தகைய செயற்கரிய செயலைச் செய்யமுடியாது. அடக்கமும், ஒழுக்கமும், எளிமையும், சீரியவாழ்வும் படைத்திருப்பவர்களே ஆசாரியர்கள் ஆவதற்குத் தகுந்தவர்கள். இக்காலத்தில் வேறு தொழில் கிடையாவிட்டால் பள்ளிக்கூடத்து உபாத்தியாயராகவாவது போகலாம் என்னும் புல்லிய பாங்கில் மேல்நாட்டுக்கல்வி நம்மைக் கொண்டுவந்து விட்டது. இனி அமையப்போம் கல்வி முறையில் முனிவர்போன்று மேன்மை அடையப்பெற்றவரே குலபதிகளாகக் கலாசாலைகளில் வந்து அமைவார்கள்.

**மாணக்கர்கள்**

மக்கள் மனப்பான்மையில் கீழ்மையுறுமளவு நாடு கீழ்மையுறுகிறது. மக்கள் மனப்பான்மையில் மேலோங்குமளவு நாடு மேலோங்குகிறது. நாடு என்னும் சொல் மக்களையே சிறப்பாகக் குறிக்கிறது. சென்ற சில நூற்றாண்டுகளில் நம் நாட்டுமக்கள் பெற்ற கல்வியும் வாழ்ந்த வாழ்வும் அவரவர் தனிநலத்தைக் குறித்தனவாகும். பின்பு தனக்கென வாழாது சமுதாயத்துக்கென வாழ்கின்றவனே மேலோன் ஆகின்றான். நாடு ஒன்று தன் நலத்தைமட்டும் கருத்தில் வைத்துக்

கொள்ளாது உலக முழுதின் நன்மையைக் கருத்தில் வைக்குமளவு அது பாருக்கு நல்ல நாடு ஆகிறது. நம் மாணுக்கர்கள் இனிப்பெறும் பயிற்சியெல்லாம் தங்களுடைய சொந்த சுக ஜீவனத்துக்காகவல்ல; சுயநலத்துக்காகவும் அல்ல; தாங்கள் இன்புற்றிருப் பதைக் குறிக்கோளாகக் கொண்டிருப்பதுமல்ல. வருங் காலப்பிரஜைகள் நல்வாழ்வே வடிவெடுத்தவர்களா யிருந்து அத்தகைய வாழ்வைப் பொதுநலத்துக்கு ஒப்ப டைப்பவர்கள் ஆவார்கள். இந்த லக்ஷியத்தில் ஊறிய வர்களாய் எதிர்கால மாணவர்களும் மாணவிகளும் பயிற்சிபெறுவார்கள்.

## பொருளாதாரம்

அருளைச் சிறப்பாக நாடுவது நமது தேசிய லக்ஷி யம். ஆனுல் பொருளைப்பற்றிய எண்ணத்தை விட்டு விடுவது என்பது அதன் கருத்து அல்ல. அருளையும் பொருளையும் சேர்ந்து நாடுபவரே இகபரம் இரண்டுக் கும் தகுதியுடையவர் ஆவர். நாட்டின் செல்வம் யாரோ சிலர் கையில் ஏராளமாகக் குவிவது சிறந்த பொருளாதாரத் திட்டமாகாது. பொது மக்கள் எல்லார்க்கும் ஆரோக்கியமான, நல்வாழ்வுக்கேற்ற அளவு பண்டங்களும் ஏனைய வசதிகளும் எளிதில் அகப்படும்படியான பொருளாதாரத் திட்டம் எதிர் கால இந்தியாவுக்குரியதாகும். தனவான்கள் ஏராள மாக தனத்தைச் சேகரிப்பது ஜன சமூகத்தின் நன்மைக் கென்பதை அவர்கள் மறவாதிருப்பார்கள். பணத் துக்கு அவர்கள் பெரிதும் பொறுப்பாளிகளாக இருப்

பார்களே ஒழிய, இன்றைக்கு இருப்பது போன்று உரிமையாளர்களாக இருக்கமாட்டார்கள். பெருமித மான வாழ்வு எம்மனிதனுக்கும் உகந்ததாகாது. பெரு மித வாழ்வே மனிதனைக் கீழ்மைப்படுத்துகிறது. கேடு கள் பலவற்றை அது சமுதாயத்தில் பரப்புகிறது. நல்ல உணவு, தூய உடை, வசதியான வீடு ஆகியவை கள் நாட்டு மக்கள் எல்லார்க்கும் உரியவைகள் ஆகும். வாழ்க்கை முறையில் ஏழை என்றோ பணக்காரன் என்றோ வேற்றுமைக்கு இடம் கொடுக்காத எளிய வாழ்வே எல்லார்க்கும் பொதுவானதாகும்.

### அரசாங்கம்

நல்ல அரசாங்கம் எது என்பதைப் பற்றிய கேள்வி யைப் பல நாடுகளில் பலபேர் ஆராய்ச்சி பண்ணியிருக் கின்றனர். பலநாடுகள் பலவிதமான அரசாங்க முறை களை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கின்றன. அவை களிலுள்ள நலம் கேடுகளையும் அறிஞர் ஆராய்ந்து பார்த்திருக்கின்றனர். சிறந்த ஆட்சி முறையை இந்தி யாவும் நிர்மாணித்திருக்கிறது. பண்டு ஒருகாலத்தில் சிறந்த ஆட்சி முறையை இந்நாடு கையாண்டிருந்ததும் உண்டு. மேலான ஆட்சி முறையைப் பொதுவாக ராம ராஜ்யம் என்று சொல்லுவது வழக்கம். அது முற்றும் முடியரசுமல்ல, முற்றுமே குடியரசுமல்ல. முடியையும் குடியையும் சமப்படுத்துவதே அதன் நோக்கமாய் இருந்து வந்தது. எதிர்கால இந்தியா இனி நெடு நாளைக்கு முடியரசு என்பதை ஏற்காது. நல்ல குடியரசு சிறந்த முடியரசுக்குச் சமானம் என்பதை நிரூபித்துக்

காட்டும். அப்படி அதை நிரூபிப்பதற்கு சமுதாயத்தின் பொறுப்பு மிகமிகப் பெரியதாகிறது. 'எல்லாரும் இந் நாட்டு மன்னர்' என்னும் கோட்பாடு பரிகாசத்துக் குரியதாகப் போய்விடுவதன்று. ஒவ்வொரு மனிதனும் தன் பொறுப்பை உணர்ந்து அதற்கேற்ற பிரகாரம் வாழவேண்டும் என்பதே அதன் நோக்கமாகும். சட்ட திட்டங்கள் குறைந்திருப்பது நல்ல ஆட்சிக்கு அறிகுறி யாகும். ஆரோக்கியமாக வாழுகின்ற மனிதன் ஒருவ னுக்கு எப்படி பத்தியம் என்பது ஒன்று வேண்டிய தில்லையோ அங்ஙனம் நல்வாழ்வே வடிவெடுத்திருக் கின்ற சமுதாயம் ஒன்றுக்கு அரசாங்கச் சட்ட திட்டங் கள் அமுலுக்கு வரவேண்டியது அவசியமில்லை. ஒவ் வொரு மனிதனும் சட்ட திட்டமே வடிவெடுத்தவனா கத் தனது வாழ்வைச் செலுத்துவான். அத்தகைய நல்காலம் நமக்கு அமைதற்பொருட்டு நாட்டு மக்கள் எல்லாருமே தனி நலம் என்பதை மறந்துவிட்டு சமு தாய நலம் என்னும் எண்ணத்தில் ஊறி வாழ்ந்து வரு வார்கள்.

கிருத யுகத்தைப் பற்றிய வர்ணனை ஒன்றை நாம் புராணங்களில் படிக்கின்றோம். அதன் கோட்பாட்டை நாம் வேறு ஒரு பாங்கில் குறித்துள்ளோம். கிருத யுகத் தில் மக்கள் எல்லோரும் அந்தணர் ஆய்விடுகின்றனர். அப்பொழுது அரசர் கிடையாது. வைசியர் என்பாரும் சூத்திரர் என்பாரும் இல்லை என்பது அதன் கோட்பாடு ஆகும். எல்லா மக்களிடத்தும் ஒழுக்கமும் அன்பும் அருளும் எளிய வாழ்வும் நிறைந்திருக்கிறது என்பது

அதன் கருத்து. அப்படி இருக்கிற மக்களைச் சட்ட திட்டம் செலுத்தி அரசாங்கத்தார் என்பார் ஆள வேண்டியது அவசியமில்லை. வாழ்க்கை முறை தானு கவே ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டு போகிறது. சட்ட திட்டத்தின் தேவை குறையுமளவு ஆட்சிமுறை சிறந்ததாகிறது என்பதன் தாத்பரியம் இதுவேயாம். மக்களே அரசாங்கம், அரசாங்கமே மக்கள் என்று இயம்பும்படி ஆளுபவரும் ஆளப்பெறுபவரும் ஒன்றித் துப் போய் விடுகின்றனர். ஒரு விதத்தில் அத்தகைய கிருத யுகத்தைத் திரும்பவும் ஒரு முறை அமைப்பது நமது குறிக்கோள் ஆகும்.

**ராணுவம்**

ஒரு நாட்டுக்குப்படை ஒன்று இருக்கவேண்டியத வசியமா அல்லவா என்பதைப்பற்றிப் பலபேர் பலவித மாக அபிப்பிராயப்படுகின்றனர். அஹிம்சையையே லக்ஷியமாகக் கொண்டுள்ள நாடு ஒன்று படையைத் திரட்டி வைத்திருக்கலாகாது; பிறரைப் பற்றிச்சந்தே கப்படுபவர்களே படைதிரட்டி வைக்கின்றனர் என் பது ஒரு கூட்டத்தார் கொள்கை. பிற நாடுகளை அடக்கியாண்டு சாம்ராஜ்யத்தையும் பெருக்க விரும்புப வர்கள் ராணுவத்தைப் பலப்படுத்திக்கொண்டு போகின்றனர் என்கின்றனர் மற்றொரு சாரார். ஏதோ சிற்சில காலங்களில் படை ஒன்றும் இல்லாது நம் நாடு சிறப்புற்று வாழ்ந்திருந்தது. அதே பாங்கில் எதிர் காலத்திலும் படை ஒன்றுமில்லாது நாம் வாழ்ந்திருக்க வேண்டுமா என்பது பெரியதொரு பிரச்னையாகின்றது.

ராணுவப் பயிற்சியைப்பற்றியும் தவறுதலான அபிப்பிராயங்கள் பல உலவி வருகின்றன. ராணுவப் பயிற்சி பெறுகின்றவர்கள் போர்த்திமிர் பிடித்தவர்கள் ஆய்விடுகிறார்கள் என்பது சிலர் கொள்கை. ஆனால் உண்மையான வீரன் ஒருவன் தனது பராக்கிரமத்தை ஒருநாளும் முறைதவறிக் கையாளுவதில்லை. அதற்குச் சான்றாக கானகத்தில் சிங்கத்தையும் சிறுத்தையையும் எடுத்துக்கொள்ளலாம். சிறுத்தை அற்பத்தனமானது. சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுதெல்லாம் அது சிற்றுயிர்களை வதைக்கும். ஆனால் சிங்கமோ தன் உணவின் பொருட்டல்லாது எவ்வுயிர்க்கும் தீங்கு விளைவிக்காது. உண்மையான பலம் எங்கிருக்கின்றதோ ஆங்கு பராக்கிரமமும், க்ஷமையும், பொறையும், பொறுப்பும் சேர்ந்தே அமைந்திருக்கும். நல்ல ராணுவப் பயிற்சியினின்று வரும் சிறப்பு இதுவேயாம். இந்திய மக்கள் எல்லார்க்கும் இனிவரும் கல்வித்திட்டத்தில் ராணுவப் பயிற்சி என்பது இன்றியமையாததாகும். இப்பொழுது உள்ள மக்கள் வலிவு அற்றவர்களாக, ஒழுங்காக நிற்கவோ, நடக்கவோ, பேசவோ தெரியாதவர்களாக இருக்கிறார்கள். சரியான உடற்பயிற்சி யின்மையே அதற்குப்பெரிதும் காரணமாகும். உறுதியான உடலைப் பெறுபவர் ஒழுங்குப்பாடான உள்ளத்தையும் பெறுவது திண்ணம். ஆக, மக்களது திட்பத்தை முன்னிட்டு எல்லார்க்கும் நல்ல ராணுவப் பயிற்சி தருவது இன்றியமையாததாகிறது.

ஒரு நாட்டில் படைவலிவு பெருத்துப்போய்விட்டால் அது பிறநாடுகள்மீது வீண்வம்புக்குப்போகும் என்று எண்ணுகின்றவர்களும் உளர். அத்தகைய எண்ணத்தில் ஓரளவு உண்மையுண்டு. சிறுத்தை போன்ற பாங்குடையவர்களது போக்கு அது. ஆனால் சிங்கம்போன்ற பாங்குடையவர்களாக நம் நாட்டு மக்கள் திருந்தியமைந்தாகவேண்டும். பலவானே ஆதரிக்கவேண்டியவர்களை ஆதரிக்க வல்லவனாகிறான்; தண்டனைக்குரியவர்களை தண்டிக்கவும் அவனுக்கே சாத்தியமாகிறது. செங்கோல் என்பதன் பொருள் அதுவேயாம். உலகெங்கும் எல்லாமக்களும் உத்தமர்களாகவே இருப்பார்கள் என்பது உண்மையன்று. விலங்குபோன்று சிற்றியல்புடையாரையும் எக்காலத்திலும் உலகில் காணலாம். பரந்த பேரியல்புடையாரையும் இதே உலகில் காணலாம். இருதரத்தாரும் சற்று ஏறத்தாழ யாண்டும் உலகத்தில் இருந்துவருகிறார்கள். போர்வீரனது பராக்கிரமத்துக்கு அஞ்சியே சிலர் கொடுமையில் துணிந்துசெல்வதில்லை. அத்தகையவர்களை நெறியிலே நிலைநிறுத்துதற்பொருட்டு நாடு ஒன்றுக்கு என்றைக்கும் நல்ல ராணுவம் தேவையானதாகிறது. எதிர்கால இந்தியாவில் அத்தகைய நல்ல ராணுவம் அமைந்திருக்கும்.

இக்கோட்பாட்டை சுருங்கச்சொல்லின் நம் நாட்டின் ராணுவம் ராமபாணத்துக்குச் சமானமானதாக இருக்கும். ராமன் நல்லராணுவப்பயிற்சியைப்பெற்றான். விதவிதமான அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகிக்கக்

கற்றுக்கொண்டான். அவன்தொடுத்த அம்பு ஒரு பொழுதாவது வீண் போனதுகிடையாது. அவன் அறமும் ஆற்றலுமே வடிவெடுத்திருந்ததுதான் அதற்குக்காரணமாயிற்று. நல்லாரைக் காப்பதற்கும் கொடியவரைத் தண்டிப்பதற்கும் ராமபாணம் உதவியது. எதிர்கால இந்தியா அங்ஙனம் அமையும். இக் காலத்தவர்கள் கண்டறிந்துள்ள நானாவித யுத்தத் தளவாடங்களைக் கையாள அது கற்றுக்கொள்ளும். மற்றநாடுகளுக்கு இரண்டாந்தரத்தில் ஒருநாளும் அது நிற்காது. பின்பு அத்தகைய சிறந்த ஆயுதங்களும் மேலாம் பயிற்சியும் உயர்ந்த லக்ஷியத்துக்கென்றே பயன்படுத்தப்படுவனவாகும். உலக மக்களுக்கிடையில் அக்கிரமம் தலையெடுக்க ஒட்டாது தடுப்பதற்கும் நலம் தழைத்தோங்குதற்கும் இந்திய ராணுவம் பணியாற்றி வரும்.

இன்றைய நிலைமையில் எந்த நாடும் தனித்திருக்கவும் மறைந்திருக்கவும் முயன்றாலும் முடியாது. ஏதேனும் ஒரு விதத்தில் மற்ற நாடுகளோடு தொடர்வு வைத்தே ஆகவேண்டும். சூழ்நிலை நம்மை அங்ஙனம் தூண்டுகிறது. பிறநாடுகளுக்குச் செல்லாது நம் நாட்டிலேயே இருக்க முன்பொரு காலத்தில் நம்மவர் முயன்றது போன்று இனிச் செய்யமாட்டோம். பிறரைத் தோற்கடித்து அவர்களுடைய பொருளைப் பறிப்பதற்கென்றே வெளிநாடுகளுக்குச் சென்ற வேறு பல சமுதாயங்கள் செய்த அடாத செயலையும் நாம் செய்யத் துணியோம். உலக மக்கள் எல்லார்க்கும் நலம் தரும்

நல்லிணக்கத்தை உண்டுபண்ணுதற்கே எதிர்கால இந்தியா முழுமனதுடன் முயன்று வரும்.

ஆத்மீக வாழ்வை உலகுக்கு வேண்டியவாறு நம் நாடு வாரியெடுத்துக் கொடுக்கும். கொடைகளுள் அது உயர்ந்த கொடை. அச்செயலைச் செய்து சாதிக்குமளவு இந்தியாவானது மேலும் மேலும் உச்ச நிலைக்குப் போய்க் கொண்டிருக்கும். அக்கிரமசாலிகள்மீது இந்தியா ராணுவ நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். நேர்மையாக வாழ்பவர்களோடு முறையான வாணிகத்தையும் இந்தியா செய்து வரும். இங்ஙனம் உலக நன்மைக்கே திலகமாகத் திகழும் எதிர்கால இந்தியா விரைந்து உருவெடுத்து வந்துகொண்டிருக்கிறது. நம்மனோர் இப்பொறுப்பை நிறைவேற்றும் நன்மக்கள் ஆவார்களாக.

# ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

## இயற்றிய நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் பகவத்கீதை-விரிவுரையுடன்-பிரசார விலை | | ரூ. | 5-50 |
| திருவாசகம்-விரிவுரையுடன்-பிரசார விலை | | ... | 5-50 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ | | | |
| பிரசாரவிலை-சாதா பைண்டு | | ... | 1-50 |
| பிரசார விலை - காலிகோ பைண்டு | | ... | 2-50 |
| தினசரி தியானம் (பாக்கெட் சைஸ்) பிரசார விலை | | ... | 1-00 |
| ஞானயோக விளக்கம் | (காலிகோ பைண்டு) | ... | 6-00 |
| ராஜயோக விளக்கம் | ஷை | ... | 6-00 |
| கர்மயோக விளக்கம் | ஷை | ... | 5-00 |
| பரமஹம்ஸரின் பெருமை | ஷை | ... | 4-50 |
| தினசரி தியானம் | ஷை | ... | 4-50 |
| பக்தியோக விளக்கம் | ஷை | ... | 4-00 |
| கல்வி | ஷை | ... | 3-00 |
| ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம் | | ... | 2-50 |
| கடவுளின் வடிவங்கள் | | ... | 2-00 |
| விவேகானந்த உபநிஷதம் | | ... | 2-00 |
| எதிர்கால இந்தியா | | ... | 1-50 |
| அனுஷ்டான வேதாந்தம் | | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய பரிபூரணானந்தம்(விரிவுரை) | | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய சின்மயானந்த குரு | ஷை | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய மௌனகுரு வணக்கம் | ஷை | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய கருணாகரக் கடவுள் | ஷை | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய ஆனந்தமான பரம் | ஷை | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய சுகவாரி | ஷை | ... | 1-50 |
| தாயுமானவர் இயற்றிய எங்கும் நிறைகின்ற பொருள் | | ... | 1-50 |
| பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் பாகம்1 | | ... | 1-50 |
| பரமஹம்ஸர் புகட்டிய பெருநெறி விளக்கம் பாகம்2 | | ... | 1-50 |
| சந்தேகம் தெளிதல் பாகம் 1 | | ... | 1-50 |
| சந்தேகம் தெளிதல் பாகம் 2 | | ... | 1-50 |
| ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம் | | ... | 1-25 |
| திருக்கயிலாயகிரி யாத்திரை | | ... | 1-13 |
| உலகுக்கு உயிர்கொடுத்த உத்தமன் | | ... | 1-00 |
| கண்ணன் என்னும் கடவுள் | | ... | 1-00 |
| சகோதரி நிவேதிதை | | ... | 1-00 |
| விரத வீரர் பீஷ்மர் | (நாடகம்) | ... | 1-00 |
| ஹரிச்சந்திரன் | (நாடகம்) | ... | 1-00 |

| | | |
|---|---|---|
| அறம் வளர்த்த நம்பி | ... | 0-95 |
| *கயிலைமலை யாத்திரை (மாணவர் பதிப்பு) | ... | 0-95 |
| உலகை உய்வித்த உத்தமன் | ... | 0-95 |
| தேவரகசியம் (முதலிய கதைகள்) | ... | 0-90 |
| சுவாமி விவேகானந்தர் | ... | 0-90 |
| தானவீரன் கர்ணன் (நாடகம்) | ... | 0-80 |
| பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்) | ... | 0-80 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் | ... | 0-75 |
| சந்நியாசி | ... | 0-75 |
| தவப் புதல்வர்கள் (நாடகம்) | ... | 0-65 |
| பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் (நாடகம்) | ... | 0-65 |
| பிரஹ்லாதன் (நாடகம்) | ... | 0-65 |
| பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்) | ... | 0-50 |
| நன்மக்களைப் பெறுதல் | ... | 0-50 |
| தாயுமானவர் இயற்றிய பரசிவ வணக்கம்(விரிவுரை) | ... | 0-50 |
| பஜனைப் பாடல்கள் | ... | 0-50 |
| சைவன் யார்? | ... | 0-45 |
| செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா? | ... | 0-45 |
| *ஸ்ரீமத் பகவத்கீதை முன்னுரை | ... | 0-40 |
| *ஆதம சக்தி | ... | 0-40 |
| இராவண தத்துவம் | ... | 0-40 |
| மார்க்கண்டேயன் (நாடகம்) | ... | 0-35 |
| தபோபலன் (நாடகம்) | ... | 0-35 |
| *மனிதனது நிஜசொரூபம் | ... | 0-25 |
| *சக்தி தத்துவம் | ... | 0-25 |
| *ஆலய வழிபாடு | ... | 0-25 |
| *ஈசன் எங்கும் நிறைந்துள்ளான் | ... | 0-20 |
| *சூரிய நாராயணன் | ... | 0-20 |
| *சிவதத்துவம் | ... | 0-20 |
| இந்து மதமும் கிறிஸ்துவ மதமும் | ... | 0-20 |
| வர்ணாச்ரம தர்மம் | ... | 0-15 |
| *கணபதி | ... | 0-15 |
| *முருகக் கடவுள் | ... | 0-15 |
| *விஷ்ணு தத்துவம் | ... | 0-15 |
| திருக்குறளில் கடவுள் வாழ்த்து | ... | 0-15 |
| அருள் விருந்து 1 முதல் 13 வரை (ஒவ்வொன்றும்) | ... | 0-15 |
| *அன்னை சாரதா தேவியார் வரலாறு | ... | 0-15 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண ஸ்தோத்ரம் | ... | 0-10 |
| The Bhagavad Gita (Postage Rs. 2-00) | ... | 6-00 |

| | |
|---|---|
| Ramakrishna Lives Vedanta | ... 4-50 |
| The Indian National Education | ... 4-50 |
| Sri Vishnu Sahasranama Stotram (By Swami Vimalananda) | ... 2-00 |
| *Introducing the Gita | ... 1-00 |
| *Key to Higher Life | ... 0-50 |
| *The Student | ... 0-45 |
| *The School | ... 0-40 |
| *The Teacher | ... 0-30 |

*எல்லாப் புத்தகங்களையும் வாங்க விரும்புபவர்கள் *இக்குறியிட்ட புத்தகங்களை வாங்கத் தேவையில்லை. ஏனென்றால் இவை ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன. (எல்லா வெளியீடுகளுக்கும், வெளிநாடுகளுக்கு தபாற் செலவு தனி.)*

பிரசார விலை வெளியீடுகளுக்குத் தபால் செலவு தனி. மற்ற புத்தகங்கள் நான்கு ரூபாய்க்குக் குறைந்த ஆர்டர்களுக்கு புத்தகங்களின் விலையுடன் ரிஜிஸ்தர் தபாற்செலவு ரூ. 0-70 சேர்த்தனுப்ப வேண்டும். விற்பனை நிலையங்களில் எவ்வித செலவுமின்றி எல்லாப் புத்தகங்களும் கிடைக்கும்.

*ஸ்ரீமத் பகவத்கீதை :-* தேவநாகரியிலும் தமிழிலும் மூலம்–பதவுரை-பொழிப்புரை-விளக்கமான விரிவுரை ஆகியவற்றுடன் ஏற்ற இடங்களில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசங்களிலிருந்து மேற்கோள்களும் தரப்பெற்றிருக்கின்றன. டெம்மி 1க்கு 8ல் 1004 பக்கங்களை உடையது. பிளாஸ்டிக் காலிகோ பைண்டு: ரூ. 15-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தைக்கொண்டு மிக மிகக் குறைந்த விலை ரூ. 5-50க்கு விற்கப்படுகிறது. தபாற்செலவு ரூ. 2-00.

*திருவாசகம் :-* பதவுரை – கருத்துரை – விளக்கமான விரிவுரையுடன் ஏற்ற இடங்களில் உபநிஷத் மந்த்ரங்களும் இணைக்கப்பெற்றிருக்கின்றன. எல்லோரும் அறிந்துகொள்ளக்கூடிய இனிய தமிழ்நடை. டெம்மி 1க்கு 8ல் 960 பக்கங்களையுடையது. உயர்ந்த தடிப்பான இந்தியன் பிரிண்டிங் கிளேஸ் காகிதம் – சுத்தமான பதிப்பு – அழகிய பிளாஸ்டிக் காலிகோ பைண்டு. ரூ. 12-00 மதிப்புள்ள இப்புத்தகம் பிரசார நோக்கத்தைக்கொண்டு மிக மிகக் குறைந்த விலை ரூ. 5-50க்கு விற்கப்படுகிறது. தபாற்செலவு ரூ. 2-00.

THE BHAGAVAD GITA—Original Stanzas—Split up Reading–Transliteration-Word for Word Translation – A Lucid English Rendering and Commentary–Demy 8Vo-1008 Pages–Calico Bound-Nominal Price Rs. 6-00 (Postage Rs. 2-00) Please contact your local booksellers to save postage.

*ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரீ :-* ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தம் பக்தர்களுக்கு நிகழ்த்திய சம்பாஷணைகளினின்று பொறுக்கி எடுத்த 1426 உபதேசங்களைக் கொண்டது இப்புத்தகம். கிரௌன் சைஸ் 424 பக்கங்கள். அதிகம் பொருள் வசதி இல்லாதவரும் இதை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் ரூ. 4.00 விலையுள்ள இப்புத்தகம் ரூ. 1-50க்கு தரப்பெறுகிறது. தபாற்செலவு ரூ. 1-05. காலிகோ பைண்டு புத்தகத்திற்கு விலை ரூ- 2-50 ; தபாற்செலவு ரூ. 1-20.

*தினசரி தியானம் :-* ரூ. 4.50 விலையுள்ள புத்தகத்தை அதன் பாதி அளவான பாக்கெட் சைஸ் புத்தகமாகச் செய்து யாவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் பிரசார விலையில் வெளியிடப் பெற்றுள்ளது. 368 பக்கங்கள் ; பிளாஸ்டிக் காலிகோ பைண்டு. விலை ரூ. 1-00; தபாற் செலவு ரூ. 0-90.

மேற்கண்ட பிரசார விலை வெளியீடுகளை நேரடியாக எங்களிடமிருந்து வரவழைக்க விரும்பும் அன்பர்கள் முன்பணம் அனுப்பி ரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொண்டால் செலவு குறையும். அதிகம் பிரதிகளை வரவழைப்பவர்களுக்குத் தக்க சலுகைகள் காட்டப்பெறும். பார்ஸல் கட்டணத்திலும் அனுகூலமுண்டு. ஆதலால் பிரசார விலை பதிப்புகளை கூடுதலான அளவுக்கு வரவழைத்துத் தாங்களும் தங்கள் நண்பர்களுமாகப் பகிர்ந்துகொண்டால் குறைந்த செலவில் அல்லது செலவில்லாமல் புத்தகங்களைப் பெறுவதுடன் எங்கள் ஆத்மீகப் பிரசார கைங்கரியத்தில் பங்குகொண்டவர்களும் ஆவீர்கள்.

## *தபோவனப் பிரசுராலயம்*

*திருப்பராய்த்துறை போஸ்ட் :: திருச்சி ஜில்லா*

## தர்ம சக்கரம்

*ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத் திங்கள் வெளியீடு*

**ஆசிரியர் சுவாமி நித்தியானந்தர்**

***1952 ஜனவரி முதல் வெளிவந்து கொண்டுள்ளது***

| | ஆண்டு சந்தா | தனி இதழ் |
|---|---|---|
| உள்நாடு | ரூ. 4-00 | 45 பைசா |
| வெளிநாடு | ரூ. 7-00 | 70 பைசா |

*தபோவன அச்சகம், திருப்பராய்த்துறை*

தபோவனத் தொடர் 21

प्रज्ञानं ब्रह्म

தபோவனப் பிரசுராலயம்
திருப்பராய்த்துறை போஸ்ட்
திருச்சி ஜில்லா

விலை ரூ. 1-50